TDRC NO 98.

RR No 173.3.1907.

[illegible]

[illegible]

R1
N07
11.1194

117174.

T.D.R.C.No: 98
RR No 173 / III-1907
OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 22 AUG 1907 MADRAS.
173 / 307
173 / 77

# தருக்க விளக்கம்

DIRECTOR OF PUBLIC INSTRUCTION 24 FEB 1908 MADRAS.

சே. சோமசுந்தரப் பிள்ளை,
திருமயிலை.

[Registered Copyright.]

(76)

மதிவனப்புச்சேய் பிரசுரம்—க.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 AUG 1907
MADRAS.

# தருக்க விளக்கம்

சே. சோமசுந்தரப் பிள்ளை,
திருமயிலை.

RI
N07

உ

கணபதிதுணை

# முகவுரை

சிறப்புப்பொருந்தி விளங்காநின்ற கயிலையங் கிரியின்கண் சிவபெருமானால் உமாதேவியார்க்குபதேசிக்கப்பட்ட தெய்வமொழி யிரண்டனுள், ஒன்றாய் அநாதியாய் ஓர்தனி முழுமுதன்மொழி யாய் உயிர்கள் தமக்குரிய உறுதி நான்கினையும் எளிதிற் பெற்றுய் யத்தரவல்லதாய் நின்று நிலவுவது தெய்வச் செந்தமிழ் என்பது.

அரியபெரிய தமிழென்னுந் தாயினைத் தளர்வுறாநின்று விளங் குமாறு பாதுகாத்தோம்பல் தமிழறி நன்மக்கள் அனைவர்க்கு நீங் கிறனில்லாக் கடனாம். அவருள்ளும் உலகின்கண் இன்னதொழி றில் தாம் செய்யற்பால இன்னதென இனிதுணரவல்ல. கடனறி காட்சிவல்லோர் தமிழினைப் பாதுகாத்தோம்பி அதுபரவி நின்று பயன்பட்டு நிலவுமாறு தம்மாலியன்றதைச் செய்ய முன்னின்று முயலல்வேண்டும் என்பது அவர்தாமே தெரிந்துகொளத் தக்க தாகலின் அன்னோர் அதன்கட்பராமுகஞ் செயற்பாலரல்லர். செய் வதுண்டெனின் தமிழிற்பிறந்து, வளர்ந்து, தமிழிற் பயன்கொண்டு வாழ்ந்தின்புறும் நன்றியை மறக்கவொண்ணா அவர் கருதிக்கழகன் மைகண்டு வருந்தி இன்றமிழ் எழுந்தோங்கி நின்று நிலவுமாறு செய்தருள எல்லாம் வல்ல முழுமுதற்பொருளைத் தாழ்ந் திறைஞ்சி வேண்டற்பாலதே செய்யத்தக்கதாம்.

இவ்வுலகின்கட் பெறுதற்கரிய பெருமையும் அறிதற்கரிய அவ்வியல்புமுடைய மக்கட்பிறப்பைப் பெற்றவிடத்தும் உயர்ந்தோரான் மக்கள் எனப்பிரித்துச் சுட்டப்படுஞ் சிறப்பிற்கேதுவாகிய கல்வி, அறிவு, ஒழுக்கம் இலராயிற் பிறந்தும் பிறவாதாரேயாவர். ஆகலின் கல்வியிற் பயின்று புலமை நிரப்பவேண்டுங் கடனறிகாட்சியோர்க்குச் சொன்னூலாகிய இலக்கணம் பொருணூலாகிய தருக்கம் என்னுமிரண்டும் இன்றியமையாச் சிறப்பினவாய சாதனமென்பதூஉம் அவற்றுள்ளும் சொல்லினுஞ் சிறந்தது பொருளென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலினானும் தன்மொழியினர்க்கேயல்லது ஏனையர்க்குப்பயப்படாத இலக்கணம்போலாது எக்காலத்து எந்நாட்டு எம்மொழியினர்க்கும் ஒப்பப்பயன்படுவதாகலினானும் இலக்கணத்தினும் சிறப்புடைத்துத் தருக்கமென்பதூஉம் யாவர்க்கும் எளிதிற் புலப்பட விளங்குங் கடைதவிர் துணிவாமெனவுணர்க.

அன்றியும் இந்நூலினிறுதிக்கட் கூறப்படுமாற்றான் மக்கட்குரிய பயன் நான்கனுட் சிறந்த வீடுபேற்றிற்கும் தருக்கநூல் சாதனமென்பது இனிதுபெறப்படுவதோடு "எண்ணெழுத்திகழேல்" "எண்ணும் எழுத்துங் கண்ணெனத்தகும்", "எண்ணென்பவேனையெழுத்தென்ப விவ்விரண்டுங் கண்ணென்ப வாழுமுயிர்க்கு", "எண்ணாகி யெழுத்துமாகி", "ஆற்றினளவறிந்து கற்கவவையஞ் சாமாற்றங் கொடுத்தற்பொருட்டு" என்றற்றொடக்கத்துத் தீஞ்செந்தமிழின் தெய்வச்சுருதியானும் பெறப்படுதலின் தருக்கநூற்சிறப்பினை அறிவுடையார் தாமே தெரிந்துகொளவிட்டு விடுவதன்றி விரித்துரைக்கப்புகின், ஏ! ஏ! இவன்றிறம் என்னே என நகைவிளைத்தற்கேதுவாகலின் இம்மட்டினின்று அமைவுறுதலே நன்று. எண்ணெனினும் தருக்கமெனினும் அளவையெனினும் ஒக்கும்.



பலவளமிருந்த பாண்டிநாட்டின்கட் சங்கமிருந்து தமிழாராய்ந்து தம்முயிரினும் இனிதெனக்கொண்டு தளர்வறத்தாங்கி வளமிகவோம்பி வளர்த்த நந்தமக்குளமகிழ்ந் துதவியருளிய அருந்தவச்செல்வராகிய நம்பெருந்தகை முதியோர் தருக்கநூற்சிறப்பு இத்துணைத்தென்பன இனிதுணராரல்லராகலான் தருக்கநூல் ஒன்று எவ்வாற்றானும் இயற்றப்பட்டு அக்காலத்தேனும் இருந்திருத்தல் வேண்டுமென்பது மறுத்துரையாடற்பால தொன்றன்று.

இனி இக்காலத்துச் சிவஞானச் செல்வராய் அவதரித்திருந்த சிவஞான முனிவர் செந்தமிழின் மொழிபெயர்த்தருளிய தருக்கசங்கிரக தீபிகையிற் கற்றோரும் மற்றோரும் எளிதெனக்கண்டு விரும்பிப் பயின்று பயன்பெறற்பொருட்டுச் செந்தமிழ்க்கோர் சிறப்படை அங்கமாய் ஓர் கருவிநூலாய் நின்று நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவனருளை முன்னிட்டுச் செந்தமிழ் நான்முறைமைக்கேற்பச் சங்கிரகத்தின் மேலே சூத்திரமும் அதன்கீழே வேண்டுமிடத்து இயன்றமட்டில் விளக்கமும் இயற்றப்பெற்று அளவியல் என்றும் தருக்கவிளக்கம் எனப்பெயர்வாய்ந்து விளங்குவதாயுளது இந்நூல் என்க.

# ஸ்ரீசிவஞான யோகிகள் வரலாறு.

---

**தரவு கொச்சகக் கலிப்பா.**

பூமணக்கும் பொழின்மணக்கும் பொழிற்கெழில்கூர் தருமுகமாய்த், தூமணக்கு மொருபொருளைத் துறைப் புனல்பாய் வளந்தருவாய், நாமணக்கும் புகழ்படைத்து நறு மணக்கும் புலமணக்குந், தேமணக்குந் தமிழ்மணக்கு மத ன்பாண்டித் திருநாட்டில். (௧)

மருந்துநிகர் மொழிமடவார் மைந்தரொடு மாட்டயரப், பொருந்துவளம் பலசெறியும் பூஞ்சோலை புடைப்புடைத்தா ய்ப், பருந்துதிசான் றென்றுமொளிர் பாவலா சப்புவிப் பாற், றிருந்துபுகழ் விக்கிரம சிங்கபுர மெனும்பதியில். (௨)

பொன்பூத்த பெருஞ்சிகரப் பொதியவரை நிதியமெ னுங், கொன்பூத்த நெடியருணைக் குறியமுனி யருட்புலமை, முன்பூத்த வேழுதலை முறையாய்ந்த முழுத்தவத்து, மின் பூத்த புகழ்பாண்டி வேளாள குலதிலகர். (௩)

அணிதருமம் பலக்கூத்த ரவர்மனையார் வடிவீனும்
பணிதருகற் புடையநலம் பரவுமயி லம்மையார்
துணிதருமற் றிவர்தம்பாற் றவமிவர்க் குரித்தென்னத்
திணிதருமெய்த் திருந்தொருவர் திருவருளா லவதரித்தார்.()



முக்களா லிங்கமென மொழிபிள்ளைத் திருநாம
நக்களா வுறப்பூண்டு நந்துபிறைக் கொழுந்தனையா
ரக்களா வரனருளா லையாண்டின் மேனெடிதின்
பக்களா தரந்தோதும் பள்ளியமர்ந் தருளினர். (௫)

பள்ளியமர்ந் தருளுளிற் பரவுபுனற் சோணாட்டு
வள்ளியவா வடுதுறையில் வாழ்நமச்சி வாயகுரு
வெள்ளியமென் மலர்க்கழலே யுளத்தான்ற முனிவர்சிலர்
நள்ளியவ [illegible]ழ்மிகுமந் நகர்வீதி வரக்கண்டார் (௬)

கண்டுபணிந் தெழுந்தடிகேள் கடையேனி லடைந்தமுது
கொண்டுபின ரெழுந்தருள வேண்டுமெனக் குறையிரப்ப
மண்டுபிரி யத்தவரு மழவுருவப் பெருந்தகையார்
தொண்டுபெட் டிரங்கியவர் தூயமொழிக் குடன்பட்டார்.

திருந்துசுவைக் கறியமுதாந் திருவமுதாங் கொண்டருளி
யருந்தினியென் னாம்மையென்றோ ரழகியசெய் யுளும்பாடிப்
பொருந்துமவர் செலப்புறத்தே போயிருந்த தந்தையார்
வருந்துதலி றம்மனைவாய் வந்துநிகழ்ந் ததையுணர்ந்தார்.

உணர்ந்தவுடன் மைந்தரொடு முறுவர்பாற் போய்வணங்கிப்
புணர்ந்ததிரு வருட்பெருமைப் புத்திரனார் குறிப்புணர்ந்து
தணந்தவர்செல் றனரின்ற தந்தையா ரம்மைந்தர்
மணந்தனராய் முனிவரொடு வழிக்கொண்டு நடந்தனரால்.

வரையகமுங் கருங்கான மருவகமும் வயன்மருதத்
தரையகமு மெம்பெருமான் றானங்கள் பலவணங்கி

விரையமைந்த சோணாட்டு மிளிர்திருவா வடுதுறைவி
லுரையமைந்த திருமடத்தி லுட்புகுந்தா ருவமையிலார்.
புக்கவர்பன் னிரண்டவ்வைப் பொருந்தியொளி ரஞ்ஞான்றே
தக்கவராய் முண்டிதராய்ச் சந்நியா சத்திறம்பூண்
டக்கவர்தந் தலைமாலை யொருங்கணிவார் திருவருளாற்
றிக்கவரு ளிசையிப்பச் செழுங்கலைகள் பலபயின்றார். (௧௧)

ஆயபெரும் புகழ்த்திருச்சிற் றம்பலதே சிகர்காண்மு
மேயபெருங் கருணையுரு வேலப்ப தேசிகர்தாம்
பாயதிரு வாணமௌனப் பார்தீக்கை செய்யப்பெற்றுத்
தாயனையார் சிவஞான முனிவரெனத் தனியமர்ந்தார். (௧௨)

வடகலையிற் றென்கலையின் மாறிலா விலக்கியமுந்
தொடர்புடைய விலக்கணமுந் தோலாத தருக்கமுமற் [று
றிடனுடைமெய்ப் பொருட்கலையு மெக்கலையு முழுதுணர்ந்
திட்முடைய வநுபூதிச் செல்வராய்ச் சிறப்புற்றார். (௧௩)

சிறப்புறுதொல் காப்பியச்சூத்திரவிருத்தி முதற்பலவு
மறப்பில்பெரும் புகழ்க்காஞ்சி மான்மியமும் மகமுதற்
பெறப்படுமந் தாதிகளும் பிறங்குமிறை முதற்பலவு
முறப்பயில வினிதியற்றி யுயர்பரிபூ ரணமுற்றார். (௧௪)

உ

கணபதிதுணை.

## சி[illegible]ரீம்.

இந்நூற் போதகாசாரியராகிய

பிரமஸ்ரீ தருக்கம் கிருஷ்ணாச்சாரியாரவர்கள்

இயற்றியன.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பிரமஸ்ரீ. பட்டஸ்ரீ,

பாலசரஸ்வதி நாராயண சாஸ்திரியார் அவர்கள்

இயற்றியன.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible]

[illegible]

மருபுரவாசி பிரமஸ்ரீ கணபதிசாஸ்திரியாரவர்கள்.

இயற்றியன.

[illegible]



சிவமயம்

# சிறப்புப் பாயிரம்

---

மாயூரம்,

## சைவஸ்ரீ - முத்துவைத்தியநாத தேசிகரவர்கள்

இயற்றியது

சுருக்கமிலா [illegible] செந்தமிழிற் சொற்பொருளான் மிக்க
தருக்கமிலை யென்குறைதா னீங்கத்—தருக்க
வி[illegible]ர் னற்சோம சுந்தரமால் வேய்ந்தான்
றளக்கில் சிவயோகி சூழ்ந்து.

---

மாயூரம்

ம-ள-ள-ஸ்ரீ, சிவலிங்கவுபாத்தியாயரவர்கள்

இயற்றியது

திருவளராரூர்சேர்மன்னார்குடிக்
குருவளரோர்வேளாளகுலமதின்
மருவுமுபாத்தியாயர்வகையெனத்
தோன்றுகொட்டொருதூயமரபோன்
றென்றுமிலவுவதினிதினுதித்தோ
ரொன்றுமுபாத்தியாயம்வயித்திய
மந்திரமுதலியமாண்புயர்கல்விச்
சம்பந்தமானதகுந்தொழிலுடையார்
பகரக்குடியிற்பழமிவாத்தியார்க்

இகபரமுதவுமிராமசாமிப்பேர்
கொண்டவோர்குமரன்கோதறத்தோன்றி
மண்டுசீர்விக்கலிகிவாழ்ந்தனன்
குண்டையூர்பெருமான்குடிகொள்மனத்த
னடியர்கட்கதிதிகட்கன்னமிட்டுவப்போன்
றடைபடாவில்லறத்தன்மைபூண்டோன்
திருவாசகந்திருக்குறடெரிந்தவைபே
யரியவேதாகமமென்றறிந்த
படியேயொழுகும்பான்மையனாந்து
வடிவுறுபுத்திரர்வாய்ந்தமாதவத்த
னின்புறவாழ்ந்துபினேய்ந்தனன்சிவப
மக்குமாரர்கடமிழாற்றிலம்வலராய்
மிக்கவுத்தியோகமேனிலையுள்ளா
ரவர்களின்மூத்தோ னறிவினுமூத்தோ
னுவமையில்சங்கத்தவர் நூறருக்கம்
வேதாந்தசித்தாந்தமெய்ந் நூலுணர்ந்து
போதாந்தவநுபவப்பூரணம்பெற்றோன்
வடமொழிதன்னின் மாண்புடைத்தாய
திடமுறுதென்மொழி சேர்குறைநீங்கச்
சேணிலின்முகந் திகழ்தரக்காட்டு
கோணிலின்சொற் கூறியருகுற
வேண்டியதுதவி மிடியறுவள்ளலி
காண்டகுமிராம லிங்கபால்முன்செப்



சுப்பிரமணியத் தோன்றலிருவர்
வேண்டநன்றிஃ தென்னமேற்கொடு
விக்குமளவிய லென்னவிளம்புந்
தருக்கவிளக்கந் தகைபெறச்சாற்றினன்
சோமசுந்தர னென்னுந்தூய
நாமம்பெற்றுயர் நாவலரேறே.

---

சிதம்பரம்

ம-ா-ள-ஸ்ரீ, வ. இராமலிங்கப்பிள்ளையவர்கள்
இயற்றியது

சிவயோகி நற்சோம சுந்தரமால் செய்தா
னவமா ரளவியலா நன்னூற்—புவிமே
றருக்க விளக்கந் தமிழ்க் கொரு சார்பா
யிருக்கக் குறைதீர்ந் தினிது.

ஏரார் பரஞானச் செல்வத்தா லின்புற்றோன்
பாரார் தமிழ்ச்சங்கப் பன்னூற்பார்த்—தேரார்
பெருக்கமெய் நூலின் பெரும்பொருள் கண்டோன்
றருக்க விளக்கந்தந் தான்.

---

கும்பகோணம்

ம-ா-ா-ஸ்ரீ, அ. பாலசுப்பிரமணியப்பிள்ளையவர்கள்
இயற்றியது

பெயருயர்வு சார்பாற் பெறுப்புலவர் போலா
துயர்வறிவி னாற்கொ ணரவோன்—மயர்வில்
சுருக்கறுகேள் வீச் சோம சுந்தரவேள் செய்தான்
றருக்க விளக்கநூ றான்.

---

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது

ஓங்குகவி லேத்தமிழிற் றருக்கதா லெளிதா வுலகங் காண்பா, னுயர்கவிஞ ரவாவகற்றும் வள்ளல் ப்பதிபி லுதித்த சீமான், பாங்குறயி ராமலிங்க வேள் விரும்ப வுங் கண்டு பரிவு கொண்டு, பகர்வரிய திருமொழியி னும் வழங்கு நியாயநூற் பலவுஞ் சூழ்ந்து, தாங்குறூஉந் திர ரகம் நிபி கைவிளக்கஞ் சமைத்தொ மூங்காச், சாற்றினோ னல்ல வியலென னுந் தருக்க விளக்கமது சதுரதாச; நாங்குதலில் பொறைஞான மிகை தவை வாய்மைகுண நன்னப் பெற்று, நாடனைத்து மேபுகழ விரைந்தோ ந்தரப் பேர்காவலோனே.

---

சேலம் வித்துவான்

ம-ா-ா-ஸ்ரீ, சரவணப்பிள்ளையவர்கள் இயற்றியது.

அருக்க விளக்க மிருளிக்கி யரிய பொருளைக் காட்ட லெனச், சுருக்க விளக்க வெழிலமையத் தூக்கமர் சோமசுந் தரமால், தருக்க விளக்க மெனவொருநா றந் தான் பரி வதனியல்பைப், பெருக்க விளக்கி யென்போல்வார் பேச வடங்கும் பெற்றியதோ.

உ

சிவமயம்.

ம-ா-ா-ஸ்ரீ

சே - சிவஞானப் பிள்ளையவர்கள்

இயற்றிய

# சிறப்புப் பாயிரம்

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொன்றாடு மணிநாடு புலவரெலாங் களிதூங்கிப் புகழ்ந்து பாடு, மந்நாடு மிந்நாட்டுக் கில்லையிணை யென்று மையோ டிறைவனந்நாள், பன்னாடு பலவிளைத்துங் பசு போத மறவென்று பறித்தநாடு, சொன்னூறு தமிழ்நாடு கருதிபுகழ் தென்பாண்டி நாடு. (க)

கோபவிரா கூட்டமொரு பாலெமது சின்றவல் ப், பவிரா சப்பெரியோர் குழுவொரு பாற் பிறவியெனுந் தாவெங் கோடைத், தாபவிரா சப்பெ ரியோர் சங்கமொரு பான்மருவத் தாவினுட்டிற், பாபவிரா சப்பதிச் விக்கிரம சிங்கபுரப் பழம்ப திக்கண். (உ)

மானந்தக் கூர்விழிவேன் மயிலம்மை யுளமகிழ மகிழ்நர் கோடி, தானந்தக் கோர்மகிழ வியற்றியருந் தவமாற்றித் தனுத கத்தில், தானந்தக் கூறுடைய தகுதியினர் சம்பு வின்று டலைமேல் வைத்த, ஆனந்தக் கூத்தருக்கு வானந் தர் தரவந்த வரும்பு தல்வர். (ங)

சிவஞான பாடியமுந் தென்காஞ்சி மான்மியமுந் தீந்தமிழ்ச்சொல், நலஞான மருவுதொல்காப் பியவிருத்தி முதலியவு நன்னூ லென்னுந், தவஞான முனிநூலி னகல்வுரைத் திருத்தமுமே சால்பி னுற்றிச், சிவஞான மணம்வீசுஞ் சிவஞான முனிவரராந் தெய்வச் செம்மல். (௪)

அருக்கசங்கி ரகமாக காரமனைத் யோட்டிவொளி காட்டுமாபோல், உருக்கசங்கி ரகமிந்தி [illegible] ரிறைமையேனு மில்லாதே மோதியென்றும், வருக்கசங்கி ரகமாக வுணர்ந்துமன மருளிரிந்து வாழு மாறு, தருக்கசங்கி ரகமுடனே தீபிகையுந் தமிழ்ப்படுத்தித் தந்தா ரம்மா. (௫)

அத்தகைசங் கிரகக்குச் சூத்திரமுந் தீபிகைக்கிங் காரியத்தின், சுத்தமொழிக் கோத்தமிழ்ச் சொல்லிடையே மருவுகின்ற தோமில் [illegible] கொரு விருத்தியுமே புலவரெலாம் பெரிதுவக்க வகுத்திட் [illegible] டொல், [illegible] திபத்தை யோர்ந்துபல மெய்ஞ்ஞான நிலவு மாற்குள். (௬)

கருவாசந் தனைத்துரந்து கண்ணுதலின் றிருவுருவக் காட்சி மேவும், பெருவாசந் தனிதுய்க்கும் வடநூற் பெருந்தகையின் பீடு சான்ற, திருவாசகம் மேலைத் திருக்குறளே முதலாய தெய்வ நூலாய், ஒருவாசகங்களெலா மோதியுணர்ந் துரைத்தடங்கி யொழுக்க மிக்கோன். (௭)

கோடாத நீதியினுன் குறையாவி பூதியினுன் குல்வுமென்பால், விடாத வன்படையான் விழுத்தமிழி னின்புடையான் வினையே யில்லான், ஓடாத மானிடத்தர் ஒடுகின்ற யாழ்வலத்தர்க் கோதி யோதிப், பாடாத செய்யுளிலான் பவப்பிணிக்குப் பையுளிலான் பண்பான் மிக்கோன்.



வீறுடைய புலிக்கொடியை மேலுயர்த்திப் பல்வளனு மேவு பொன்னி, ஆறுடைய வளபாயர்க் கெங்களுண் மொழித்தேவ ரங்கா ளோடியம், தேறுடைய தொண்டர்சீர் நிலவியென்றுந் தீராத [illegible] ப்பிணிநோய் தீர்க்குஞ், சோறுடைய சோணாட்டு வேளாளர் தொல்குலத்திற் றோன்றுஞ் சைவன்.

அருநாமத் திராமச்சி வாயமொழி யிடைவிடா தறைதலாலே, ஒருநாமஞ் சோமுலகின் மயக்கொழிந்தோ மொருவாதா கூறா லெய்துங், கருநாமம் போக்கினோங் கண்ணுதற்பால் வைத்துள்ள கருத்தா லென்போன், திருநாமஞ் சுந்தரம சாமியெனுஞ் செய்தவற்குத் திருக்கு மாரன்.()

அன்னவன்மன் னூர்குடியில் வாழ்சோம சுந்தரவேளவற்றை யின்றெனன், பின்னவன்றன் றிருமயிலா புரிச்சோம சுந்தரன்றன் பெரியு மைந்தன், தன்னிகரி லச்சதனிற் பதித்தளிக்க நான்பெற்ற நன்மை யாலே, என்னிகரில் வுலகிலெவர் இடம்பெற்றார் முத்தியுல கிடம்பெற்றாரே.

கூடலூர்ப் பழம்பதியில்

எஸ் - பி - ஜி. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ம - ள - ள - ஸ்ரீ

## மதுரகவி - மாணிக்கவாசக பிள்ளை யவர்கள்

இயற்றிய

(தரவு கொச்சகக் கலிப்பா.)

மாவடுவின் கண்ணிபங்கர் மன்னுயிர்கட் கருள்சுரக்கும்
ஆவடுவின் றுறையதனி லாதினுந் தமிழ்ப்புலமைப்
பாவடுவில் சிவஞான முனிவென்னும் பதிஞானி
நாவடுவில் தருக்கமதைச் சுருக்கிமொழி பெயர்த்தன்றே.

விஞ்சுதிறற் றீபிகையும் விளம்பியரு ளினராக
அஞ்சுவணன் செஞ்சரண மகத்திருத்தும் பெருஞ்சைவன்
தஞ்சையின்மன் னார்குடியிற் றங்கியொளிர் வேளாளன்
மஞ்சடக்குங் கொடைராம சாமிசுதன் மாபுனிதன். (௨)

துருவாச முனிவழங்குஞ் சுடுசாபப் பட்டுழன்ற
தருவாச வாசவனுந் தாமரையில் வாசவனும்
மருவாச வண்டுளவ மாலவனு முணராத
திருவாச கங்கோவை திருக்குறளுந் தேர்ந்துரைப்போன்.



அருளிருக்கும் விழியுடையான் அன்பிருக்கு மொழி
யுடையான், தெருளிருக்கு மனமுடையான் சிவநேச ரின
முடையான், இருளிருக்குங் குழலுமையா ளிடமிருக்கும்
பெருமான்மேற், பொருளிருக்கும் பாவுடையான் பொய்
யாத நாவுடையான். (௪)

பொன்பாட்டின் மண்பாட்டிற் பூவையர்கள் கலவியிலாம்
இன்பாட்டின் மனஞ்செலுத்தி யிவ்வுலகில் வாழாதான்
அன்பாட்டி லாடுகின்ற வம்பலவன் றாண்மறவான்
என்பாட்டி லிச்சைவைத்த வெழிற்சோம சுந்தரவேள். (௫)

ஆங்கவற்றிற் சுருக்கமதற் கமைந்தபல சூத்திரமும்
பாங்குடனே தீபிகைக்குப் பசுந்தமிழில் விருத்தியுமாய்
நாங்களுள மகிழ்ந்திறக்க நயமாக வரைந்தளித்தான்
ஆங்கவற்றை யச்சதனி லிசைபெறவே பதித்தனனால். (௬)

வண்டமர மலர்குடையும் வாசமலர்ச் சோலையெலாம்
பண்டமர வஞ்சுகங்கள் பரசிவனார் புகழ்பாடும்
கண்டமர வங்களுடன் கரியிருந்து துயில்கூரும்
தண்டமர நன்னாட்டிற் றென்மயிலா புரியதனில். (௭)

கருவிளையாட் டிரிந்தொருநாட் குறிவிளையாட் டடைபாக்கு
மருவிளையாட் டிமிர்கடப்ப மாவனத்திற் சிவனியற்றுந்
திருவிளையாட் டுடன்பெரிய திருத்தொண்டர் புராணமுதற்
குருவிளையாட் டமர்வாத வூரருங் கோவைகுறள். (௮)

உச்சியப்பர் விழியிரத்தம் ஒருவேடன் கவ்தென்கண்
வச்சியப்புங் காளத்தி மான்மியமும் புலவருச்சி
நச்சியப்பும் புகழ்பூண்ட நறுந்தமிழிற் காவியமாக்
கச்சியப்பன் செய்தருளுங் காந்தமுதற் பலநூலும். (௯)

உள்ளியம் பலவுரவோர் ஒருங்கிருந்து கேட்டுவக்கத்
தெள்ளியம் பலவரிய தீந்தமிழிற் பிரசங்கம்
அள்ளியம் பலப்புலமை யாரவமர்ந் துரைசெய்தோன்
வெள்ளியம் பலப்புலவன் விரும்புசுத னெனத்தோன்றி. ()

வாழ்வுடையான் சங்கரனூர் வாரிசத்தாட் கென்னாளுந்
தாழ்வுடையான் பலநூலுந் தக்கவர்பாற் றேர்ந்தவற்றில்
ஆழ்வுடையான் கேள்விமுயன் றஞ்செவிக்கே யுணவுகொளுஞ்
சூழ்வுடையான் புகழ்ச்சோம சுந்தரப்பேர்ப் புலமையனே.

23/ 12௨

# தருக்க சங்கிரக தீபிகையின் வரலாறு.

வைதிகசாத்திரம் மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என ஆறும். அவற்றுள், மீமாஞ்சை சைமினிமுனிவராலும், நியாயம் கௌதமமுனிவராலும், வைசேடிகம் கணாதமுனிவராலும், சாங்கியம் கபிலமுனிவராலும், யோகம் பதஞ்சலிமுனிவராலும், வேதாந்தம் வியாசமுனிவராலும், சூத்திரரூபமாகச் செய்யப்பட்டன. அவை தரிசனமெனவும் பெயர்பெறும். கௌதமமுனிவர் அக்கபாதர் எனவும் பெயர்பெறுவர்.

அவற்றுள், நியாயம் வைசேடிகமென்னும் இரண்டும் தருக்க நூலெனப்படும். இவற்றையும் இவற்றின் வழிநூல்களையும் வியாக்கியானங்களையும் கற்றுணர்ந்த மகாபண்டிதராகிய அன்னம்பட்டர் ஏறக்குறைய இருநூற்றைம்பது வருடத்துக்குமுன் தருக்கசங்கிரகம் எனப்பெயரிய ஒருநூலும், அதற்குத் தருக்கசங்கிரகதீபிகை எனப் பெயரிய ஒருவியாக்கியானமும் இயற்றினர். இவ்வன்னம்பட்டர் தெலுங்கர். இவர் மாபாடியத்துக்குக் கையடர் இயற்றிய வியாக்கியானத்துக்கு உரையுஞ் செய்தனர்.

இத்தருக்கசங்கிரகம் சிறுவரும்எளிதினுணரும்பொருட்டு மிகச் சுருக்கிச் செய்யப்பட்டமையால், யாண்டும் தருக்கநூல் கற்கப்புகுவோர் யாவரும் முன்னர் இதனையே கற்கின்றனர். இதற்குப் பல வியாக்கியானங்கள் உள. அவற்றுள்,—

க. தருக்கசங்கிரகதீபிகை. இது நூலாசிரியராலே செய்யப்பட்டது. இதனை அன்னம்பட்டீயமென வழங்குவர். இது தருக்க

சங்கிரகத்துக்குச் செய்யப்பட்ட வியாக்கியானங்கள் எல்லாவற்றினும் மிக அரிதிலுணர்தற்பாலது. இது முந்நூற்றைம்பது கிரந்தமுடைத்து. இவ்வியாக்கியானத்துக்கு ஐந்து வியாக்கியானங்கள் உள. அவற்றுள்,—

1. அநுமதீயம். இது மீர்த்துவராகிய அநுமதாசாரியராலே செய்யப்பட்டது. இவர் சர்ணுடர். சற்றேறக்குறைய நாற்றுநாற்பது வருடத்துக்குமுன் தேகவியோகமெய்தினர். இவ்வநுமதீயம் ஆறாயிரங்கிரந்தமுடைத்து.

2. நீலகண்டீயம். இது பல்லாரியில் இருந்த தெலுங்கராகிய நீலகண்டசாத்திரியாராலே செய்யப்பட்டது. இவர் ஏறக்குறைய எழுபதுவருடத்துக்குமுன் காசியிலே தேகவியோகமெய்தினர். இந்நீலகண்டீயம் ஆயிரத்திருநூற்றைம்பது கிரந்தமுடைத்து. இதற்கும் தெலுங்கராகிய இராமபத்திரபட்டராலே இராமபத்திரீயம் என ஒருவியாக்கியானம் செய்யப்பட்டது.

3. தருக்கசங்கிரகத்துக்கு நிருக்தி செய்த பட்டாபிராம சாத்திரியாரும் தருக்கசங்கிரகதீபிகைக்கு ஒருவியாக்கியானம் செய்தனர்.

4. முகுந்தபட்டீயம். இது முகுந்தபட்டராலே செய்யப்பட்டது.



5. தீபிகாப்பிரகாசிகை. இது தமிழ்நாட்டில் இருந்த தெலுங்கராகிய நரசிங்கசாத்திரியாராலே செய்யப்பட்டது. இவர் சித்தாந்த முத்தாவலிக்குப் பிரபை எனப் பெயரிய ஒருவியாக்கியானம் செய்தனர், இவர் ஏறக்குறைய எண்பது வருடத்துக்கு முன்னே தேகவியோகமெய்தினர். பிரகாசிகை ஆறாயிரங் கிரந்தமுடைத்து.

௬. நியாயபோதினி. இது கௌடரும் தருக்கபாடப் பிரகாசஞ்செய்தவருமாகிய கோவர்த்தன மிசிரராலே செய்யப்பட்டது. இது நானூறுகிரந்தமுடைத்து.

௭. நிருக்தி. இது தமிழ்நாட்டில் இருந்த தெலுங்கராகிய பட்டாபிராம சாத்திரியாராலே தமதுபுத்திரியின் பொருட்டுச் செய்யப்பட்டது. தருக்க சங்கிரகத்துக்குள்ள வியாக்கியானங்கள் எல்லாவற்றுள்ளும் இது மிக எளிதிலுணர்தற்பாலது. இவர் ஏறக்குறைய எழுபது வருடத்துக்கு முன்னே தேகவியோக மெய்தினர். இந்நிருக்தி அறுநூறு கிரந்தமுடைத்து.

௮. சித்தாந்த சந்திரோதயம். இது கிருஷ்ண தூர்ச்சடிதீக்ஷிதராலே செய்யப்பட்டது. தருக்கசங்கிரகத்துக்குரிய வியாக்கியானங்களுள் தருக்கசங்கிரகதீபிகை யொழித்தொழிந்த மற்றெல்லாவற்றினும் இது மிக அரிதிலுணர்தற்பாலது. இது ஆயிரத்துமுந்நூறு கிரந்தமுடைத்து.

௯. தருக்கசங்கிரக சந்திரிகை. இது மகாராட்டிரராகிய முகுந்தபட்டராலே செய்யப்பட்டது. இது ஆயிரத்திருநூறு கிரந்தமுடைத்து.

௬. பிரகிருதிப்பிரியம். இது கௌட தந்திரியாகிய சந்திரசிங்கராலே செய்யப்பட்டது. இது கங்கைக்கரையிலுள்ள நாடுகளிலே கற்கப்படுகின்றது. இது ஆயிரக்கிரந்தமுடைத்து.

௭. தருக்கசங்கிரகோபநியாசம். இது மகாராட்டிர சந்நியாசியாகிய மேருசாத்திரியாராலே செய்யப்பட்டது. இது தார்க்கிகர்களாலே மிக நன்குமதிக்கப்படுகின்றது. இது ஐஞ்ஞூறு கிரந்தமுடைத்து.

தருக்கசங்கிரகமும், தருக்கசங்கிரகதீபிகை என்னும் வியாக்கியானமும், கைலாசபரம்பரைத் திருவாவடுதுறைச் சித்தாந்தபாநுவாகிய நமச்சிவாயமூர்த்திகள்மரபில் மெஞ்ஞானசுவாமிகளாலே, தமிழின்மொழிபெயர்த்தருளப்பட்டன.



கணபதி துணை.

## அளவியல் என்னும்

# தருக்கவிளக்கம்.

## பாயிரம்.

திருவருள் கூர்ந்து சிறப்பருள் யானை
யிருதாள் வாழ்த்தி யியல்பொடு வணங்குதும்
விரும்பு மளவியல் விளக்க மேலா
மருஞ்செந் தமிழி னுக்குநற் கினிதே. (௧)

தமிழ்மா முனிவரன் றுண்மலர் வணங்கி
யமிழ்தின் னவைத்துளத் தன்பாற் றுதுமே. (௨)

அருஞ்செந் தமிழி னளவை பாடியம்
விரும்ப வருளி விருத்தி செய்த
பெருந்தவ முனிதாள் பேணிப் பணிவாம். (௩)

பலகா லாய்ந்துப் பயிலற் குரித்தா
நிலவு நூலு ளிதினி னரிய
தளவை நூலி லமைய தின்றே. (௪)

எந்நா லெனினு மிலையுல கிறந்த
தெனினு முணர்தற் கென்று மரிதால். (ரு)

உலகோர் வகைமி னுறுவ தென்றுஞ்
சொலினுணர் வகையே தானும்வேற் றுமைதான்
விளங்க வுணர்வை விளக்குவ தென்னூல். (சு)

ஓர்ந்துய்த் துணர்த லொழியக் கேட்டல்
மாத்திரத் தென்னூல் வராதியார் தர்க்கே. (எ)

அறிவித் தாலன் றறிவுறு தெனினூ
முயன்று பலகால் முன்பின் கூட்டிப்
பயிலல் விடாது பற்றற் பாற்றே. (அ)

கூட்டி யுணரற் பாலதை யொட்டல்
விட்டு நோக்கல் விலன்றே லாங்கா
குணர்ந்ததை மறந்த துணர்வ தாகா
துணர்ந்தடை போக்கி நாடிக் கொளலே. (கூ)

பெயரே தன்மை பிளவிக்கு மின்பயே
யிலைமுன் றனைத்தி னென்றா லெளிதால்: (க0)

இயல்போ டியல்பி யென்று மிரண்டே
மினையக் கூட்டி யென்றோ தொன்றா
யொழித்தொன் றனைத்தி னுணர்வுறா தென்றால். (கக)

இனதோர் சொல்லோ டிச்சொற் புணரின்
மனுமர பான்முறை மாய்பொரு ளிதுவென்
றுணர்வ தின்றே துறைபய னின்றே. (கஉ)



உரையே கருவி யுணர்தற் கெனினு
மொருபொரு ளாமா றுரையே நோக்கி
நிற்பி னுணர்ச்சி நிகழா தன்றே. (கங)

பொருளொன் றெனினும் பொருந்தடை புணர்த
லொருவி இரண்டா னுள்ளுங் கருத்தின்
மருவும் வேற்றுமை மாண்புணர் வார்ப்பெறின். (கச)

ஒருமுறை முடிய வோதிப் பின்னர்ப்
பலகாற் சொல்லைப் பயனும் பொருளைப்
பிரித்துக் கூட்டிப் பேணிப் பயில்க
கருத லாயிற் கேட்டல் கடனும். (கரு)

பயிலலின் விடாது பலகா லாழ்ந்து
மயலற் றுணர்வுற வலநெறி யின்றே. (கசு)

பயிலா நூலின் வழக்குப் படியோர்
மயலற வந்நூன் மரபா னறிக.
முயன்று வருந்தி முட்டுறு தொழிக. (கஎ)

ஐயந்தோர் தம்பொரு ளுணர்ந்த நாவ
தெய்ப்பின் றெளியார்க் கினிது புலப்படத்
தப்பறக் காட்டித் தருவ தாகும். (கஅ)

தொல்காப் பியங்கிரன் சூழ்ந்த வுரைமுதலா
வெல்லுரைதாங் கல்லான் மிகுதமிழ் - நல்ல
தருக்க மெழுத்தறியான் கல்வியுஞ் சாற்றிற்
பெருக்கிற் பயனிலையாம் பின். (ககூ)

சுட்டடிச் சொல்லே சூழற் பாற்றே. (௨௦)

தன்கோள் பிறன்கோள் சார்ந்து வருவதி
னின்ன திஃதென வெல்லினர் கொளலே. (௨௧)

இன்மை யுணர்ச்சி யெதிர்மறை யுணர்ச்சி
யன்றிப் பிறப்ப தாயி னின்றால். (௨௨)

ஒருங்கி ரனவா யுறுபல பொருளிற்
சார்பொதுத் தன்மை சாதி யாமல். (௨௩)

வரைந்து கோடல் வரம்புட் படுத்தல்
பார்க்கின் வேறு படுப்பது வாகும். (௨௪)

தடையுடை மையினுஞ் சாதி யாக்க
தடைவுறு தன்மை யுபாதி யாமாம். (௨௫)

கணமொன் றிரண்டு கழியக் குணமுறும்
வினைகண நான்கின் மேனில் லாதால். (௨௬)

பொருள்குணந் தொழிற்குப் புகன்முதற் காரணந்
தெரிபொரு ளென்னச் செப்பு நாலே. (௨௭)

அறியப் படுவ தாம்புலன் விடயம். (௨௮)

புணர்தல் வடிவுடைப் பொருள்யா வையினு
நினையின் மேவிடு நிறைவென் வியாபகம். (௨௯)

கூறுவ தொன்றிற் குற்றம் வகினை
தேறடை கொடுத்துந் தீர்ப்பது மரபே. (௩௦)



பிறிதோ ராற்றாற் பெறப்படு வதுதனி
னதனின் முன்னே யினது நிற்ப
தென்பது நேரே யெய்தப் படாது
பிறிதொன் றானே பெறப்படு வதுபிற. (௩௧)

ஓர்வினை நிகழ்வ துறுசெயல் காரியம்
பேர்வற முற்றுப் பெறுவ தென்ப. (௩௨)

மருவு மொன்றை வருதடை போக்கி
வரையறுத் தினிது மான விளக்கப்
புணர்க்கப் படுவது போற்றடை விசேடண
முணர்ச்சி வகையன் றுணர வராதது. (௩௩)

அடையோ டடையில் லாமை நீக்குவ
திடைபிறி தடையோ டியைபு நீக்குவ
தென்றடை யிரண்டா மியலு மென்ப. (௩௪)

உணர்வெனப் படுவ தறிவுளங் கொண்டு
புணரப் பொருளைப் பொருந்துவ தொன்று
துணர்ந்தது மீள வுணரப் பட்டாங்
குணர்வும் புலனு முணரப் படுமேன்
முன்னிக ழுணர்வே மொழியின் னுணர்வென்
றிருதிற னுகு மேய்ந்தது கவர்ந்து
மறுமி யாதலுங் கண்டனர் கொளலே. (௩௫)

பின்னிக ழுணர்வென் பதுதான் பேசின்
முன்னிக ழுணர்வே மொழிபுதன் புலனே.

மன்னுந் தன்மை மருவுங் கிழமை
யென்னு நான்கு மன்னுங் காட்சி
யுணர்வா யுளத்தி னுறுவது தானே. (௧௬)

அநுப லத்தி யாயிற் காட்சி
யின்மை யென்னு மெதிர்மறைப் பொருளி
னுண்மையி னுணர்வாங் குறைமை யென்ப. (௧௭)

ஒன்றின் மிடைந்த நிறைவு வியாப்பிய
மின்றி யமையா நின்றிட னிகழ்ச்சி
பொன்றும் வியாத்தி வியாப்பிய முறைப்பின்
முன்னுற மொழிதன் முறைமை யென்ப. (௧௮)

தன்மை யுடைய தனைத்து முன்குறாத்
தன்மையின் வைத்துச் சாற்றுதன் மரபே. (௧௯)

துணிபொருள் கவிற்குத் தோன்றிப் புலப்படுந்
துணைப்பெறல் பெறுதி துணிதல் வேட்கை
புணர்வ தல்லதைப் பொருந்துறு விருப்பம். (௨௦)

துணிபொருட் பெறுதியிற் றுணிதல் வேட்கை
புணரும் பக்கத் திலக்கணம் போக்கும்
வினையுள தாகலின் விலக்கற் பாற்றே. (௨௧)

என்று மின்மைக் காகா தெதிர்மறை
யின்றி யாங்கணு மாமை யெனப்படு
மன்றி விட்டக லாமையு மாகும். (௨௨)



சேற லின்றிச் செறியோர் முறையின்
மாறு கொளத்தான் வருவது பிறழ்ச்சி. (௨௩)

ஒன்றாந் துணிபொரு ளொருவா தெனலா
னின்றித் துணிபொரு ளிருப்பதன் றேது
வென்பது தன்னு னின்றிப் பிறழ்ச்சி
யொன்றுட னிகழ்ச்சி யின்றி யமையா
தென்ப தெய்தலி னஃதடை யெனப்படும். (௨௪)

ஒன்றிற் றோன்றி யதனிற் றோன்றற்
பாலதைத் தோன்றப் பண்ணுவ தாகி
மேவுவ திடையின் வியாபா ரம்மே. (௨௫)

இன்றி யமையா நின்றிட னிகழ்ச்சி
யொன்று மறையா வுறுவ துணரின்
மிடையத னின்மையை விட்டொரு வாது
மிருவத னின்மை மேவுவ தாகும். (௨௬)

அதாபிறி தாகா தனுவே யாதற்
குறுபொருந் தன்மை வடிவாந் தன்மை
யொன்றி னுறுவ தாவ தொன்றால். (௨௭)

இல்வழித் துணிபொரு ளிராத வேது
வுள்வழித் துணிபொரு ளுள்ள தாவது
வேரல்லடை யடுத்த வியாத்தி யென்ப. (௨௮)

உடனுறப் பலசேர்ந் தொருமிக் களந்தா
னிடனென் றேயா யிருப்ப தொன்றும். (௨௯)

எதிர்மறை யாமொழ் றேயுங் காலை
யெய்துந் தன்மை யெதிர்மறைத் தன்மை. (ருய)

இன்மை பலவகை யியைதற் கெதிர்மறை
யொன்றே யாகுமு முறவரை வகுதான்
படைத்து மொழியப் படுவ தாதலு
மின்றி யமையா வென்னுங் காலே. (ருக)

மன்ற வாணனை மனத்திலிட் டிறைஞ்சியவ் விறைவனை
வென்றசீர் நமச்சி வாயமெய்க் குரவனை வணங்கி
யென்றனைப் பொருளாமி லிளையவர்க் கினிதுணர் வுதிப்பத்
தென்றமிழ்ச் சொலாற் செயப்படுந் தருக்கசங் கிரகம்.

மலைமகன் மணந்த வுலகினுக் கிறையவன்
கலைமக ளாசான் கான்மலர் வணங்கிக்
கிளர் பொருட் டருக்கசங் கிரக
மிளையோ ருளங்கொள வியம்புவ னுரையே.

எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுச் செயற்பாலதென ஆன்றோரொழுக்கத்தான் அனுமிக்கப்படும் சுருதியின் விதிக்கப்பட்ட வழிபடுகடவுள் வணக்கமாகிய மங்கலம் மாணாக்கர்க்கு அறிவுறுத்தற் பொருட்டு யாப்பினுள் யாத்து, அதனான் முடிபெய்தும் பொருள் உணர்த்துகின்றார். அற்றேல், மங்கலம் இனிதுமுடிதற்குக் காரணமன்று, மங்கலங்கூறிய வழியும் நன்னூல் முதலியவற்றின் முடிவுகாணாமையின், மங்கலங் கூறாத வழியும் தொல்காப்பிய முதலியவற்றின் முடிவு காண்டலின், உடன்பாட்டினும் எதிர்மறையினும் நியமந்தப்புதலின் எனின்;—நன்று சொன்னாய்; நன்னூல் முதலியவற்றின் இடையூற்றின் மிகுதிப்பாட்டான் முடிவுபெறின்று, தொல்காப்பிய முதலியவற்றின் நூற்றுப் புறமாகவே மங்கலஞ் செயப்பட்டதாகலின், நியமந் தப்பியதின்றாண்டையதென்க. அற்றேல், மங்கலஞ் செயற்பாலதென்பதற்குப்பிரமாணம் என்னையெனின்;—ஆன்றோரொழுக்கத்தான் உண்டென்று அனுமிக்கப்படுஞ் சுருதியே பிரமாணமென்க. அண்டனுமானமாமாறு,—'மங்கலஞ் செயற்பாலதென வேதத்தின் விதிக்கப்பட்டது, உலகநடையும் பழிப்புமல்லாத ஆன்றோரொழுக்கமாகலின், வேள்வி முதலியனபோல'எனக்காண்க. உண்டி முதலியவற்றிற் சேறலை நீக்குதற்கு 'உலக நடையல்லாத' என்றும், இரவின்கட்டென்புலத்தார்கடனேம்பல் முதலியவற்றிற் சேறலை நீக்குதற்குப் 'பழிப்பல்லாத' என்றும், கூறப்பட்டது. பயனில செய்யற்கவென, நீரடித்தல் துரும்புகிள்ளுதல் முதலியவையும், பழிக்கப்படுதலின், 'உலகநடையும் பழிப்புமல்லாத ஒழுக்கம்' எனவே அமைதலின்; 'ஆன்றோர்' என்றது விளங்குதற்பொருட்டு.'ஒழுக்கம்' ஆசரித்துவருதல்.

* விதிக்கப்பட்ட மங்கலஞ் செயற்பாலதென அறிவுறுத்தற் பொருட்டு என இயைத்துக்கொண்டுணர்க. அறிவுறுத்தல் - தெரிவித்தல். அனுமித்தல் - ஆராய்ந்து துணிதல். தப்புதலின், காரணமன்று என ஒட்டுக. உடன்பாடாவது கூறியவழியும் முடிவுகாணாமை எய்பது, எதிர்மறையாவது கூறாத வழியும் முடிவுகாண்டல் என்றவா என்க. அனுமிக்கப்படுஞ் சுருதியென்றது சுருதிமுழுவதும் இக்காலத்தின்மையான். நியமம்—முறை. சேறல்—செல்லல். அஃதே முன்னர் வரும் அதிவியாத்தி எனப்படுவது என்க. இரவு—இரா.

இதன்பொருள் வெளிப்படை. 'சிறவுதல்' நிலைபெறுத்துதல். 'வென்ற' மேம்பட்ட. இளையோராவார் கோடாயும் உள்ளத்தமைத்தலும் வல்லுநர், குழவிப்பருவத்தாரல்ல ரென்பதாம். 'இனிதுதித்தல்' வருத்தமின்றி யுதித்தல். 'உணர்வு' பதார்த்தஞானம். 'தருக்கம்' * தருக்கித்துத் தெரிக்கப்பட்டன: அவை திரவியமுதலிய பதார்த்தங்கள். 'சங்கிரகம்' அவற்றைச் சுருக்கிக்கூறுதல். தருக்கநூல்கள் பலவுண்மையின் ஈண்டுப் புதிதாகத் தருக்கநூல் கூறுவதெற்றுக்கென்னு மாசங்கை நீக்குதற்கு, அந்நூல்கள் விரிவுடைமையின், அவை அறிவான் முதிர்ந்தோர்க்கேயாமென்பார் ஈண்டு 'இளையவர்க்கு' என்றும், இந்நூற்பயன் கூறுவார் 'இனிதுணர்வுதிப்ப' என்றுங் கூறினார்.

* தருக்கித்தல்—ஆய்தல்; எண்ணல். ஆசங்கை—ஐயம்.

பாயிரமுற்றிற்று.

உ

கணபதி துணை.

அளவியல் என்னும்

# தருக்கவிளக்கம்.

## பதார்த்தம்.

௧. பொருள்குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
யின்மை யுடன்பொரு ளேழென மொழிப.

(இதன்பொருள்) திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம் அபாவம் எனப் பதார்த்தங்கள் ஏழென்றவாறு.

திரவியம் - பொருள். குணம் - பண்பு. கருமம் - தொழில். சாமானியம் - பொதுமை. விசேடம் - சிறப்பு. சமவாயம் - ஒற்றுமைச்சம்பந்தம். அபாவம் - இன்மை.

திரவியம், குணம் என்பது பதார்த்தங்களைப் பகுக்கின்றது. பதப்பொருள் பதத்துக்குப்பொருளெனவிரிதலின், பதத்தாற் பெயரிட்டு வழங்கற்பாலதாந்தன்மை பதார்த்தத்துக்குப் பொதுவிலக்கணமாதல் கூறப்பட்டது. அற்றேல் அஃதாக, திரவியமுதலாகப் பகுத்தசெய்வெண்ணால் ஏழென்னுந்தொகை தானே பெறப்படுதலின், ஏழென்றல் பயனில்கூற்றாமெனின்;—அற்றன்று, அது பகுத்தவற்றின்மேற் பதார்த்தமில்லையென்னும் பொருட்டாகலின். அற்றேல், மேற்பதார்த்தம் அளவையானளக்கப்படும் பொருளா

யின் விலக்குதல்கூடாது, அன்றியிற் பிரதியோகியுணர்ச்சியின்றி அபாவவுணர்ச்சி பெறப்படாமையின் விலக்கியதனாற்பயன் என்னை யெனின்;—அற்றன்று, தொகைகொடாதொழியிற் பதார்த்தத்தன்மை திரவிய முதலிய வேழனுள் ஒன்றன்கண் வியாப்பியமாகாதெனவும் பொருள்படுமன்றே, அது நீக்குதற்பொருட்டு வேறெனல்வேண்டுமென்க. மேலும் இவ்வாறே காண்க. தத்தமபாவத்திற்குத் தாந்தாம் பிரதியோகியாகிய தத்தமுணர்ச்சி பெற்றாலன்றித் தத்தமபாவவுணர்ச்சி பெறப்படாதென்பது தருக்கநூற்றுணிவு.

* பதார்த்தம்-பெயர்ப்பொருள், பொருளெனவும்படும்.

* பதார்த்தம், பொருளெனப்படுதல், பதார்த்தம் பொருளாயின் என்றற்றொடக்கத்தனவற்றான் உணர்க.

*செவ்வெண்—எண்ணிடைச்சொலின்றியெண்ணிநிற்குந்தொடர். பொருட்டு - பொருளது. மேல்-ஏழின்மேல். மேற்பதார்த்தமில்லை என்றதற்கு வியாப்பியமாகாதில்லை என்பது கருத்து என்றது, வரையறைப்படுவது வகையல்லது பதார்த்தம் இனைத்தென அளவுபடுவதன்மையான். அன்றாயின் - பொருளன்றாயின். பிரதியோகி - எதிர்மறை. வியாப்பியமாதல் - அடங்குதல். மேலும் இவ்வாறே காண்க என்பது முன்னர்வருந் தொகைகட்கும் இவ்வாறே கொள்க என்றவாறு.

௨. மண்புன லனல்கால் வெளிபொழு தாசை
யான்மா மனநோ டொன்பதாம் பொருளே.

(இ - ள்) அவற்றுள், திரவியம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என ஒன்பதுவகைத்து (எ - று.)



அவற்றுள், திரவியம் எ - து. திரவியத்தைப் பகுக்கின்றது. 'அவற்றுள்' என்பது திரவியமுதலிய வேழனுள்ளென்றவாறு. திரவியம் ஒன்பதுவகைத்தெனக் கூட்டுக. 'பிருதிவி' என்பது அவை இவையென்கின்றது. அற்றேல், இருள் பத்தாந்திரவியமாதலுண்மையால், திரவியம் ஒன்பதென்பதென்னை? அது திரவியமாதல், 'இருள் கருவடிவிற்று, இயங்குகின்றது' என்னும் வாதையில்லாத உணர்ச்சி வலியாற் கருமைப்பண்பிற்கும் இயங்குதற்றொழிற்கும் பற்றுக்கோடாதலுண்மையின், பெறப்பட்டது; அது, வடிவுடைமையின் ஆகாய முதலிய ஐந்தனுள்ளும், உருவுடைமையானும் இடையறாதியங்காமையானும் வாயுவினும், ஒளிவடிவிற்றன்மையானும் வெம்மையின்மையானும் தேயுவினும், குளிர்ச்சியின்மையானும் கருவடிவிற்றாகலானும் நீரினும், நாற்றமுடையதன்மையானும் பரிசமின்மையானும் நிலத்தினும், அடங்குவதன்றாகலின், இருள் பத்தாந்திரவியமென்பது பெறப்படுமாலோவெனின்;—அற்றன்று, இருள் வடிவுடைப்பொருளன்று, ஒளியோடுகூடாத விழியாற் காணப்படுதலின், ஆலோகத்தினபாவம்போலும்; வடிவுடைப்பொருள் விழியாற்காண்டற்கு ஒளியே காரணமெனக்கருதப்படுதலின், பேரொளியுடைய தேயுப்பொதுமையின் அபாவமே இருளென்பது பெறப்படுதலினென்க. 'இருள் ஆண்டியங்குகின்றது, கருவடிவிற்று' என்னும் உணர்ச்சி மயக்கத்தாற்றோன்றியதேயாம்: ஆதலிற் பொருள் ஒன்பதேயென்பது பெற்றாம்.

*அவை - ஒன்பது திரவியம். வாதை - தடை, தகுதியின்மை. அடங்குவதன்று என்றதை, ஐந்தனுள்ளும் என்றற்றொடக்கத்தனவற்றொடு தனித்தனிக் கூட்டுக. ஆலோகம் - பேரொளி.

*அற்றன்று, பெறப்படுதலின் எனவும், இருள் அபாவம்போலும் எனவும், கருதப்படுதலின் அபாவமே இருள் எனவும், கூட்டிக்

கொண்டனர்க. விழியாற்கவர்தற்கு ஒளியே காரணம் என்பது மேல் ஆலோகத்தின் அபாவம்போலும் என்றதை வலியுறுத்திய வாறு. அஃதேல் இஃது என்சொல்லியவாறோ எனின், வடிவுடைப் பொருள் விழியாற்கவர்தற்கு ஒளியேகாரணம் என்பதற்கு புறம் பட, இருள் ஒளியொடுங்கூடாத விழியாற் கவரப்படுதலின் ஒளி யினதபாவமே இருள் அல்லது வடிவுடைப்பொருளன்று எனக் கூறியவாறு.

1. சண்டியல் புன்யா ரெனினுங் குற்ற
மூன்று மின்றி மொழியு மிலக்கியத்
தன்மை வரைந்து தாங்கொள் வதனோ
டின்றி யமையா தொப்ப விருப்ப
தறையு மிலக்கண மாயி னதுதான்
வேறு படுத்தல் விளங்க வழங்கற்
கேது வாய்நின் றிருவகைத் தென்ப.

(இ - ள்.) பொருண்மைச் சாதியுடைமையாதல் குணமுடைமையாதல்பொருட்கு இலக்கணமெனக்கொள்க. இலக்கணம் அவ்வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவம் என்னும் முக்குற்றங்களும் நீங்கிய தன்மை. அதுவே சிறப்பியல்பென்றுரைக்கப்படும். சிறப்பு இலக்கியத்தன்மையை வரைந்துகொள்வதனோடு நியதமாய் ஒப்ப நிற்பது. பிறவற்றினின்றும் வேறுபடுப்பதே இலக்கணமெனக் கொள்ளின், வேறுபடுத்தலினும் அபிதேயத்தன்மை முதலியவற்றி னும் அதிவியாத்தி நீக்குதற்கு அதின்வேறாயவென இயல்பிற்கு அடைகொடுக்கற்பாற்று. அபிதேயம் - பெயரிட்டுவழங்கற்பாலதாந் தன்மை. வழங்குவதாகும்இலக்கணத்திற்குப் பயனாகக்கொள்ளின், அவ்வடை வேண்டாவென்றுணர்க, வேறுபடுத்தலும் வழங்குதற்



பொருட்டேயாகலின் எனக்கொள்க. அவ்வியாத்தி இலக்கியத்தி னேகதேசத்தின் இலக்கணமில்லாமை: அது 'ஆவிற்குக்கபிலநிறத் தன்மை.' அதிவியாத்தி இலக்கியமல்லாததன்கண்ணுமிருப்பது: அது 'ஆவிற்குக்கோடுடைமை'. அசம்பவம் இலக்கியமுழுதிலுமின் மை: அது 'ஆவிற்கு ஒற்றைக்குளம்புடைமை' என்க. குணமுடைமை திரவியத்திற் கிலக்கணமென்றல்பொருந்தாது, முதற்கணத்திற்றோ ன்றி அழிவுடைக்குடத்திலே அவ்வியாத்திக்குற்றம் வருமாலோவெ னின்;—அற்றன்று, குணத்தோடொருங்கு நிற்பதாயஉண்மைத்தன் மையின்வேறாய சாதியுடைமை என்பது கருத்தாகலின்என்க. அற் றேல், 'உருவமொன்று சுவையின்வேறு' என்னும்வழக்குண்மையின், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்ற ன்று, ஒருபொருளோடு ஒற்றித்துநிற்றலால் அதுபற்றியே அவ்வாறு வழங்குவதல்லது பண்பிற்குப் பண்புகோடல் பொருந்தாமையின்.

* இனிப்பொருட்கு இலக்கணங் கூறுமுகத்தானே இலக்கணத் திற் கிலக்கணங்கூறிய தொடங்கிற்று. பொருட்கிலக்கணமாவது இயல்பெனவும், அதன் இலக்கணம் இயல்புளவும் கோடற்பாற்று. பொருண்மைச்சாதி, பொருண்மையாகிய சாதியெனவிரியும். பொ ருண்மை - பொருளாதற்றன்மை. அஃதாவது மண்முதலிய திரவி யம் ஒன்பதினும் ஒப்பநிற்பதோர்பொதுத்தன்மை. அஃதோர்சாதி எனப்படும். பாயிரத்துக்காண்க. குணம்—நாற்றம் உருவமுதலியன. உடைமை—உடைத்தாதற்றன்மை. பொருண்மைச்சாதி என்பது பொருட்கு இலக்கணம்ஒருதலையான்வேண்டற்பாற்று என்றவாறு. பொருளை வேறுபடுத்துணர்தற்கும் எடுத்தாளுதற்கும் இலக்கணம் வேண்டுவதாகலான் என்க. இதன்பொருட்டு எனப்படும்பயன் இன்றி யின் இலக்கணமும் இன்றாகல்வேண்டுமென்பது.

*அச்சிறப்பியல்பினுள் ஒன்றாய 'பிறவற்றினின்றும் வேறுபடுப் பதே' எனத்தந்துரைக்க. வேறுபடுத்தலினும் அபிதேயத்தன்மை

முதலியவற்றிலும் அதிவியாத்திவரும். என்னை? வேறுபடுப்பதாய இயல்பு, இலக்கியத்தன்மையைவரைந்து கொள்வதனோடு நியதமாய் ஒப்பநிற்பதுபோல, வேறுபடுத்தற்றன்மை முதலியவும் இலக்கியத்தன்மையை வரைந்து கொள்வதனோடு நியதமாய் ஒப்பநிற்பனவே யாகலான்.

* வேறுபடுத்தலை விதந்துபிரித்துக்கூறியது அநாவினமதத்தில் வேறுபடுப்பதாகவும் பிராசீனமதத்தில் வழங்குதற் பயத்ததாகவும் சொல்லப்படும் என்பது தெரித்தற்பொருட்டு. வேறுபடுத்தல், வேறுபடுப்பதை நோக்க இலக்கணத்திற்குப் பயனும், வழங்குவதை நோக்க இலக்கணமாகவும், வழங்குவது பயனுக்குப் பயனாகவும் கருதக்கிடந்தல் காண்க. வேறுபடுத்தல் இயல்பு, வேறுபடுப்பது இயல்பி. இயல்புஎனினும், தருமம்எனினும், தன்மைஎனினும் ஒக்கும். இயல்பி, தருமியென்பன ஒருபொருட்கிளவி. பண்பிற்குப்பண்பு இன்று எனவும் தருமத்திற்குத் தருமம் உண்டெனவும் சொல்லப்படும். அதின்வேறாய - வேறுபடுத்தலின்வேறாய. வேறாய, என அடைகொடுக்கற்பாற்று என்பது வேறாயஇயல்பு, வேறுபடுத்தற் பொருட்டேயாகலின், வேற்றியல்பாய வேறுபடுப்பதே இலக்கணம், அல்லன இலக்கணமல்ல எனக்கோடற்பாற்று என்றவாறு. வழங்குவதூஉம் இலக்கணத்திற்குப் பயனாக்கொள்ளின் எனவே அஃது இலக்கணம்பயனுடைத்தென்றற்கும், அப்பயன்றான்வழங்குதல், வேறுபடுத்தல் என இருவகைத் தென்றற்கும் ஞாபகமாயவுணர்க. ஞாபகம் - அறிவிப்பது.

* அவ்வடைவேண்டாஎன்பதுவழங்குவதூஉம்இலக்கணத்திற்குப் பயனாக்கொள்ளின், வேறுபடுத்தலும் வழங்குதற்பொருட்டேயாகலின், வேறுபடுத்தற்றன்மையும் இலக்கணம் எனவே கோடற்பாற்றென்றவாறு. பிறவற்றிற்கும் இஃதொக்கும். எனவே எவ்வியல்.



பாயினுமாக வேறுபடுத்தலாதல், வழங்குதலாதல் ஓர்பயனுடைத்தாய், இலக்கியத்தன்மையை வரைந்து கொள்வதனோடு நியதமாய் ஒப்பநிற்பதே இலக்கணம் என்பதூஉம், அவ்வாறு நின்ற இலக்கணமாகும் இயல்புகளுள் ஒன்றைவிலக்கி ஒன்றைக்கோடல் பொருந்தாது என்பதூஉம் இதனாற்போந்த பயனாதல் காண்க.

*குணமுடைமை திரவியத்திற் கிலக்கணம் என்றதற்குக் கருத்து, எனை இவையும். அழிவுபடுங்கூட்டத்திலே அவ்வியாத்திக்குற்றம் தங்கும், ஆண்டுக்குணம் வாராமையின். திரவியந்தோன்றி ஒன்றிரண்டு கணமானபின்பன்றி அதன்கட் குணம் வாராதென்பது தருக்கநூற்றுணிவு. பாயிரத்துக்காண்க.

*திரவியத்தன்மை என்றது அடைகொடுத்துச் சாதி என்றது இலக்கணமும் இலக்கியத்தன்மையும் ஒன்றாகாமை தெரித்தற் பொருட்டு. இலக்கியத்தன்மையாவது இலக்கணத்தான் வரைந்து கொள்ளப்படும் தன்மை என்பது.

*உண்மைத்தன்மையின் வேறாய என்றொழியாது குணத்தோடொருங்குநிற்பதாய் என்றது உண்மைத்தன்மையின் வேறாய சாதிக்குக் குணகருமங்களின் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. நிற்பதாய் வேறாய என ஒட்டுக.

*கூறியதொன்றன்கட் குற்றம்வரின் அடைகொடுத்தலாற் பரிகரித்தன் மரபாமாறு பிறாண்டும் வருவது காண்க, பாயிரம் பார்க்க.

*கருத்தெனவே, தோன்றியபொழுதே யழிவுபடுவதன்கண் குணமின்றேனும் குற்றமின்று, ஆண்டுள்ள சாதிகுணத்தோடொருங்கு நிற்பதாவதே சாலுமாகலான்.

*குணந் தானுள்வழி இலக்கணமாவதாவது குணத்திற்குத் திரவியம் இடனாதற்றன்மை.

*உருவமுதலியவற்றின்கண் திரவியத்தின் குணமுடைமையாய இலக்கணத்திற்கு அதிவியாத்திவரும் என்றது, வழக்குண்மையின், ஒன்றுமுதலிய குணமுடையனபோலத் தோன்றலின், உருவமுதலியன, ஒன்றுமுதலியகுணத்தோடு ஒருங்குநிற்பதாயும், உண்மைத் தன்மையின் வேறாயும், உள்ளசாதியை யுடையனவாகலான். ஒரு பொருளொடு ஒற்றித்து நிற்றலாவது ஒன்றுமுதலியவும் உருவமுதலியவும் ஒருதிரவியத்தின்கண் ஒன்றுபட்டு நிற்றல் என்பது. ஒற்றித்து, சமவேதித்து, ஒன்றுபட்டு என்பன ஒருபொருட்பன்மொழி.

௩. வடிவஞ் சுவையிரு நாற்ற மூறொன்
ணளவு வேற்றுமை புணர்ச்சி பிரிவு
முன்மை பின்மை திண்மை நெகிழ்ச்சி
சிக்கென வோசை யுணர்ச்சி யின்பந்
துன்பம் விருப்பம் வெறுப்பு முயற்சி
யறமறம் வாதனையொடு குணமறு நான்கே.

(இ - ள்.) குணம் உருவம், இரதம், கந்தம், பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, வெறுப்பு, முயற்சி, தர்மம், அதர்மம், வாசனை என இருபத்துநான்கு வகைத்து. (எ - று.) சிக்கெனல் - சிநேகம்.

குணம். எ - து. குணங்களைப் பகுக்கின்றது. குணமாவது திரவியம் கருமம் என்றுமிரண்டற்கும் வேறாய்ப் பொதுவியல்புடையது, குணத்தன்மையாகிய சாதியுடையதெனினுமாம். அற்றேல், எண்மை, மென்மை, வன்மைமுதலியனவும் உண்மையின், குணம்



இருபத்துநான்கென்றதென்னையெனின்;— அற்றன்று, திண்மையின் அபாவமே எண்மையாகலானும், அவயவக்கூட்டவிசேடமே மென்மைவன்மைக ளாகலானு மென்க.

௪. எழும்பல் விழுதல் வளைத னிமிர்த
னடத்த லுடனே கருமமை வகைத்தே.

(இ - ள்.) கருமம் எழும்பல், வீழ்தல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என ஐவகைத்து. (எ-று.)

கருமம். எ-து. கருமத்தைப் பகுக்கின்றது. கருமமாவது சையோகத்தின் வேறாய்ச் சையோகத்திற்கு அசமவாயிகாரணமாயுள்ளது, கருமத்தன்மையாகிய சாதியுடையதெனினுமாம். சுழற்சிமுதலியன நடத்தலின் அடங்குமாகலின், ஐந்தென்றல் பொருந்துமாறுணர்க.

*சையோகத்தின் வேறாய் என்றது, சையோகமும் சையோகத்திற்கு அசமவாயிகாரணமாகலின், அதன்கண் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. அசமவாயி, இதனைக்காரணங்கூறுழிக் காண்க.

௫. பொதுமை மேல்கீ ழெனவிரு வகையே.

(இ - ள்.) சாமானியம் பரம், அபரம் என இருவகைத்து.

சாமானியம். எ-து. சாமானியத்தைப் பகுக்கின்றது. மிகுதியினிருப்பது பரசாதி. குறைவினிருப்பது அபரசாதி. சாமானியம் முதலிய நான்கினுஞ் சாதியின்று.

௬. மன்னிய பொருளின் கண்ணவா யவற்றின்
வேற்றுமை தெரிப்பன பலவாஞ் சிறப்பே.

(இ - ள்.) விசேடம் நித்தியப்பொருள்களினிருப்பன. அவை எண்ணிறந்தனவேயாம். (எ-று.)

விசேடம். எ-து. விசேடத்தைப் பகுக்கின்றது. நித்தியப்பொருள்களாவன பிருதிவிமுதலிய நான்கின் பரமாணுக்களும், ஆகாய முதலிய ஐந்துமாம்.

௭. ஒற்றுமை யாப்பஃ தொன்றே யென்க.

(இ - ள்.) சமவாயம் ஒன்றுதானே. (எ-று.)

சமவாயம். எ-து. சமவாயத்திற்கு வேறுபாடு இல்லை யென்கின்றது.

௮. முன்னின்மை பின்னின்மை முற்று மின்மை
யொன்றினொன் றின்மையென் றின்மை நான்கே.

(இ - ள்.) அபாவம் முன்னபாவம், அழிவுபாட்டபாவம், முழுதுமபாவம், ஒன்றினொன்றபாவம் என நான்குவகைத்து. (எ-று.)

அபாவம். எ-து. அபாவத்தைப் பகுக்கின்றது.

---

## ௩. திரவியம்.

௧. மண்ணீ ரனல்கால் முறையே நாற்றந்
தட்பம் வெப்ப முற்ற மாகி
மெய்ப்பொரு ளழிபொருள் மேவு மென்க.
அணுக்கள் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்
பிருதிவிநித்திய வநித்திய வனம் பெறும்
நிலையனுப் பொருணிலை யில்லது காரியம்
அதுவே:—



உடல்பொறி விடய மூவகைப் படுமே
நம்மனோர் யாக்கை மண்கூற் றுடம்பு
நாற்றங் கவர்வது நாசியி னுனியே
மண்கல் முதலிய விடய மாகும்.

(இ - ள்.) இனி இவற்றினியல்பாவன:—

பிருதிவியாவது நாற்றமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம்; அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடயவேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் நம்மனோர்க்குள்ளது. இந்திரியம் கிராணம்; நாற்றத்தைக் கவர்வது. அது நாசிநுனியில் இருப்பது. விடயம் மண், கல் முதலியனவாம்.

பிருதிவியாவது. எ - து. உத்தேசமுறையானே, முதற்கட் பிருதிவியினிலக்கணங் கூறுகின்றது. உத்தேசம் பெயர்மாத்திரையானே பொருளை எடுத்துரைத்தல். யாண்டும் உத்தேசமுறைமைக்கு இச்சையே காரணம். நாற்றமுடைமை பிருதிவியினிலக்கணமாயின், நறுநாற்றப்பொருளும் தீநாற்றப்பொருளுமாகிய அவயவங்களான் ஆக்கப்படுந்திரவியத்தின் ஒன்றுக்கொன்றுமாறுபாட்டால் நாற்றமுண்டாகாமையின், அவ்வியாத்திக்குற்றந்தங்கும்; ஆண்டு நாற்றத்தோற்றம் பொருந்தாதென்னற்க, அவயவநாற்றம் புலப்படுதலின், அவ்விரண்டன் கூட்டத்தாகிய கலப்புநாற்றமொன்றெனக் கோடல் பொருந்தாமையின்; இன்னும், தோன்றிய பொழுதே அழிவுபடுங்குடத்தினும் அவ்வியாத்தி வருமாலெனின்;— அற்றன்று, நாற்றத்தோடு ஒருங்கிருக்கும் பொருண்மைக்கு அபரமான சாதியுடைமையென்பதே கருத்தாகலின். அற்றேல், நீர்முதலியவற்றின் நாற்றம் புலப்படுதலின் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, உடன்பாட்டானும் எதிர்மறையானும் ஆண்

டெப், பிருதிவிநாற்றமே கொள்ளக்கிடத்தலின். அற்றாயினும், காலம் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாகலின் எல்லாவிலக்கணங்கட்கும் காலத்தின்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாதற்கேதுவாய சம்பந்தத்திற்கு வேறாய சம்பந்தத்தானே இலக்கணத்திற்குரிமை கோடலின்.

*உத்தேசம் உபதேசமுறையின் ஒன்று. அதனை, வேதாந்த நூலெல்லாம் விளங்க நன்குணர்த்தும் வேதாந்தசூளாமணியினாலின், "அனையவனதிகாரம்" "அறியவுணர்த்துதும்" என்னும் செய்யுட்களிற் காண்க.

*உத்தேசமுறை "மண்புனலனல்கால்வெளி" என்னுஞ் சூத்திரத்தின்கட் பெறப்படும் நிறுத்தமுறை என்க.

*ஒருங்கிருக்கும் சாதியென ஒட்டுக. பொருண்மை, ஈண்டுத் திரவியத் தன்மை.

*உடன்பாட்டாற் கொள்ளக்கிடத்தலாவது, யாண்டு நாற்றமுண்டு ஆண்டுப்பிருதிவி யுண்டு என்பது.

*எதிர்மறையாற் கொள்ளக்கிடத்தலாவது, யாண்டுப் பிருதிவியின்று ஆண்டு நாற்றமின்று என்பது என்க.

*உரிமை-பற்றுக்கோடாதற்குத் தகுதி, ஏதுவாந்தன்மை, ஏற்புடைமை.

அது நித்தம். எ - து. பிருதிவியைப் பகுக்கின்றது. அழிவுபாட்டபாவத்திற்கு எதிர்மறையாகாதது நித்தம். அதற்கு எதிர்மறையாவது அநித்தம்.

*அழிவுபாட்டபாவத்திற்கு எதிர்மறையாகாதது - அழிவுபாடில்லாதது.



மறித்தும். எ - து. வேறோராற்றாற் பகுக்கின்றது. சரீரம் ஆன்மாவின் போகத்திற்கிடம். எதனால் வரைந்துகொள்ளப்பட்ட ஆன்மாவிற்குப் போகம் நிகழும், அது போகத்திற்கிடம்; அதுவே சரீரமென்பதாம். போகமாவது இன்பத்துன்பங்கள் புலப்படத் தோன்றல். சத்தமல்லாத உற்பூத விசேடகுணங்கட்குப் பற்றுக்கோடாகாது, ஞானத்திற்குக் காரணமாய மனக்கூட்டத்திற்குப் பற்றுக்கோடாயுள்ளது இந்திரியம். சரீரமும் இந்திரியமுமல்லாத எல்லாம் விடயமென்க. எனவே, நாற்றமுடைய சரீரம் பிருதிவிசரீரம், நாற்றமுடைய இந்திரியம் பிருதிவியிந்திரியம், நாற்றமுடையவிடயம் பிருதிவிவிடயமாதல் இலக்கணமென்பது பெற்றாம்.

*பற்றுக்கோடாகாதென்றது செவி ஒழிந்த பொறி பற்றுக்கோடாவதின் வேறாகலான். நாற்றமுடைய இந்திரியம் எனவே பற்றுக் கோடாகாது என்றதற்கு மாறுகொள்ளுமாற் பிறவெனின்; ஆண்டு நாற்றம் அநுற்பூதமாகலிற் கொள்ளாது என்க. உற்பூதம், இதனை உருவமுதலிய நான்கன்றன்மை கூறுமிடத்தறிக.

சரீரம். எ - து. பிருதிவிசரீரம் இதுவென்கின்றது.

இந்திரியம். எ-து. இந்திரியம் இதுவென்கின்றது. 'கிராணம்' எனப் பெயர் கூறி, 'நாற்றத்தைக் கவர்வது', எனப் பயன்கூறியவாறு, 'நாசி நுனியில்' எனப் பற்றுக்கோடு கூறியவாறு. இவ்வாறு மேலுமுய்த்துணர்க.

விடயம். எ - து. விடயம் இதுவென்கின்றது.

கக. நீரிறை வரைப்பிற் கட்டுநே ருடம்பு
சுவைத்திறங் கவர்வது நாவி னுனியே
கடல்யா றாதி விடய மாகும்.

*கட்டு—கண்ணது.

*சண்டுக் கூறுதொழிந்த இலக்கணம் மேற்சூத்திரத்தினின்றுங் கொணர்ந்து ஒட்டிக்கொண்டுணர்க. முன்னர் வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

(இ - ள்.) அப்புவாவது குளிர்ந்த பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம். அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடயவேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் வருணலோகத்திலுள்ளது. இந்திரியம் இரசநம்; சுவையைக் கவர்வது. அது நாவினுனியிலிருப்பது. விடயம் ஆறு, கடல் முதலியனவாம். (எ - று.)

அப்புவாவது. எ-து. அப்பிலக்கணங்கூறுகின்றது. தோன்றிய பொழுதே அழிவுபடும் நீரின்கண் அவ்வியாத்தி நீக்குதற்குக் குளிர்ந்த பரிசத்தோடு ஒருங்கிருக்கும் பொருண்மைக்கு அபரமான சாதியுடைமையென்பது கருத்தாகக் கொள்க. 'தண்ணென்றது சிலாதலம்', என்புழித் தட்பந்தோன்றுதல் நீரின் சம்பந்தத்தாலாகலின், ஆண்டு அதிவியாத்தியின்மையு முணர்க. ஏனையவொற்றும் முன்னுரைத்தவாறுரைத்துக்கொள்க.

*ஒருங்கிருக்குஞ் சாதி என மேலும் ஒட்டுக. குற்றமின்று, சாதி பரிசத்தோ டொருங்கிருப்பதாவதே சாலுதலான்.

(கக) கதிரோன் வரைப்பிற் கட்டன லுடம்பே
யுருவங் கவர்வது கருமணி விழியே
மண்விண் வயிறு கரநால் விடயம்.

(இ - ள்.) தேயுவாவது சுடும்பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம். அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடயவேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் சூரியலோகத்துள்ளது. இந்திரியம் சக்ஷு; உருவத்தைக் கவர்வது. அது கண்ணுறை கருமணியினுனியினிருப்பது. விடயம் மண்ணிலுள்ளதும், விண்ணிலுள்ளதும், வயிற்றிலுள்ளதும், ஆகரத்திலுள்ளதும் என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்து. அவற்றுள், மண்ணிலுள்ளது நெருப்புமுதலியன. விண்ணிலுள்ளது மின்முதலியன, அவை நீரையே இந்தனமாகவுடையன. வயிற்றிலுள்ளது உண்டவுணவு பரிணமித்தற்கு ஏதுவாயிருப்பது. ஆகரத்திலுள்ளது பொன்முதலியனவாம்.



தேயுவாவது. எ-து. தேயுவிலக்கணங்கூறுகின்றது. 'நீர்சுடுகின்றது' என்புழிச் சுடு புலப்படுதல் தேயுவின் சம்பந்தத்தாலாகலின், ஆண்டதிவியாத்தியின்மையுமுணர்க.

விடயம் மண்ணிலுள்ளதும். எ-து. விடயத்தைப் பகுக்கின்றது. சுவர்ணம் பிருதிவியின்கூறு, பீதத்துவமாயும் குருத்துவமாயும் இருக்கையால், அரிசனம்போலே எனின்;—அற்றன்று, எரிகின்ற தழல் கூடியவழி நெய் முதலியவற்றின் நெகிழ்ச்சிக்குணத்திற்கு அழிவு காண்டலாலும், நீரினிடைநின்ற நெய்யின்கண் நெகிழ்ச்சிக்கு அழிவு காணாமையாலும், தடையில்லாதவழி எரிதழலின் கூட்டங்காரணமாகப் பார்த்திவநெகிழ்ச்சிக்கு அழிவுபாடாகிய காரியம் பிறத்தல் துணியப்படுவதாம்; ஆகவே பொன்னிற்கு எரிதழல் கூடியவழியும் அழிவுபடாத நெகிழ்ச்சிக்கிடமாயிருத்தலால், பிருதிவியின் கூறென்றல் பொருந்தாமை பெற்றாம். பெறவே, ஆண்டுப் பொன்மைநிறமுடைய திரவியத்தினெகிழ்ச்சி அழியாமற்றடுப்பதற்கு நெகிழ்ச்சியுடைத் திரவியம் வேறொன்றுண்டெனல் வேண்டும், வேண்டவே, அஃது ஒரு நிமித்தத்தானாய நெகிழ்ச்சிக்கிடமாயிருத்தலின் இயல்பானே நெகிழ்ச்சியுடைய நீரின்கூறென்றலும், உருவமுடைமையின் வாயுமுதலியவற்றின் அடங்குமென்றலும் பொருந்

தாமையின், தேயுவின் கூறுதல் பெறப்பட்டதென்க. அதன்வெம்மைப்பரிசமும் ஒளிரும்வெண்மையும் புலப்படாமை, அதனைப் பொதிந்த பிருதிவிக்கூற்றினுருவமும் பரிசமும் அவற்றைத் தடுத்தலானென்க.

*ஆண்டு—தழல்கூடிய வழி. பொன்மைநிறமுடைய என்பது அநுமானங் கூறியவாறு. என்னை பெறுதும் எனின்காட்டுதும். அழிவுபடாத நெகிழ்ச்சி ஏது, பொன்மைநிறமுடைய திரவியம் பக்கம், அஃதாவது ஐயுற்றுத்துணியும் பொருட்கிடன், நெகிழ்ச்சியுடைத்திரவியம் வேறொன்று உண்டெனல்வேண்டும் மேற்கோள் எனக்கருதக் கிடத்தலின் என்க.

*வேறொன்றுஎன்பது பிருதிவி,பொன்மைநிறமுடையது என்னும் இரண்டுமல்லாத பிறிதொன்று. தடுப்பது பொன்மைநிறமுடையதே என்றாலோஎனின்;—அற்றன்று, துணிபொருட்கிடனுவதைத் துணிபொருள் என்பது பொருந்தாமையொடு அவ்வாறு கூறுதற்கு முன்னர்ப்பெறப்படும் துணிவு மாறுகொள்ளுமாகலான். துணிவாவது பொன்மைநிறமுடையது பிருதிவியின் கூறுமுடைத்தாகலின் தேயுவன்று என்பது.

*வேண்டுவது நெகிழ்ச்சியுடைத் திரவியமாகற்பாற்று; அன்றியின், நெகிழ்ச்சி அழிவுபடாமற்றடுக்கப்படுவதின்மையான்.

*பொன்மைநிறமுடைய திரவியமாவது பிருதிவியின் கூறும் தேயுவின்கூறும் கூடியாயதொன்று எனக்கொள்ளக் கிடத்தல் காண்க.

கஉ. வளியிறை வரைப்பிற் கட்டொரு வுடம்பே
பூற்றங் கவர்வது மீங்தோ லென்க



விடய மரமுத லசைதற் கேதுவே
பிராண னுடலகத் தியங்குங் காற்றே.

(இ - ள்.) வாயுவாவது உருவமின்றிப் பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம். அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீரஇந்திரிய விடயவேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் வாயுலோகத்திலுள்ளது. இந்திரியந்துவக்கு; பரிசத்தைக் கவர்வது; அது சரீரமெங்குமிருப்பது. விடயம் மரமுதலியன அசைதற்கு ஏதுவாயுள்ளது. சரீரத்தினகத்துச் சஞ்சரிக்கும் வாயுப் பிராணனெனப்படும்; அஃது ஒன்றாயினும், உபாதிவேறுபாட்டால், பிராணன், அபானன் முதலிய பெயர்பெறும். (எ-று.)

வாயுவாவது. எ - து. வாயுவிலக்கணங்கூறுகின்றது. ஆகாய முதலியவற்றின் அதிவியாத்திநீக்குதற்கு 'பரிசமுடையது' என்றும், பிருதிவி முதலியவற்றின் அதிவியாத்திநீக்குதற்கு 'உருவமின்றி' என்றும் கூறப்பட்டது.

சரீரத்தினகத்து. எ-து. பிராணன் யாண்டடங்குமென்னும் கடாவிற்குவிடை கூறுகின்றது. 'அஃது'. எ-து. பிராணனொன்றே, இடவேறுபாட்டால் பிராணன் அபானன்முதலிய பெயர்களான், வழங்கப்படுமென்றவாறு. வாயுவுண்மை பரிசத்தான் அநுமிக்கப்படும். அங்ஙனமன்றே, வளியுளருங்கால் வெப்பமுந்தட்பமுமில்லாத பரிசம் புலப்படுமன்றே; அப்பரிசம் ஒருபொருளைப்பற்றியே நிற்கும், உருவம்போற் குணமாகலின்; அதற்குப் பற்றுக்கோடு பிருதிவியென்பது பொருந்தாது புலப்பட்டபரிசமுடைய பிருதிவியின் கூற்றிற்குப் புலப்பட்டவுருவமுடைமை நியமமாகலின், நீர் தேயுக்களுமன்று தட்பமும் வெப்பமுமின்றியிருத்தலின், வியாபகப் பொருணான்குமல்ல அவற்றுள் ஒன்றன்குணமாயின் எங்கும்

புலப்படுமென்னல் வேண்டுதலின், மனமுமன்று பரமாணுவின் பரிசம் இந்திரியத்திற்குப் புலனாகாமையின், ஆதலால் அனுபவிக்கப்படும் பரிசத்திற்குப் பற்றுக்கோடியாது அது வாயுவென்றறிக. அற்றேல், வாயு அனுமிக்கற்பாலதென்றதென்னை? குடம்போலக் காட்சிப்பரிசத்திற்குப் பற்றுக்கோடாகலிற் காட்சிப்பொருளேயாமாலோவெனின்;—அற்றன்று, ஆண்டு உற்பூதவுருவமுடைமை உபாதியாகலின், அது திரவியமாய புறவிந்திரியக் காட்சிப்பொருளாயிருக்கும் இடமெங்கும் உற்பூதவுருவமுண்டெனச் சாத்தியத்தில் வியாபித்தலும், வாயுவாகிய பக்கத்தின்கட் கூறிய ஏதுவின் வியாபியாமையும் அறிக. அற்றேல், வெய்ந்நீரின்கண்ணதாகிய தேயுவும் காட்சிப்பொருளன்றாதல் வேண்டுமாலெனின்;— நன்றுசொன்னாய், அதுவே எமது கோட்பாடென்க. இவ்வளம் கூறியவாற்றால், உருவமின்மையின் வாயுக் காட்சிப்பொருளன்றென்பதறிக.

*யாண்டடங்கும் என்பது சஞ்சரிக்கும் வாயு பிராணன் எனப்படும் என்பதற்குப் பிராணன் சரீர முதலிய மூன்றனுள் விடயத்தினடங்கும் என்பது கருத்தெனக் கொள்க என்றவாறு.

*நியமம் - பிறழ்ச்சியின்மை.

*எங்கும் - உளருமிடத்தன்றி யாண்டும்.

*அனுமித்தல் - ஆராய்ந்து துணிதல்.

*காட்சிப்பரிசம்-காட்சியுணர்விற்குப் புலனாகும் பரிசம், காட்சியான் அறியப்படும் பரிசம். காட்சிப்பொருள் என்பதற்கும் இஃதொக்கும்.

*உபாதி என்பது துணிபொருள் உள்வழி இன்றியமையாதுளதாய் ஏது உள்வழி இலதாவது.



*புற இந்திரியம் - மனமல்லாத பொறி.

*புறவிந்திரியக் காட்சிப்பொருளென்றது திரவியமாய என்னுமடைகொடுத்துக் கூறியது, உருவமுதலிய குணத்தின்கண் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. ஈண்டு அதிவியாத்தியாண்டையதெனின் புற இந்திரியக் காட்சிப்பொருளெனவே அதன்கண் உருவமுதலிய குணமும் அகப்பட்டுநிற்றலான் ஆண்டையதென்க. குணமும் பொருள் எனப்படுதலான் பதார்த்தம், திரவியம் என்னுமிரண்டனுள் பொருள் என்பதின்னது என்பதை இடனோக்கித் தெரிந்துகொள்க.

*உருவம் சாத்தியத்தில் வியாபித்தலாவது, குடமுதலிய திரவியத்தின்கண் இருப்பதாவது; ஏதுவின் வியாபியாமையாவது, ஏதுவாய பரிசத்திற்கு இடனாகும் வாயுவின்கண் இல்லதாவது.

*காட்சிப்பரிசத்திற்குப் பற்றுக்கோடாகலின் என்னும் ஏது உபாதியுடைமையான் துணிபொருள் இல்வழியும் இருப்பதாதல் தெற்றென விளங்கலின் அது துணிபொருளைத் துணிவிக்க மாட்டாதாய்ப் போலியாய் ஒழிதலின் ஏது எனக்கோடற்பாற்றன்மையுணர்க. முன்னர் வியாப்பியத் தன்மைய சித்தங்கூறுமிடத்துப் போலியாவதறிக. உபாதியாவது ஏதுவைப் போலியாக்க வல்லதாவது என்க.

*வெந்நீரின்கண்ணதாயதேயுவும் காட்சிப்பொருளன்று ஆண்டு அதற்கும் உருவமின்மையான்.

இனிக் காரியமாகிய பிருதிவி முதலிய நான்கிற்றோற்றவொடுக்கமுறையாமாறு:—இறைவன் உலகைத் தோற்றுவிப்பாம் என்னும் இச்சையத்தாற் பரமாணுக்களிற் கிரியையுண்டாம்; அதனும்

ஞர் பரமாணுவிரண்டுகூடித் துவியணுகந்தோன்றும். துவியணுகம் மூன்றுகூடித் திரியணுகமாம்; இவ்வாறே சதுரணுகமுதலியன முறையானே தோன்றுதலின், மாபிருதிவி, மாவப்பு, மாதேயு, மாவாயுக்களாம். இவ்வாறு தோன்றிய பொருள்களை ஒடுக்குவாம் என்னும் இச்சைவயத்தாற் பரமாணுக்களிரண்டின் கூட்டத்திற்கு அழிவுபாடுண்டாங்கால் துவியணுகம் அழியும், அதன் பின்னர்த் திரியணுகம் சதுரணுகமென்ன, இவ்வாறே மாபிருதிவி முதலியன அழியுமென்றுணர்க. அசமவாயிகாரணவழிவுபாட்டால் துவியணுகம் அழியும், சமவாயிகாரணவழிவுபாட்டால் திரியணுகம் அழியுமென்பது சம்பிரதாயம். யாண்டும் அசமவாயிகாரணவழிவுபாட்டானே திரவியத்திற்கு அழிவுபாடென்பர் நவீனர்.

*சமவாயி, இதனையும் போக்கிக் காண்க.

*அணுகம் = அணுவின் காரியம்.

*நவீனர் - பின்னோர்

*பிராசீனர் - முன்னோர்.

பரமாணுவுண்மைக்குப் பிரமாணம் என்னெனிற் கூறுதும். 'சாளரத்தினுழையும் என்றூழ்க்கதிரின்கண் மிகநுண்ணியதாகித் தோன்றுவதியாது, அஃது அவயவத்தோடுங்கூடியது, குடம்போலக் கட்புலப்படும் பொருளாகலின்' எனத் திரியணுகவுண்மை பெறுதும். 'திரியணுகத்தின் அவயவமும் அவயவத்தோடு கூடியது, நூல்போலப் பெரிதைத்தோற்றுவிப்பதாகலின்' என்பதனால் துவியணுகமுண்மை பெறப்பட்டது. துவியணுகத்திற்கு அவயவம் யாது அதுவே பரமாணு, நித்தமாயுள்ளது. அதுவுங் காரியமெனின், வரம்பின்றியோடுமென்க. தோற்றமொடுக்கமுண்மைக்கு "புனருற்பவம், வருமாறுணர்த்தநுதலிற்று" என்பது முதலிய சுரு



தியே பிரமாணம். காரியமான திரவியமெல்லாம் அழிவது அவாந்தரப் பிரளயமெனவும், காரியமான பாவபதார்த்தமெல்லாம் அழிவது மாப்பிரளயமெனவும், தெரிந்துகொள்க.

*பிரமாணம், இஃது இனிவருங்காண்க.

*கட்புலனாவது திரியணுகம் என்றது அதற்குக் கீழ்ப்பட்டது கண்ணிற்குப் புலனாவ தன்மையான்.

*வரம்பின்றியோடல் - துணிவுபெறாது நிற்றல்

*ஈண்டுச் சுருதியென்றது பவமறநந்திக்குப் பசுபதியருளிய சிவஞானபோதச் சிறப்பமை நூலினை என்க. அவாந்தரம் - காலத்தின் கண்ணிடை.

௧௫. விசும்பே காலந் திசையோ டான்மா
மனமிவை யைந்து நித்தியப் பொருளே.

(இ - ள்.) ஆகாயமுதலிய ஐந்தும் நித்தியப்பொருள். (எ-று.)

௧௬. ஓசைப் பண்பிற் றாகா யம்மே.

(இ - ள்.) ஆகாயமாவது சத்தகுணமுடையது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும். (எ - று.)

ஆகாயமாவது. எ-து. ஆகாயத்தி னிலக்கணங்கூறுகின்றது. 'ஒன்றாய்' எ - து. ஆகாயமும் பிருதிவி முதலியனபோலப் பலவெனக் கொள்ளற்கவென்றவாறு, பலவென்றதற்குப் பிரமாணம் இன்மையினென்பதாம். 'வியாபகமாய்' எ - து. ஒன்றென்றதனானே யாண்டும் நிகழ்தலின் வியாபகத்தன்மை கொள்ளற்பாற்றென்றவாறு. வியாபகமாவது வடிவுடைப்பொருளெல்லாவற்றினும் சையோகித்திருத்தல். வடிவுடைப்பொருளாதல் வரம்புப்பட்ட பரிமா

ணமுடைமை, தொழிலுடைமை யென்றலுமாம். 'நித்தமாய்' எ-து: வியாபகத்தன்மையானே ஆன்மாவைப்போல் நிலையுடைப்பொருளென்றவாறு.

௧௫. இறப்புமுதல் வழக்கிற் கேதுக் காலம்.

(இ - ள்.) காலமாவது இறப்புமுதலிய வழக்கிற்கு ஏதுவாயிருப்பது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும்.

காலமாவது. எ-து. காலத்தினிலக்கணங் கூறுகின்றது. காலம் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாயிருப்பது, எல்லாக் காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

௧௬. கிழக்குமுதல் வழக்கிற் கேதுத் திசையே.

(இ - ள்.) திக்காவது கிழக்கு முதலிய வழக்கிற்கு ஏதுவாயுள்ளது. அதுவும் ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும். (எ-று)

திக்காவது. எ-து. திக்கிலக்கணங் கூறுகின்றது. திக்கும் எல்லாக்காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

௧௭. அறிவுப் பண்பிற் றான்மா வெங்க
விறையே யீசன்முற் றறிவனோர் முதலே
யுயிர்தா னுடறொறும் வெவ்வே றாகும்.

(இ - ள்.) ஆன்மாவாவது ஞானத்திற்கு இடமாயுள்ளது. அது பரமான்மா, சீவான்மா என இருவகைத்து. அவற்றுள், பரமான்மா ஈசுரன், முற்றறிவன், ஒருவனே. சீவான்மா சரீரந்தோறும் வேறாய், வியாபகமாய், நித்தமாய் இருப்பன்.

ஆன்மாவாவது. எ-து. ஆன்மாவினிலக்கணங் கூறுகின்றது. அது. எ-து. ஆன்மாவைப் பகுக்கின்றது.



அவற்றுள்,பரமான்மா. எ-து. பரமான்மாவினிலக்கணங்கூறுகின்றது. நித்தமானஞானத்திற்கு இடமாதல் ஈசுரனிலக்கணம். அற்றேல், ஈசுரன் உண்டென்பதற்குப் பிரமாணமென்னை? அருவப்பொருளாதலாற் புறவிந்திரியக்காட்சியன்று, ஆன்மாக்களின் சுகதுக்க முதலியவற்றின் வேறாதலால் அகவிந்திரியக்காட்சியுமன்று, இலிங்கமின்மையான் அநுமானமுமன்றாலெனின்;—அற்றன்று, 'அங்குரமுதலியன கருத்தாவையுடையன, காரியமாகலின், குடம்போலும்' என்னுமநுமானம் பிரமாணமாகலான் என்பது. கருத்தா உபாதானத்தைப் புலப்படக்காணும் அறிவிச்சை செயல் களையுடையபொருள். உபாதானம் சமவாயிகாரணம். பரமாணுமுதலிய நுண்ணியபொருளெல்லாவற்றையுங் காண்டலின், ஈசுரன்முற்றறிவன்; "இறைவனு வான்ஞானமெல்லா மெல்லா முதன்மையுஞ் சிரசமெலா மியல்புடையான்" என்றற்றொடக்கத்தாகமமும் பிரமாணமெனவறிக.

*அருவமெனவே கண்ணிற்கும், பொருளெனவே ஏனையிந்திரியங்கட்குங் காட்சியின்மை போதரல்காண்க. பொருளென்றது ஈண்டுத் திரவியத்தை. என்னை? ஏனையிந்திரியக் காட்சியன்றாதல் சத்தமுதலிய குணங்கட்கின்று திரவியத்திற்கே யுண்டாகலான்.

*இலிங்கம்—குறி.

*ஈண்டு ஆகமம் என்றது தேனொழுகு திருவிருத்தச் சிவஞான சித்தியினை.

சீவான்மா. எ - து. சீவனிலக்கணங் கூறுகின்றது. சுகமுதலியனவுடைமை சீவான்மாவினிலக்கணம். அற்றேல், 'யான் மனிதன்' 'யான்பார்ப்பான்' என யாண்டும் யானென்னுமுணர்விற்குச் சரீரமே விடயமாகலின், சரீரமே ஆன்மாவெனிற்படுமெழுக்

தென்னையெனின்;—அற்றன்று, சரீரமே ஆன்மா என்பார்க்குக் கை கால்முதலிய சரீரம் நசித்தலால் ஆன்மாவும் நசித்ததெனல் வேண்டுமாகலினென்க. ஆயின் இந்திரியங்கள் ஆன்மாவென்றே மோவெனின்;—என்றும், 'குடத்தைக்கண்ட யானே இப்பொழுது குடத்தைத் தீண்டினேன்' என்றுந்தொடர்ச்சியறிவு நிகழாதொழிதல்வேண்டுதலின். ஒருவன் அநுபவித்ததனை மற்றொருவன் ஒட்டியுணர்தல் கூடாமையுணர்க. அதனால் ஆன்மா உடம்பு பொறி முதலியவற்றின் வேறெனப்படும், சுகமுதலியவற்றின் வேறுபாட்டான் உடம்புதோறும் வெவ்வேறெனவுணர்க. பரமாணுவெனின் உடம்புமுழுதும் வியாபித்த சுகதுக்கவநுபவங்கூடாதாகலானும், இடைப்பட்ட பரிமாணமுடையதெனின் அநித்தமாதல் வேண்டும், வேண்டவே செய்த வினை அழிந்து செய்யாத வினை தோன்றிற்றெனல் வேண்டுமாகலானும், அவ்வாறன்றி நித்தமாய் வியாபகமாயுள்ளது ஆன்மா வென்றுணர்க.

*தொடர்ச்சியாவது, கண்டவனே தீண்டினானாதல். நிகழாதொழிதற்குக் காரணம் காட்டிய அநித்தவாக்கியம் எழுந்தது என்க.

*வினையழிந்து தோன்றிற்று எனல்வேண்டும் என்றது நித்தமாய ஆன்மாவை அநித்தமெனவே முன்னரீட்டப்பட்ட வினை பின்னைப்போகத்திற் கேது என்பது பெறப்படுமாறின்மையான்.

*இவ்வாறு மாறுகொளக்கூறின் அதனை மாறுகொளக் கூறியதாய தருக்கஞ்செய்தலான்மறுப்பது இந்நூற்கியல்பாதல் உணர்க. இஃதே முன்னர்க் கூறப்படும் தருக்கம் எனப்படுவது என்க.

௧அ. மனமணு வடிவாய் வருமின் பாதி
யறிதற் கின்றி யமையாக் கருவி
யாகிப் பலவா யறிவின் றாறுமே.



(இ - ள்.) மனமாவது சுகம் முதலிய அநுபவத்திற்குக் கருவியாகிய இந்திரியம். அதுவும் உயிர்தோறும் நியதமாயிருத்தலின் அநேகமாய், பரமாணுரூபமாய், நித்தமாயிருக்கும். (எ - று.)

மனமாவது. எ-து. மனத்தினிலக்கணங்கூறுகின்றது. பரிசமின்றிச் செயலுடைத்தாதல் மனத்தினிலக்கணம்.

அதுவும் எ-து. மனத்தைப் பகுக்கின்றது. ஒவ்வோரான்மாவிற்கு ஒவ்வொருமனமாக, ஆன்மாக்கள் அநேகமாகலின், மனமும் அநேகமென்றவாறு. இடைப்பட்டபரிமாணமெனின் அநித்தமாய் முடியுமாகலின், 'பரமாணு' எனப்பட்டது. அற்றேல், மனம் வியாபகம், பரிசமில்லாத திரவியமாகலின், ஆகாயம்போலும் எனிற்படுமிழுக்கென்னையெனின்;—மனம் வியாபகமாயின் ஆன்மாவிற்கும் மனத்திற்குஞ் சையோகங்கூடாமையின், ஞானமுண்டாகாதாதல்வேண்டுமென்க. வியாபகப்பொருளிரண்டற்குச் சையோகமுண்டெனின்;—நன்று சொன்னாய், அச்சையோகம் நித்தமாகலின் உறக்கமின்றியிருத்தல்வேண்டும், சுழுமுனைநாடியின் வேறாய இடத்து ஆன்மாவிற்கும் மனத்திற்குமுளதாகிய சையோகம் எக்காலமும் உண்மையானென்க. அணுவாயின், 'மனஞ்சுழுமுனைநாடியின் ஒடுங்கிய காலத்துத் துயில் கூடும், ஒடுங்காத காலத்து அறிவு நிகழும்' என்பதனால் அணுவாதல் பெறப்பட்டது.

*சையோகங் கூடாதென்றது வியாபகப்பொருட்குப் புடைபெயர்ச்சியின்மையின். உறக்கமின்றியிருத்தல் வேண்டும் என்றது ஒடுங்காத வேறாயகாலத்துச் சையோகம் உண்மையான் அறிவு நிகழுமாகலான். அணுவாயின் என்னும் வாக்கியம் மேல்வாக்கியத்திற்கு விளக்கமாவது காண்க.

*அஃதேல் இஃது என்சொல்லியவாறோ எனின் வியாபகமாயின் மனதிற்கும் ஆன்மாவிற்கும் பிரிவுகூடாமையின் அறிவு நிகழும், நிகழவே உறக்கமின்றி யிருத்தல்வேண்டும். அணுவாயின் மனம் பிரிந்து சுழுமுனையின் ஒடுக்கும், ஒடுக்கவே அறிவு நிகழாமையின் துயில்கூடும். ஆகலான் மனம் வியாபகமன்று அணுவே என்பது சொல்லியவாறு என்க.

*மனம் என்பதிறுகப்போந்த சூத்திரம் இறைவன்பாலே இருந்தமிழ்கேட்டு முறை முதலிலக்கண மொழிந்தருண் முனிவரர் ஆசிரியர் அகத்தியனார் அருளிய சூத்திரம்.

## ௨. குணம்.

௧௬. கண்மாத் திரத்தாற் கவரப் படுகுண
மெண்ணி னுருவ மெய்த்தெறி நீர்மண்
பொன்மை வெண்மை புகைமை கருமை
செம்மை பசுமை சித்திர மெனவேழ்
வகையா மண்ணின் மருவு மேழு
நிகழும் வெண்மை நீர்தீ யிரண்டி
னிறைநீர் விளங்கி லில்லா தேயும்.

(இ - ள்.) உருவம் விழிமாத்திரத்தாற் கவரப்படுங்குணம். அதுவும் வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமை, புகைமை, சித்திரம் என்னும் வேறுபாட்டால் எழுவகைத்து. பிருதிவி அப்புத் தேயுக்களில் இருப்பது. அவற்றுள், பிருதிவியில் எழுவகையும் உள்ளது. நீரில் விளங்கா வெண்மை. தேயுவில் விளக்கமான வெண்மை. (எ - று.)

*வெண்மை உள்ளது எனக்கூட்டுக.



உருவம். எ - து. உருவத்தினிலக்கணங்கூறுகின்றது. எண்முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றும், உருவத் தன்மையாகிய சாதியின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றுங் கூறப்பட்டது. சித்திரரூபத்தை வேறு பிரித்ததென்னை? வியாபியாதிருக்குங் கருமைமுதலியவற்றின் கூட்டமே சித்திரரூபமாலோவெனின்;—அற்றன்று, வியாபித்திருத்தலே உருவத்திற்கு நியமமாகலின். அற்றேல், சித்திரலிங்கத்தில் அவயவவுருவு தோன்றுமென்றுமோ வெனின்;—என்னும், அவயவிக்கு உருவமின்மையான் ஆடை காட்சிப்பொருளன்றாதல் பெறப்படுமாகலின். காட்சியைப் பயப்பது உருவமென்னுது உருவுடைப்பொருளிற் சமவேதமெனக் கோடல் மிகையாமென மறுக்க. இதனானே ஆடை காட்சிப்பொருளாதல் வேறொன்றாற் பெறப்படாமையின், சித்திரவுருவம் உண்டென்பது பெற்றாம்.

*எண்முதலியவற்றின் அதிவியாத்திவரும் என்றது அவையும் விழியாற் கவரப்படுவனவாதலுடைமையான். அக்குற்றம், மாத்திரம் என்பதனான் நீங்கும் என்றது எண்முதலியன துவக்கானுங் கவரப்படுதலின் விழியாற்கவரப்படுதல் அவற்றிற் கிலக்கணமாதலே மாத்திரம் என்பது விலக்கிற்றலான். எண்முதலியவாவன:—சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம் என்பன.

*குணம் எனலான் நீங்கும் என்றது விழிமாத்திரத்தாற் கவரப்படும் என்பது உருவத்தன்மைக் காதலைத் தவிர்ப்பது குணம் என்பதாகலின். என்னை? தன்மைகுணமன்மையான். அவயவவுரு-திரவிய சமவாயிகாரணத்தினுள் உருவம், அஃதாவது வியாபியாதிருக்கும் கருமை முதலிய உருவென மேற்கூறப்பட்டது என்க.

*கோடலே மறுக்க என்றது, உருவுடைப்பொருளாகிய அவயவத்திற் சமவாய சம்பந்தத்தா னிருப்பதாய அவயவியே ஒற்றுமை பற்றிக் காட்சியைப் பயப்பது எனக்கோடன் மிகையாகலான்.

உ0. காண் சுவை நாவாற் கவரப் படுகுணங்
கார்ப்புப் புளிப்புக் கைப்புக் காழ்ப்பே
யினிப்புந் துவர்ப்பென் றிருமூன் றாகி
நீரி னினிப்பே நிலத்தா றுறுமே.

(இ-ள்) இரதம் நாவினாற் கவரப்படுங் குணம். அதுவும் தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் வேறுபாட்டால் அறுவகைத்து. மண்ணினும் நீரினும் இருப்பது. மண்ணில் அறுவிதமும்; நீரில் தித்திப்பொன்றே. (எ - று.)

இரதம். எ - து. சுவையினிலக்கணங்கூறுகின்றது. உருவம்முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாவினாற்கவரப்படுவது' என்றும், சுவைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றுங் கூறப்பட்டது.

மண்ணினும். எ - து. சுவைக்குச் சார்பு கூறுகின்றது.

உக. மண்மாத் திரத்தின் மருவி மூக்காற்
கவரப் படுகுணங் கந்த மாற்ற
நன்று தீதென் றிரண்டாய் நண்ணும்.

(இ - ள்) கந்தம் மூக்கினாற் கவரப்படுங் குணம். அதுவும் சுகந்தம் துர்க்கந்தம் என இருவகைத்து. பிருதிவியின் மாத்திரம் இருப்பது. எ - று.

கந்தம். எ - து. நாற்றத்தினிலக்கணங் கூறுகின்றது. நாற்றத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமு-



தலியனவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மூக்கினாற்கவரப்படுவது' என்றுங் கூறப்பட்டது.

உஉ. வெற்ற மீந்தோ லொன்றாற் கவரப்
பட்டுறு குணமது பரிசந் தக்கா
லுங்கி னின்று நனிரே வெப்ப
மிரண்டு மில்ல தெனமூன் றாகு
நீர்க் குளிர்ச்சி நெருப்பின் வெப்ப
மேனை யிரண்டிற் கிரண்டு மாமே.

(இ - ள்) பரிசம் துவக்கிந்திரியத்தான்மாத்திரம் கவரப்படுங் குணம். அது குளிர்ச்சி, சூடு, குளிர்ச்சியுஞ்சூடுமில்லது என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. பிருதிவி அப்புத் தேயு வாயுக்களில் இருப்பது. அவற்றுள், நீரில் குளிர்ச்சி, தேயுவில்சூடு, பிருதிவி வாயுக்களில் குளிர்ச்சியுஞ் சூடுமில்லாத பரிசம். எ - று.

பரிசம். எ - து. ஊற்றினிலக்கணங்கூறுகின்றது. பரிசத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், சையோகமுதலியனவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றுங் கூறப்பட்டது.

*கண்டோத்திரம் என்றதனாற் சையோகமுதலியன விழியானும் கவரப்படுதலின் பரிசத்தின் இலக்கணம் அவற்றிற்கு வாராதொழிதல் காண்க.

*குற்றம் வருமாற்றினையும் நீங்குமாற்றினையும் பிறண்டும் இவ்வாறே உய்த்துணர்ந்து கொள்க.

உங. உருவஞ் சுவையே யூறே நாற்ற
நெருப்பா னுங்கு நிலத்திற் றோன்றி

யழிவன வாமல் லவற்றியல் பாகி
யழிவன வழிவில வாம்பொருட் கேற்ப.

(இ-ள்) உருவமுதலிய நான்கும் பிருதிவியிற்பாகத்தாற்றோன்றுவனவாய், அநித்தமாயிருக்கும். மற்றவற்றிற் பாகத்தா னன்றி இயல்பாய், நித்தமும் அநித்தமுமாயிருக்கும். நித்தப்பொருளைச் சேர்ந்தவை நித்தம். அநித்தப்பொருளைச்சேர்ந்தவை அநித்தம். எ-று.

'பாகத்தான்' எ-து. பாகந்தேயுவின்கூட்டம். அதனான் முன்னுருவமழிந்து வேற்றுருவந்தோன்றுமென்றவாறு. ஈண்டுப்பாகம் பரமாணுக்களுக்கே, துவியணுகமுதலியவற்றிற்கன்று. ஆதலாற்பாகமாங்காலும் சூளையின் வைத்த குடத்திற் பரமாணுக்களுக்கு வேற்றுருவமுண்டாயவழிப் பசுங்குடங்கெட்டு மீளத் துவியணுகந் தோன்றுதல் முதலிய முறையானே செங்குடம் பிறக்கும். ஆண்டுப் பரமாணுக்கள் சமவாயிகாரணம், தேயுவின்கூட்டம் அசமவாயிகாரணம், சூட்டுமுதலியன நிமித்தகாரணம். துவியணுகமுதலியவற்றின் உருவத்திற்குக் காரணவுருவம் அசமவாயிகாரணமென்பர் பீலுபாகவாதிகளாகிய வைசேடிகர். பீலு அணுவென்பன ஒருபொருட்கிளவி. முற்குடத்துக்குக் கேடின்றியே பரமாணுமுடிவான அவயவங்களினும் அவயவியினும் ஒருங்கே வேற்றுருவம் பிறக்குமென்பர் பிடரபாகவாதிகளாகிய நையாயிகர். பிருதிவியின் பரமாணுக்களின் உருவமுதலியன அநித்தமென்றதூஉம் இதனானேயென்பதாம். 'மற்றவற்றின்' எ-து. நீர்முதலியவற்றினென்றவாறு. 'நித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ-து பரமாணுக்களைச் சேர்ந்தவையென்றவாறு. 'அநித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ-து. துவியணுகமுதலியவற்றைச் சேர்ந்தவையென்றவாறு. உருவமுதலிய நான்கும் உற்பூதமாயுள்ளவை காட்சிக்குப் புலனும், உற்பூதமல்லாதவை காட்சிக்குப் புலனாகா வெனக்கொள்க. உற்பூதத்தன்மையாவது காட்சியைப் பயப்ப



தொரு தருமவிசேடம், அதனின்மை அநுற்பூதத்தன்மை யென்பதாம்.

*காரண உருவம்-காரணமாகும் உருவம், அஃதாவது காரணமாவதனுருவம். அவயவ உருவம் எனினும் ஆம்.

*பிடரம் - தோண்டி.

*தருமவிசேடம் - ஒருவகைத்தருமம்.

*தருமம், ஒன்றின் இருப்பதாவது.

௨௪. ஒருமை முதலா வுறும்வழக் கிற்கோர்
கருவி யெண்ணெனக் கருதப் படும்பிற
பொருளொன் பதினும் பொருந்து மொருமை
நேர்பொரு ளானு நிலைநிலை யாமை
யிருமை முதலெலாம் யாண்டு நிலையில.

(இ-ள்.) சங்கை ஒருமைமுதலிய வழக்கிற்குக் காரணம். சங்கையெனினும் எண்ணெனினும் ஒக்கும். அது ஒன்பது பொருளினும் இருப்பது. ஒன்று முதற் பரார்த்தமீறாய் உள்ளது. அவற்றுள், ஒருமை நித்தப்பொருளைச் சேர்ந்தது நித்தம்; அநித்தப்பொருளைச் சேர்ந்தது அநித்தம். இருமைமுதலிய எல்லாம் யாண்டும் அநித்தமே. (எ-று.)

*பரார்த்தம் தனக்கு மேலோர் எண்ணில்லாதது.

சங்கை, எ-து. எண்ணிலக்கணங்கூறுகின்றது.

௨௫. அளத்தல் வழக்கிற் காரணப் பேறு
வதினள வென்ப தொன்பதி னாற்று

நுண்மை பெருமை குறுமை நெடுமை
யெனநான் காகு மென்றிசி னோரே.

(இ - ள்) பரிமாணம் அளத்தல்வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பதுபொருளினும் உள்ளது. அது நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை என நான்குவகைத்து. (எ - று.)

பரிமாணம் எ-து. அளவினிலக்கணங்கூறுகின்றது.

அது. எ து. பரிமாணத்தைப் பகுக்கின்றது:

உஙு. வேறெனன் வழக்கிற் கேது வேற்றுமை
யொன்பது பொருளினு முள்ள தாமால்.

(இ - ள்.) வேற்றுமை வேறென்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது. (எ - று.)

வேற்றுமை. எ - து. வேற்றுமையினிலக்கணங்கூறுகின்றது. 'இது இதனின்வேறு' என்னும் வழக்கிற்குக் காரணமென்றவாறு.

*வழக்கிற்குக் காரணம் எனவே வழக்கோர்பயன் என்பதூஉம் ஒன்றைத்துணிதற்குக் கருவியாவது என்பதூஉம் பெறப்படுதலுணர்க.

உஎ. கூடிய தென்னக் கூறும் வழக்கிற்
கிடுடை யேது புணர்ச்சி யென்ப
தோர்பொருட் கோர்பா லுறுவ தாகிப்
பொருளொன் பதினும் பொருந்து மென்ப.

(இ - ள்.) சையோகம் கூடியதென்னும் வழக்கிற்குக் காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது. (எ - று.)



சையோகம். எ-து, கூட்டத்தினிலக்கணங் கூறுகின்றது.'இவ்
விரண்டுங்கூடி நின்றன' என்னும் வழக்கிற்குக் காரணமென்ற
வாறு. சையோகம் தொழிலாற்றோன்றியதும், சையோகத்தாற்
றோன்றியதுமென இருவகைத்து. கையின்றொழிலாற் கைக்கும்
புத்தகத்திற்கும் உளதாய சையோகம் தொழிலாற்றோன்றியது.
கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய சையோகத்தானே உடம்பிற்
கும் புத்தகத்திற்குமுளதாய சையோகம் சையோகத்தாற் றோன்
றியது. சையோகம் வியாபியாமலிருப்பது. வியாபியாமலிருத்தல்
தன்னத்தியந்தாபாவமுந்தானும் ஓரிடத்திருத்தல், ஏகதேசத்திரு
ப்பதென்றவாறாயிற்று.

உஅ. ஆயிற் புணர்ச்சி யழிப்ப தாகி
யெய்குணம் பிறிவுள தெட்டொன் றினுமே.

(இ - ள்) விபாகம் சையோகத்தை நாசம்பண்ணுங்குணம். விபாகமெனினும் பிரிவெனினுமொக்கும். அது ஒன்பதுபொருளினும் இருப்பது. எ - று.

விபாகம். எ - து. பிரிவினிலக்கணங்கூறுகின்றது. காலமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சையோகத்தை நாசம் பண்ணுவது' என்றும், கூறப்பட்டது. விபாகமுந்தொழிலாற்றோன்றியதும், விபாகத்தாற்றோன்றியதுமென இருவகைத்து. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரியால் உடம்பிற்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு விபாகத்தாற்றோன்றியது.

உகூ. மொழியின் முன்மை முன்னென் வழக்கிற்
கிழிவில் சிறப்புக் கருவி யெனப்படும்.

(இ - ள்) பரத்துவம் முன்னென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம். பரத்துவமெனினும் முன்மையெனினுமொக்கும். (எ - று.)

பரத்துவம். எ - து. முன்மையி னிலக்கணங்கூறுகின்றது.

௯௦. பேறு பின்மை பின்னென் வழக்கிற்
கேதுறு சிறப்புக் கருவி யெனப்படுமே.

(இ - ள்) அபரத்துவம் பின்னென்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம். அபரத்துவமெனினும் பின்மையெனினு மொக்கும். (எ-று.)

அபரத்துவம். எ - து. பின்மையினிலக்கணங் கூறுகின்றது.

௯௧. உரைநிலை போதா னிவ்வொன் றிரண்டா
மருவு மளதின் மன்முத லன்றின்.

(இ - ள்) அவ்விரண்டும் திக்கினாற் பண்ணப்படுவனவும், காலத்தினாற்பண்ணப்படுவனவும் என இருவகைப்படும். அவை மனத்தினும் பிருதிவி முதலிய நான்கினுமிருப்பன. அவற்றுள், திக்கினாற் பண்ணப்படும் பரத்துவம் சேய்மைக்கணுள்ளது. திக்கினாற் பண்ணப்படும் அபரத்துவம் அண்மைக்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் பரத்துவம் மூத்தோன்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் அபரத்துவம் இளையோன்கணுள்ளது (எ - று)

அவ்விரண்டும். எ - து. அவற்றைப் பகுக்கின்றது.

திக்கினாற்பண்ணப்படும். எ - து. திக்கினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங்கூறுகின்றது.

காலத்தினாற்பண்ணப்படும். எ - து. காலத்தினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங்கூறுகின்றது.



௯௨. ஆதியில் வீழ்ச்சிக் கமைசார் பென்று
மேதுத் திண்மை யெனப்படு மதுதா
னீர்மண் ணிரண்டி னிற்ப தென்ப.

(இ - ள்.) குருத்துவம் ஆதியில் வீழ்ச்சிக்கு அசமவாயிகாரணம். குருத்துவமெனினும் திண்மையெனினுமொக்கும். அது பிருதிவியினும் நீரினும் இருப்பது. (எ - று.)

குருத்துவம். எ - து. திண்மையினிலக்கணங்கூறுகின்றது. இரண்டாம்வீழ்ச்சி முதலியவற்றிற்கு வேகம் அசமவாயிகாரணமாகலின், வேகத்தின் அவ்வியாத்தி நீக்குதற்கு 'ஆதி' எனப்பட்டது.

*இரண்டாம்வீழ்ச்சி என்பது காண்டலளவை கூறுமிடத்து விளங்கும். ஆண்டுக் காண்க. "துலை, துலையாற் பிறந்ததும்" என்பதனாலுமுணர்க.

*ஒருகருமம் செய்தற்கில்லாது என்பது தருக்கநூற்றுணிவு. வீழ்ச்சிமுதலிய கருமத்திற்குச் சமவாயிகாரணம் திரவியம் எனப்படும். பாயிரத்துக் காண்க.

௯௩. ஆதியி லொழுகற் கமைசார் பென்று
மேது நெகிழ்ச்சி யியல்பொடு நிமித்த
மென்றிரண் டாகி யியல்பா னீரி
னிலத்திற் றீயி னிமித்தத் துளதே.

(இ - ள்.) திரவத்துவம் ஆதியில் ஒழுகுவதற்கு அசமவாயிகாரணம். திரவத்துவமெனினும் நெகிழ்ச்சியெனினும் ஒக்கும். அது பிருதிவி அப்புத் தேயுக்களில் இருப்பது. அது இயல்பாயுள்ளது,

நிமித்தத்தாலுள்ளது என இருவகைத்து. நீரின் இயல்பாயுள்ளது. பிருதிவி தேயுக்களின் நிமித்தத்தாலுள்ளது. பிருதிவியின் நெய் முதலியவற்றின் நெருப்புக்கூடுதலால் உண்டாகிய நெகிழ்ச்சி. தேயுவிற் பொன் முதலியவற்றிலுண்டாயது. (எ - று.)

திரவத்துவம். எ-து. நெகிழ்ச்சியிலக்கணங்கூறுகின்றது. 'ஒழுகுதல்' பாய்தல்.

அது. எ-து. அவற்றைப் பகுக்கின்றது. தேயுவின்கூட்டத்தாற் பிறந்தது நிமித்தத்தாலுண்டாயது, அதனின்வேறாயது இயல்பாயுள்ளதெனக் கொள்க. நெய்முதலியவற்றின். எ-து. பிருதிவியின் நிமித்தத்தாலுண்டாயதற்கு உதாரணம். பொன்முதலியவற்றின். எ-து. அதற்குத் தேயுவிலுதாரணம்.

௧௪. நீரின் மட்டே சேர்பொடியாதி
திரட்டுதற் கேது சிக்கெனல் என்னுங்
குணந்தா னென்ப கூறியோரே.

(இ - ள்.) சிநேகம் பொடி முதலியவற்றைத் திரட்டுதற்கு ஏதுவாய குணம். நீரின்மாத்திரம் இருப்பது. (எ - று.)

சிநேகம் எ - து. சிநேகத்தினிலக்கணங்கூறுகின்றது. கால முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' எனவும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'திரட்டுதல்' எனவுங் கூறப்பட்டது.

௧௫. ஒலிதான் செவியா னுணரப் படுகுணம்
வெளியாம் வானின் மாத்திரமேயவ்
வெழுத்தொலி வடிவென் றிருவகைத் தாகும்.



(இ - ள்) சத்தம் செவியாற் கவரப்படுங் குணம். ஆகாயத்தின் மாத்திரம் இருப்பது. அது ஒலிவடிவும், எழுத்துவடிவும் என இருவகைத்து. அவற்றுள், ஒலிவடிவு பேரிகைமுதலியவற்றில் தோன்றுவது. எழுத்துவடிவு வடமொழி முதலிய பாடைவடிவாயுள்ளது.

சத்தம். எ - து. ஓசையிலக்கணங்கூறுகின்றது. ஓசைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'செவியான்' என்றுங் கூறப்பட்டது. ஓசை கூட்டத்தாற்பிறந்ததும், பிரிவாற்பிறந்ததும், ஓசையாற்பிறந்ததுமென மூவகைத்து. அவற்றுள், முதலாவது முரசுங்குணிலுங்கூடிய கூட்டத்திற்பிறந்தது. இரண்டாவது மூங்கில் பிளக்குங்கால் அவ்விரண்டின் பிரிவாற்றோன்றுவதாய சடசடவோசை. மூன்றாவது முரசுமுதலியவிடத்தொடங்கிச் செவிகாறும் இரண்டாமோசை முதலிய ஓசையாற்றோன்றுவது.

௧௬. உணர்ச்சி யென்ப தெவரின் வழக்கு
மியாத்தின் கருவியா மறிவஃ தானது
நினைவென் றிரண்டாய் நிலவு மென்ப.

(இ - ள்.) புத்தி எல்லாவழக்கிற்குங் காரணமாகிய அறிவு. அது நினைவும் அநுபவமும் என இருவகைத்து. (எ - று.)

புத்தி. எ-து. புத்தியிலக்கணங்கூறுகின்றது. 'அறிகின்றேன்' எனப் பின்னிகழுமுணர்ச்சியாற் குறிக்கப்படும் அறிவுத்தன்மையே இலக்கணமென்பதாம்.

*பின்னிகழுமுணர்ச்சி எனவே முன்னிகழுமுணர்ச்சி ஒன்றுண்டென்பது போதருதல்காண்க. ஈண்டு முன்னிகழுமுணர்ச்சியாவது, புத்தியாலதறிவு என்பது. அறிகின்றேன் என்பதைப் பின்

னிகழுமுணர்ச்சி என்றது அறிவு என்பதைத் தெரிதற்கன்றி, அறிகின்றேன் என்றுமுணர்ச்சி நிகழுமாறையான். பிறாண்டுமிவ் வாறேகொள்க. பாயிரத்துக்காண்க.

அது. எ-து. புத்தியைப்பகுக்கின்றது.

௩௭. அதுவா சனைமாத் திரத்தாற் றோன்று
முணர்வு நினைவா முணர்வதின் வேறு
மின்மை யுண்மை யென்றிரு வகைத்தே.

(இ-ள்.) நினைவு வாசனைமாத்திரத்தாற்றோன்றும் ஞானம். அநுபவம் அதனின்வேறாய ஞானம். அது உண்மையநுபவம், இன்மையநுபவம் என இருவகைத்து. (எ-று.)

நினைவு. எ-து. நினைவினிலக்கணங்கூறுகின்றது. பாவனை யெனப் பெயரிய வாசனை என்க. வாசனையினது அறிவுபாட்டின் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஞானம்' என்றும், குடமுதலியவற்றின் காட்சியுணர்வின் அதிவியாத்தி நீக்குதற்கு 'வாசனையாற்றோன்றியது' என்றும், இவன் அத்தச்சாத்தன் என்னும் முன்னறுணர்வின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றுங் கூறப்பட்டது.

அநுபவம், எ-து. அநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. நினைவிற்கு வேறாய உணர்வு அநுபவமென்பதாம்.

*உரைத்தும் என்னும் உத்தியான் அநுபவத்தை விளக்கக்கூறாது நினைவிற்கு வேறாய உணர்வு என்றொழிந்ததென்க.

அது எ-து. அநுபவத்தைப் பகுக்கின்றது.

*வாசனை என்பது முன்னர்வரும்; ஆண்டுக்காண்க.



௩௮. அஃதுடைப் பொருளி னஃதடை யாக
நிகழு முணர்வு நிலவு முண்மை
யஃதில் பொருளி னஃதடை யாக
நிகழு முணர்வு நிலவு மின்மை.

(இ-ள்.) அஃதுடைப்பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அநுபவம் உண்மையநுபவம். அதுவேபிரமையென்று உரைக்கப்படும். அஃதில்பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அநுபவம் இன்மையநுபவம். அதுபிரமம் என்றுஉரைக்கப்படும். (எ-று.)

——நிகழுதல்-தோன்றுதல். அஃதுடைப் பொருள் - விசேடியம், அடைபொருள் எனினும் ஒக்கும்.

*விசேடணமாக நிகழும் அநுபவம், விசேடண விசேடியங்களின் சம்பந்தங்கவரும் உணர்வு. விசேடணம்-அடை, அஃதாவது இன்னதென விளங்காது தோன்றுவ தொன்றனை விளங்க வரையறுத்துணர்த்துவது என்க.

*வடமொழியின்கண் எழுவாய்த்தொடரின் வருமொழி விசேடணமாயும், ஏனையதொடரின் நிலைமொழி விசேடணமாயும் வழங்குதலின், விசேடணம் இஃதென்பது உணர்ச்சிவகையானன்றி சொல்வகையான் உணரற்பாற்றன்று.

அஃதுடைப்பொருளின்கண். எ-து. உண்மையநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. அற்றேல், 'குடத்தின்கட் குடத்தன்மை' என்னு முணர்ச்சிக்கண் அவ்வியாத்திக்குற்றந் தங்கும், குடத்தன்மையின்கட் குடமின்மையாலெனின்;—அற்றன்று, எதன்கண் எதன்சம்பந்தமுண்டு அதன்கண் அதன்சம்பந்தத்தின் அநுபவமென்பதுபொருளாகலின். குடத்தன்மையின்கட் குடசம்பந்தம் உண்மையான்,

அவ்வியாத்தியின்மையுணர்க. 'அது' என்பது உண்மையநுபவமே பிரமையென நூலின்கட்கூறப்படுவதென்பதாம்.

*குடத்தின்கட்குடத்தன்மை என்னும் உணர்ச்சிக்கண் அவ்வியாத்தியரும் என்றது, விசேடியத்தின்கண் இருக்கற்பாலது விசேடணமென்பதற்கேற்ப விசேடியமாகிற்கும் குடத்தன்மையின்கண் விசேடணமாகிற்குங் குடமின்மையான். எதன், எதன், அதன் அதன் கிளைநிறை. முன்னர்வருவதும் அது.

அஃதில் பொருளின்கண். எ - து. இன்மையநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. அற்றேல், 'இது சையோகமுடைத்து', என்னும் பிரமைக்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, எதன்வயினான் எதன் சம்பந்தமில்லை அதன்வயினான் அதன்சம்பந்தவுணர்ச்சி இன்மையநுபவமென்பது கருத்தாகலின். சையோகமின்மையான் வரைந்த சையோகவுணர்ச்சி மயக்கமாகலின், சையோகத்தான் வரைந்த சையோகசம்பந்தவுணர்ச்சி உளதாகலின், அதிவியாத்தியின்மையுணர்க.

*இது சையோகமுடைத்து என்பதன்கண் அதிவியாத்திவரும். என்னை? சையோகமில்வழியுஞ் சையோகவுணர்ச்சி நிகழ்தலான். ஆண்டுச்சையோகமின்மை யாண்டையதெனின் இதுசையோகமுடைத்து என்புழிச்சையோகம் தான் இவ்வழியும் உளதாகத்தோற்றினும் ஓர்புடையேயிருப்பதாகலிற் சையோகமுடையதன்கட் சையோகமேயல்லது அதன் முழுதுமின்மையும் உடனிகழ்வது தப்புவதன்மையிற் சையோகமின்மை ஆண்டுளதாவது அறிக. உண்மையநுபவமும் இன்மையநுபவமும் ஒருங்கு நிகழினும் வரைந்தனவான் ஒன்றன்பால் ஒன்றின்மை தெரிதலின் அதிவியாத்தியின்மையுணர்க. மயக்கம் என்றது சையோகசம்பந்தவுணர்ச்சி, சையோகமின்மையான் வரைந்தவிடத்தும் நிகழ்தலின்.



௩௯. கருத்துணர் வொப்பே காட்சி யொலியென்
றொருநான் கென்ப வுண்மை யுணர்வே
கருத வொப்புமை காண்ட லுரையென்
றுரைப்பவைக் கருவியு மொருநான் கென்ப.

(இ - ள்.) உண்மையநுபவம் காட்சி, அநுமிதி, உபமிதி, சாத்தம் என்னும் வேறுபாட்டால் நால்வகைத்து. அதன் கரணமும் காண்டல், அநுமானம், உவமானம், சத்தம் என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்து (எ - று.)

உண்மையநுபவம். எ - து. உண்மையநுபவத்தைப் பகுக்கின்றது.

அதன்கரணமும். எ - து. தொடர்பாட்டாற் கரணத்தையும் பகுக்கின்றது. 'அதன்கரணம்.' எ - து. பிரமைக்குக் கரணமென்றவாறு. பிரமைக்குக் கரணம் பிரமாணம் என்பது பிரமாணத்தின் பொதுவிலக்கணம். உண்மையநுபவவறிவிற்குக் கருவியாயுள்ளது பிரமாணமென்பது பொருள்.

௪௦. தேருங் கரணஞ் சிறப்புக் கருவி.

(இ - ள்.) கரணமாவது சிறப்புக்காரணம். (எ - று.)

கரணமாவது. எ - து. கரணத்தினிலக்கணங்கூறுகின்றது. சாதாரணகாரணமாகிய காலம் திக்கு முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சிறப்புக்காரணம்' எனப்பட்டது.

௪௧. இன்றி யமையா தேய்கா ரியத்தின்
முன்னிற் பதுவே காரண மொழியிற்
பிறிதோ ராற்றாற் பெறப்படா தாற்பிற.

(இ-ள்.) காரணம் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது. எ-று.

காரணம். எ-து. காரணத்தினிலக்கணங்கூறுகின்றது. கழுதை முதலியவற்றின் அதிவியாப்தி நீக்குதற்கு 'முன்னிற்பது' என்றொழியாது 'நியதமாய்' என்றும், காரியத்தின் அதிவியாப்தி நீக்குதற்கு 'நியதமாய்' என்றொழியாது 'முன்னிற்பது' என்றும், கூறப்பட்டது. 'நியதம்' இன்றியமையாமை. அற்றேல், நூலுருவமும் ஆடையைக்குறித்துக் காரணமாமேயெனின்;—அற்றன்று, பிறிதோராற்றாற் பெறப்படாததாயென்றும் அடைகொடுக்கற்பாற்றாகலின். பிறிதோராற்றாற் பெறப்படாமை பிறிதோராற்றாற் பெறப்படுதலின்மை. பிறிதோராற்றாற் பெறப்படுதல் மூவகைத்து. எதனொடு கூடியே எதனைக்குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவது யாதோ அஃது அதனைக்குறித்து அதனாலே பிறிதோராற்றாற் பெறப்படுவது: அதுநூலோடு கூடி நூலுருவமும் நூற்றன்மையும் ஆடையைக் குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவது, ஒன்று. பிறிதொன்றனைக்குறித்து முன்னிற்றலுணர்ந்தவழி எதுதுக்கொண்டதனைக் குறித்து முன்னிற்றலுணரப்படுவதியாது அஃது அவ்வெதுக்கொண்டதனைக் குறித்துப் பிறிதோராற்றாற் பெறப்படுவது: அஃது ஆகாயம் ஓசையைக்குறித்து முன்னிற்றலுணர்ந்தவழிக் குடத்தைக்குறித்து ஆகாயம் முன்னிற்பதென்றுணரப்படுவது, ஒன்று. மற்றிடங்களிலே நியதமாய் முன்னிற்பது இதுவென்று துணியப்பட்டதன்றானே காரியந்தோன்றுழி அதனொடு உடனிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது: அது பாகத்தாற்றோன்றும் நிலத்து உருவத்தின் முன்னபாவம் நாற்றத்தைக்குறித்து முன்னிற்பதென்பது, ஒன்று. ஆகமூன்றுந் தெரிந்துகொள்க. இவ்வனைத்துங் கூறியவாற்றாற் பிறிதோராற்றாற் பெறப்படாததாய் இன்றியமையாது முன்னிற்பது காரணமெனக் கொள்க.



*கழுதைமுதலியவற்றின்கண் அதிவியாப்தியாவது என்றது குடத்தைநோக்க மண்கொணருங் கழுதைமுதலியவும் முன்னிற்பவாகலின். காரியத்தின் அதிவியாப்தியாவது என்றது, காரியமுந் தனக்குத்தானே நியதமாகலின் அஃதாவது காரியமுந் தன்னையின்றித் தானிருப்பதன்மையான்.

*உணரப்படுவது பெறப்படுவது என ஒட்டுக.

*அதனாலே-எதனொடு கூடிநின்றதோ அதனாலே; பற்றுக்கோடாயதனாலே.

*ஓசையைக்கொண்டெடுத்துக் கூறியது ஆகாயந் தன்குணமாய ஓசைக்குச் சமவாயிகாரணமாகலின் அதற்கு ஆகாயம் முன்னிற்பதாயது தானே பெறப்படுதலான். திரவியங் குணத்திற்குஞ் சமவாயிகாரணம் என்பது சமவாயங் கூறுமிடத்துப் பெறப்படுவதறிக. மற்றவிடம்-உடனிகழ்ச்சியில்லாவிடம். துணியப்பட்டதன்றானே பிறிதோராற்றாற் பெறப்படுமென ஒட்டுக. உடனிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது. என்னை? உடனிகழ்வதை முதனிகழ்வதொன்றன் காரியத்திற்கு முன்னிற்பதென்பது, அம்முதனிகழ்வது தன்காரியத்திற்குந் தான்முன்னிற்பதென்பது துணியப்பட்டதன் பின் அதனாற்பெறப்படுதலாகலான் என்க. உதாரணத்தின்கண் துணியப்பட்டதாவது நாற்றத்தின் முன்னபாவமாதலும், உடனிகழ்வதாவது நிலத்து உருவத்தின் முன்னபாவமாதலும் கண்டுகொள்க. உருவத்தின் முன்னபாவம் நாற்றத்தைக் குறித்து முன்னிற்பது என்பது காரியம் முறையானன்றி ஒருங்கே தோன்றுழி வருவது. பிறவுமன்ன.

௪௨. காரியந் தானே கருதின் முன்னே
யின்மைக் கெதிர்மறை என்மனார் புலவர்.

(இ - ள்.) காரியம் முன்னின்மைக்கு எதிர்மறை. (எ - று.)

காரியம். (எ - து.) காரியத்தினிலக்கணங்கூறுகின்றது.

௪௮. முதலே சார்பே மொழியு நிமித்த
மேயிவை மூன்று மெனப்படு மவற்று
ளதாவது வாவ தாமுதற் காரணங்
காரியத் துடனுங் காரணத் துடனும்
பேரார் பொருளிற் பிறிவற நின்றுங்
கேது வாவ தெனிற்சார் பேது
நிகழ்த்திரண் டலது நிமித்த மென்ப.

(இ - ள்.) அக்காரணம் சமவாயி, அசமவாயி, நிமித்தம் என்றும் வேறுபாட்டால் மூவகைத்து. எதன்கண் ஒற்றித்துக் காரியம் தோன்றும் அது சமவாயிகாரணம்: அஃதெங்ஙனம், நூல்கள் ஆடைக்குச் சமவாயிகாரணம்; ஆடையும் தன்னையடைந்த உருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம். காரியத்துடனேனுங் காரணத்துடனேனும் ஒருபொருளிற் சமவேதித்துக் காரணமாயிருப்பது அசமவாயிகாரணம்: அஃதெங்ஙனம், நூலியைபு ஆடைக்கு, நூலுருவம் ஆடையுருவிற்கு, அசமவாயிகாரணம். அவ்விரண்டின் வேறாய காரணம் நிமித்தகாரணம்: அஃதெங்ஙனம், ஆடைக்கு நாடாவேமா முதலியன. இங்ஙனங் கூறிய மூவகைக்காரணத்துள் யாது சிறந்த காரணம் அதுவே கரணம். (எ - று.)

*சமவேதித்து, சமவாயசம்பந்தத்தான் இருந்து, நீக்கமின்றி நின்று, ஒற்றித்து என்பன ஒருபொருட்கிளவி. முதற்காரணம் ஒழிந்தவற்றுள், கருத்தா நிமித்தகாரணம், வினையது துணைக்காரணம் என்பது தமிழ்நூலாசிரியர்,



அக்காரணம். எ - து. காரணத்தைப் பகுக்கின்றது.

எதன்கண். எ-து. சமவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

காரியத்துடன். எ - து. அசமவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

நூலியைபு. எ - து. 'காரியத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியமாகிய ஆடையோடும் ஒருநூலின்கட் சமவேதித்திருத்தலான், நூலியைபு ஆடைக்கு அசமவாயிகாரணமென்றவாறு.

*சம்பந்தம், இயைபின்மேற்று, முன்னர் வருவது உருவின்மேற்று.

நூலுருவம். எ - து. 'காரணத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியத்தின் சமவாயிகாரணமாகிய ஆடையுடன் ஒருநூலின்கட் சம்பந்தித்திருத்தலான், நூலுருவம் ஆடையுருவிற்கு அசமவாயிகாரணமென்றவாறு.

அவ்விரண்டின். எ - து. நிமித்தகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது. சமவாயிகாரணம், அசமவாயிகாரணமாகிய இரண்டின் வேறாகிய காரணமென்றவாறு.

இங்ஙனங் கூறிய. எ - து. கரணத்தினிலக்கணம் முடிந்தது முடித்தலென்னுமுத்தியாற் கூறுகின்றது.

## பிரத்தியக்ஷப்பிரமாணம்.

௪௯. காட்சி யுணர்வின் கருவி காண்டல்
புகனுங் காட்சி பொறியோர் புலனொ
மருவு மியைபான் மன்னு முணர்வே

யஃதிலடை யில்ல தடையுள தென்ன
விருவகைத் தாகி யியலு மென்ப.

(இ - ள்) அக்காணம் நான்கனுள், காண்டலாவது புலப்படக் காணும் காட்சியறிவிற்குக் காரணம். காட்சியறிவு இந்திரிய விடய சம்பந்தத்தாற்றோன்றும் ஞானம். அது நிருவிகற்பகம், சவிகற்பகம் என இருவகைத்து. அவற்றுள், நிருவிகற்பகம் விசேடணையின்றித்தோன்றும் ஞானம். சவிகற்பகம் 'இவன் சாத்தன்' 'இவன் கரியன்' 'இவன் பார்ப்பான்' என விசேடணத்தோடு தோன்றும் ஞானம். எ - று.

*காண்டலாவது இந்திரியவிடயசம்பந்தம். காண்டல் செய்கை. காட்சி காரியம்.

அக்காணம் நான்கனுள். எ-து. காண்டலளவையினிலக்கணங்கூறுகின்றது

காட்சியறிவு. எ - து காட்சியறிவினிலக்கணங்கூறுகின்றது. இந்திரியம் கண் முதலியன. விடயம் குடமுதலியன. அவ்விரண்டன்சம்பந்தம் சையோகமுதலியன. அச்சையோகமுதலியவற்றுற் பிறந்தவுணர்வென்பதாம்.

அவற்றுள், நிருவிகற்பகம். எ - து. நிருவிகற்பக்காட்சியிலக்கணங்கூறுகின்றது. விசேடணவிசேடியங்களின் சம்பந்தங்கவராத வுணர்வென்றவாறு. அற்றேல், நிருவிகற்பகம் உண்டென்பதற்குப் பிரமாணம் என்னை யெனின்;—'இத்தன்மையான் அடையடுத்த ஆமென்னும் விசேடியஞானம் விசேடண ஞானத்தாற் றோன்றற்பாலது, விசேடியஞானமாதலின், குழைப்புனைந்து ஞானம்போலும்' என்னும் அநுமானமே பிரமாணமென்க. விசேடண ஞானமும் சவிகற்பகமெனின் வரம்பின்றி யோடுமாகலின், நிருவிகற்பக முண்டென்பது பெறுதும்.



*நிருவிகற்பகம் உண்டென்பது பெறுதும் என்றது அநுமானத்தாற் றுணியப்படும் விசேடணஞானமே நிருவிகற்பகம் என்பது போதருதலான்.

சவிகற்பகம் எ - து. சவிகற்பகத்தினிலக்கணங்கூறுகின்றது. பெயர் சாதி முதலிய விசேடணவிசேடியங்களின் சம்பந்தங் கவரும் ஞானமென்பதாம். 'இவன்சாத்தன்' 'இவன்கரியன்' என்றது சவிகற்பகத்துக்கு உதாரணம்.

(௬) காட்சியறிவின் கருவி யாய
பொறிபுலன் கூடப் பொருந்துங் கிழமை
யறுவகைத் தென்ப வவையுங் கிழமை
யுயிரார் புணர்ச்சி பொற்றுமை யிரண்டா
லியைவன மூன்றோ டெய்துறு தன்மை
யென்பன வாறு மெண்ணினர் கொளலே

(இ-ள்.) காட்சியறிவிற்கேது இந்திரிய விடய சம்பந்தம். சம்பந்தமெனினும், இயைபெனினும், யாப்பெனினும், கிழமையெனினும் ஒக்கும். அச்சம்பந்தம் சையோகமும், சையுத்தசமவாயமும், சையுத்தசமவேதசமவாயமும், சமவாயமும், சமவேதசமவாயமும், விசேடணவிசேடியத்தன்மையும் என அறுவகைப்படும். கண்ணினாற்குடத்தைக் காணுங்கால் சையோகசம்பந்தம். குடவுருவத்தைக்காணுங்கால் சையுத்தசமவாயம், கண்ணொடு சையுத்தமான குடத்தில் உருவம் சமவாயமாதலாலென்க. உருவத்தன்மைப்பொதுமையைக் காணுங்கால் சையுத்தசமவேதசமவாயம்; கண்ணொடு சையுத்தமான

குடத்தில் உருவஞ் சமவேதம், உருவத்தில் உருவத்தன்மை சமவாயமாதலாலென்க. செவியாற் சத்தத்தை உணருங்கால் சமவாய சம்பந்தம், செவித்துளையிலிருக்கும் ஆகாயமே சோத்திரமாதலால் சத்தம் ஆகாயகுணமாதலிற் குணகுணிகட்குச் சமவாயம் உண்மையானெனவுணர்க. ஓசைத்தன்மையை உணருங்கால் சமவேதசமவாயம், சோத்திரத்திற் சமவேதமான சத்தத்திற் சத்தத்தன்மை சமவாயமாயிருத்தலாலென்க. அபாவத்தைக் காணுங்கால் விசேடணவிசேடியத்தன்மைச் சம்பந்தம். 'குடமில்லது இப்பூதலம்' என்புழிக் கண்ணொடு சையுத்தமான பூதலத்திற் குடமின்மை விசேடணமாயும் 'பூதலத்திற் குடமில்லை' என்புழிக் குடமின்மை விசேடியமாயும் இருத்தலாலென்க. இவ்வனங் கூறிய அறுசம்பந்தத்தினும் தோன்றும் உணர்வு காட்சி. அதற்குக்காரணம் இந்திரியம். அதனால் இந்திரியமே காண்டலளவையென்பது பெறப்பட்டது (எ - று.)

*சையுத்தம், புடைபெயர்ச்சியின்றிச் சையோகசம்பந்தத்திற்கு இடனாயது. சையோகம் தருமம். சையுத்தம் இயல்பி. சமவேதம் சமவாய சம்பந்தத்தானிருப்பது. சமவேதம் இயல்பி. சையுத்தமான—புணர்க்கப்பட்டதான. சையுத்தசமவாயம் என்றது ஈர் இணையியல்லது இரண்டுசம்பந்தத்தம்மிற்கூடி நிற்பதின்மையின். சமவாயமாதல், சமவாயமாயிருத்தல் - சமவாயசம்பந்தத்தானிருத்தல் என்றவாறு.

அச்சம்பந்தம். எ - து. இந்திரிய விடயசம்பந்தத்தைப் பகுக்கின்றது.

கண்ணினால். எ - து. சையோகசம்பந்தத்திற்கு உதாரணங்கூறுகின்றது. திரவியக்காட்சியில் யாண்டுஞ் சையோகமே சம்பந்தமென்பதாம். ஆன்மா மனத்தோடும்,மனம் இந்திரியத்தோ



டும், இந்திரியம் பொருளோடுங் கூடும்; அதனாற்காட்சியுணர்வு நிகழுமெனவுணர்க.

*இந்திரியம் பொருளோடுங் கூடும் என்றதனாலும் பதார்த்தம் பொருள் எனப்படுதறிக.

குடவுருவத்தை. எ - து. சையுத்தசமவாயத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

கண்ணொடு. எ - து. அதற்கேதுக்கூறுகின்றது.

உருவத்தன்மைப்பொதுமையை. எ - து. சையுத்தசமவேத சமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

செவியால். எ - து. சமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

செவித்துளையில். எ - து. அதனைத்தெரித்துணர்த்துகின்றது. அற்றேல், சேய்மைக் கண்ணதாகிய ஓசை செவியின்கட்சம்பந்திப்பது எவ்வாறெனின்;—வீசிதரங்கநியாயத்தானுங் கதம்பமுகுளநியாயத்தானும் வெவ்வேறோசையைத் தோற்றுவிக்கு முறையானே செவிப்புலத்தின்கட்டோன்றிய ஓசைக்குச் செவிச்சம்பந்தமுண்மையாற் காட்சியுணர்வு நிகழுமென்க.

*வீசிதரங்கம், ஓசை ஓர் முகமாய் ஒன்றை ஒன்று தோற்றுவித்துச் சேறற்கும், கதம்பமுகுளம், ஓர்முகமாயல்லது எப்புறத்தும் அவ்வாறு சேறற்கும் உதாரணம் என்க.

*வெவ்வேறு ஓசையைத் தோற்றுவிக்கும் எனவே, ஓரோசை ஒன்றாய் நீடித்து நில்லாதென்பது போதரலின் இரண்டாம் ஓசை முதலியனவாய் வேறுபட்டுவரும் என்பது பெறப்படுதல் அறிக.

ஓசைத்தன்மையை. எ - து. சமவேதசமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

அபாவத்தை. எ-று. விசேடண விசேடியத்தன்மைக்கு உதாரணங் கூறுகின்றது.

குடமில்லது. எ-து. அதனைத் தெரித்துணர்த்துகின்றது. இதனானே அநுபலத்தி வேறுபிரமாணமென்பதூஉம் மறுக்கப்பட்டது. 'ஈண்டுக்குடமுண்டாயின் இப்பொழுது நிலம்போலக்காணப்படவேண்டும், காட்சியின்மையான் 'இல்லை' என்றுதர்க்கஞ்செய்யப்படும் எதிர்மறைப்பொருளினுண்மையினுணர்வு பெருமையோடு கூடிய இந்திரியத்தானே அபாவவுணர்வு தோன்றுதலின், அநுபலத்திவேறுபிரமாணமென்றல் பொருந்தாமையுணர்க; இடமுனைக்கும்பொருட்டு வேண்டப்படும் இந்திரியமே காரணமாயவழி அநுபலத்தி காரணமென்றல் பொருந்தாமையின். விசேடணவிசேடியத்தன்மை விசேடணவிசேடிய சொரூபமேயன்றி வேற்றுச்சம்பந்தமன்று.

*ஈண்டுக்குடமுண்டாயின் என்பதடியாய்ப்போந்தவாக்கியம் மேலதற்கு விளக்கமாவதறிக. "காட்சியின்மையின் இல்லை" என்பதன்கண் இல்லை யென்பதற்குப் பிரமாணமாய் நிற்பதாய காட்சியின்மையே அநுபலத்தி எனப்படுவதென்க. காட்சியின்மை - எதிர்மறைப்பொருளினுண்மையினுணர்வு பெறப்படாமை. அபாவவுணர்வு இல்லையென்னுமுணர்வு. பாயிரத்துப்பார்க்க. அநுபலத்தி அன்னதாவது, அதுவேறுபிரமாணமென்பதை மறுக்குமாறு கூறுவதன்கண் தெரியக்கிடப்பித்தமையினறிக. வேறுரைக்குந் தருக்கபாலதொன்றை இவ்வாறு மற்றொன்று கூறுவதன்கண் விளங்கவைத்தலொத்துப்போவது உடம்பொடுபுணர்த்தல் எனப்படுவது என்க.

*வேற்றுச்சம்பந்தம் பண்புத்தொகை. வேறாயசம்பந்தம் என விரியும். அன்றுஎன்றது அபாவத்தைக் காண்டற்கு வேண்டப்படும் சம்பந்தமாய விசேடணவிசேடியத்தன்மை அவ்வபாவத்தின் வேறு



வருந்தன்மையான். சொரூபமாவது; ஒன்றற்கு வடிவமாவதொன்று என்பது.

இங்ஙனம். எ-து. காட்சியுணர்வு முடிந்ததுமுடித்தலென்னுமுத்தியாற்கூறி, அதற்குக் கருவி கூறுகின்றது. சிறப்புக் காரணமாகலின், இந்திரியம் காட்சியுணர்விற்குக் கருவியென்றவாறு.

அதனால். எ-து. காண்டலளவை முடிந்ததுமுடித்தலென்னுமுத்தியாற் கூறுகின்றது.

## அநுமானப்பிரமாணம்.

௬௩. கருதல் கருவி கருத்துணர் விற்குக்
கருத்துயார் வாக்கும் கருத லோரி
னின்றி யமையா தியன்ற லிகழ்ச்சி
யொன்று மிடைந்து நிறைவ தோர்பா
ன்றுப்ப துணர்வ தெனுமா ராய்ச்சி
யாங்கது நியி லடங்கிய புகையினை
யிம்மலை யுடைய தென்னு முணர்வா
மிம்மலை தீயுடைத் தென்னு முணர்வவ்
வாராய்ச் சியினா லுவ ததுவே
கருத்துணர் வென்னக் காட்டு நூலே.

(இ-ள்.) இனி அநுமானமாவது அநுமிதிக்குக் காரணம். அநுமிதி ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம். ஆராய்ச்சி வியாத்தியடுத்த பக்கதருமத்தன்மை ஞானம்: அது 'வன்னியின் வியாப்பியமான புகையுடையது இம்மலை' என்னும் ஞானம். அவ்வாராய்ச்சியாற் றோன்றியது 'இம்மலை தீயுடைத்து' என்னும் உணர்வு. அதுவே

அனுமிதியென்க. வியாத்தி 'யாண்டெப்புகை ஆண்டுத்தீ' என நியதமான உடனிகழ்ச்சி. பக்கதருமத்தன்மை வியாப்பியமான புகை மலை முதலிய பக்கத்தினிருத்தல். எ - று.

*வியாத்தி யடுத்த, இதன்பொருள் முன்னுரையின் வருங் காண்க. தருமம் என்னொழியாது தருமத்தன்மை எனத்தன்மைமேல் வைத்துக் கூறியது அத்தன்மை உடையதனைத்தும் உள்ளுறுத்தற்பொருட்டு. இவ்வாறு கூறுவது இந்நூற்கோர்மரபாவதறிக.

இனி அனுமானம். எ - து. அனுமானவிலக்கணங்கூறுகின்றது.

அநுமிதி. எ - து. அனுமிதியிலக்கணங் கூறுகின்றது. அற்றேல், 'குற்றியோ மகனோ' என்னும் ஐயத்தின் பின்னர் 'மகன்மையான் வியாபிக்கப்படுங் கை கான்முதலியன வுடையன் இவன்' என்னும் ஆராய்ச்சியான் 'மகனே' என்னுங் காட்சியுணர்வு பயத்தலின் ஆண்டு அனுமிதியுணர்வே பயப்படுதெனின், 'மகனைப் புலப்படக்காண்கின்றேன்' எனப்பின்னிகழுமுணர்விற்கு மாறுகோடலின், அதன் 'ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம்' என்னும் இலக்கணத்திற்கு ஐயத்தின் பின்னர்த்தாகிய காட்சிக்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;— அற்றன்று, பக்கத்தன்மையோடு கூடிய ஆராய்ச்சியாற் றோன்றும் ஞானமென்பது கருத்தாகலின். பக்கத்தன்மையாவது துணிதல்வேட்கையில்லாமையோடு கூடிய துணிபொருட்பெறுதியின்மை. துணிபொருட்பெறுதி அனுமிதியுணர்விற்குத்தடை, துணிதல்வேட்கை அதற்குமாற்று, பெறுதியுள்ளவழியும் 'அனுமிப்பேன்' என்னும் வேட்கையான் அனுமிதியுணர்வு நிகழக் காண்டலின், நெருப்பின்சூட்டைத்தடுப்பது மணி, அதற்கு மாற்று மந்திரமாதல்போலுமென்க. எனவே, மாற்றின்மையொடு



கூடியமணியின் அபாயம் சுடுதற்காரணமாதல்போலத் துணியும் விருப்பமில்லாமையோடு கூடிய பெறுதியின்மையும் அனுமிதியுணர்விற்குக்காரணமாதல் பெறப்பட்டது.

* வியாபிக்கப்படும்—உள்ளுறுத்தப்படும், அகப்படுத்தப்படும். பயத்தலின் வரும் எனவும் மாறுகோடலின் வரும் எனவும் ஒட்டுக. அதன் இலக்கணம் என இயையும். அதன், அனுமிதியின். ஆராய்ச்சியாற் பெறப்படுவதனைக் காட்சி என்பது யாங்ஙனமெனிற், குற்றியோமகனோ என்புழி அஃது இனிது விளங்காதேனும் கண்ணிற்குத் தோன்றுந் தன்மையான். ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம் என்றதற்குக் கருத்தாகலின் என ஒட்டிக்கொண்டுணர்க.

* பக்கத்தன்மை—பக்கத்தினது தன்மை. பக்கம் பின்னர் வருங் காண்க.

* புலப்படக் காணப்பெறுவது துணிபொருட்பெறுதி என்பதூஉம், ஆராய்ச்சியான் அனுமிதிபெறற்குத் துணிபொருட்பெறுதி தடை என்பதூஉம் மேலுதாரணத்தின்கட் பெறப்படுதல் காண்க.

*பெறுதி தடையாகலின், துணிபொருட்பெறுதியின்மையொடு கூடிய ஆராய்ச்சியென்னொழியாது துணிதல் வேட்கையின்மையொடு கூடிய துணிபொருட் பெறுதி என்றது எற்றிற்காலோ வெனின், துணிதல் வேட்கை உளதாயின், ஆராய்ச்சியான் அனுமிதி பெறுதற்குத் தடையாய பெறுதியுள்வழியும், அதனானே அனுமிதி பெறப்படுதலின், ஆராய்ச்சியே கருவி என்பதூஉம் துணிபொருட் பெறுதிதடைஎன்பதூஉம் பொருந்தாமையொடு பக்கத்தின் இலக்கணத்திற்குக் குற்றமும் வருதலான்.

ஆராய்ச்சி. எ-து. ஆராய்ச்சியிலக்கணங் கூறுகின்றது. வியாத்தியை விடயமாகவுடைய பக்கதருமத்தன்மை ஞானம் யாது அது

ஆராய்ச்சி என்பதாம். 'அது' என்பது ஆராய்ச்சியைத் தெரித்துக் காட்டியவாறு. 'அவ்வாராய்ச்சியால்.' எ-து. அநுமிதியுணர்வினைத் தெரித்துக்காட்டியவாறு.

வியாத்தி எ - து. வியாத்தியிலக்கணங்கூறுகின்றது.

'யாண்டெப்புகை' எ - து. வியாத்தியைத் தெரித்துக்காட்டியவாறு. 'நியதமான உடனிகழ்ச்சி' எ - து. இலக்கணம். 'உடனிகழ்ச்சி' ஒருநிலைக்களத்திருத்தல். அதுநியதமாதல் ஏதுவினிலைக்களத்துளதாகிய முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாத துணிபொருளினிலைக்களத்துளதாதல். அஃதே வியாத்தியென்பதாம்.

*ஏதுவின் துணிபொருளினிலைக்களத்துளதாதலை நியதமாதல் என்றது, அந்நிலைக்களம் இன்றியமையாதுநிற்கும் ஏதுதுணிபொருள்களை உடனிகழ்த்தலதாகலின், அவ்வுடனிகழ்ச்சி உளதாயதின்மை பெறப்படுதலின்மையான். முழுதுமபாவத்திற்கெதிர்மறையாகாத, இன்றியமையாத, இல்லாதிருத்தல்கூடாத, விட்டுநீங்கமாட்டாதனவென்பன ஒருபொருண்மேலன. பாயிரம் பார்க்க.

பக்கதருமம். எ - து. பக்கதருமத்தன்மை இன்னதென்கின்றது.

௨௭. சாரா ராய்ச்சி தனக்கே பிறர்க்கென்
இருவகைத் தாகி யியலு மென்ப.

(இ - ள்) இவ்வநுமானம் தன்பொருட்டநுமானம், பிறர்பொருட்டநுமானம் என இருவகைத்து. எ - று.

இவ்வநுமானம். எ-து. அநுமானத்தைப் பகுக்கின்றது.

௨௮. தனக்கா ராய்ச்சி தானெடுத் தடுத்து
மனைக்கடுக் கனைமுதற் காண்ட லானே



யாண்டெப் புகையுண் டாண்டுத் தீயுண்
டெனத்துணி பொருளோ டேது விரண்டு
மின்றி யமையா தென்னுட னிகழ்ச்சி
கண்ட வுணர்வு கருத்தி னிருந்தோ
ரேதுத் தோன்றுழி யெழும்ப வதன்பி
னிதுதுணி பொருளி னிடைப்படு மேது
வுறுவ தென்னு முணர்வா மஃதே
குறியா ராய்ச்சி கூறுங் காலே.

(இ - ள்.) தன்பொருட்டநுமானம் தனக்கு அநுமிதி ஞானம் விளங்குதற்குக் காரணம்: அஃதானமன்றே, ஒருவன் தானே அடுத்தடுத்துக்காண்டலால் 'யாண்டெப்புகை யாண்டுத் தீயுண்டு' என அடுக்களை முதலியவற்றின் அவ்விரண்டற்கும் வியாத்தியை உணர்ந்து, மலையின் அண்மையிற் சென்றான்; ஆண்டுச்சென்றுழி 'இம்மலையில் தீயுண்டோ இல்லையோ' என ஐயுற்றான்; அம்மலையின் மேற் புகையைக்கண்டுழி 'யாண்டெப்புகை ஆண்டுத் தீ' என்னும் வியாத்தி நினைவு நிகழும். அந்நினைவு நிகழ்ந்தபின்னர், 'வன்னியின் வியாப்பியமான புகையையுடையது இம்மலை,' என்னுமுணர்வு தோன்றும்: அதுவே இலிங்கபராமரிசமெனப்படும். அதனால் 'இம்மலை நெருப்புடைத்து' என்னும் அநுமிதிஞானம் தோன்றும். இது தன்பொருட்டநுமானமெனக. இலிங்கபராமரிசமெனினும் குறியாராய்ச்சியெனினும் ஒக்கும். எ - று.

*தனக்கு என்றது பிறரானல்லது தன்னானே தனக்கு என்றவாறு.

ஒருவன். எ - று. தன்பொருட்டனுமானத்தைத் தெரித்துக் காட்டுகின்றது. அற்றேல், 'யாண்டேப்பிருதிவியின் கூருர்த்தன்மை ஆண்டு இரும்பாற்போழற்பாலதாந் தன்மை,' என்றற்றொடக்கத்த உடனிகழ்ச்சி பலகாற்கண்டுழியும் வச்சிரமணி முதலியவற்றிற் பிறழக் காண்டலின், அடுத்தடுத்துக்காண்டலால் வியாத்தி கவர்தல் யாண்டையதெனின்;— அற்றன்று, பிறழ்ச்சி யுணர்வின்மையொடு கூடிய உடனிகழ்ச்சியுணர்வே வியாத்தியைத் தெரிவிப்பதாகலின். பிறழ்ச்சியுணர்வு துணிவும் ஐயமுமென இருவகைத்து. அவற்றுள், துணிவு இயல்பானே தெரிந்து நீக்கப்படும். ஐயப்பிறழ்ச்சி தருக்கத்தாற்றெரிந்து நீக்கப்படும். புகைநீக்களின் வியாத்தியுணர்வுக்கட் பிறழ்ச்சியையப்பாடு நீக்குவது காரியகாரணத்தன்மைக்குக் கேடு வருமென்னுந் தருக்கமாமென்க. அற்றேல், உலகத்துள்ள எல்லாப் புகைநீக்களும் காட்சிப்படாமையின் வியாத்தியுணர்ச்சி யாண்டையதெனின்;— அற்றன்று, புகைத்தன்மை தீத்தன்மையாகிய அவற்றின் பொதுவியற்சாதி உணர்ப்படுதலின் எல்லாப் புகை நீக்களினுணர்வும் நிகழும் [illegible]. 'அநுமானம்' என்பது இலிங்கபராமரிசத்தான் என்றவாறு.

* அடுத்தடுத்துக்காண்டலான் வியாத்தி கவரப்படும் என்பது மேலே வருவதறிக.

* பிறழ்ச்சியின்மையொடுகூடிய உடனிகழ்ச்சியுணர்வேவியாத்தியைத் தெரிவிப்பதென்றது, மேதுதாரணத்தின்கண் ஏதுதுணிபொருளின்றி யிருப்பதாதலின் முன்னர்ப் பலகாற் காணப்பட்ட உடனிகழ்ச்சிக்குப் பிறழ்ச்சியுண்மை எய்துதலின் அஃது இன்றியமையாதாதல் பெறப்படாமையான்.



* பிறழ்ச்சி - ஒருமுறைபற்றி நிகழாமை, தவறு, அஃதாவது கண்டுப் பலகாற்காணப்பட்டு உடனிகழ்ச்சி ஒரோவிடத்துக் காணப்படாமை; அல்லதூஉம் ஏது துணிபொருளுள்வழியேயன்றி இல்வழியும் உளதாவது. இயல்பானே துர்வாயிலானன்றித்தானே என்பதாம்.

* பிறழ்ச்சிஐயப்பாடாவது புகையுள்வழித்தீயுளது என்பதுன் உளதாமுடனிகழ்ச்சிக்கு யாண்டாயினும்பிறழ்ச்சி உண்டாங்கொலோ என்பது. அவ்வையப்பாட்டை நீக்குவது தருக்கம், அஃதாவது பிறழ்ச்சியின்மையைத் துணிவிப்பது தருக்கம் என்றது, தீயின்றாயிற் புகையுமின்றாதல்வேண்டும் என்னுந் தருக்கந்தான், விட்டு நீங்காமை, அஃதாவது ஏது துணிபொருளின்றியிராமை உணரப்படுதலின், ஆண்டு உடனிகழ்ச்சிக்குப் பிறழ்ச்சி உளதாமாறின்மையான்.

* எனவே பிறழ்ச்சியின்றி உடனிகழ்ச்சியின்றியமையாததாய வியாத்தியாவது ஏது துணிபொருளின்றியிராமையானல்லது எய்தாமையின்மைகாண்க. இவ்வாறு வியாத்தி ஏதுதுணிபொருளின்றியமையாமையானல்லது எய்தாமையும் இதனின்றும் [illegible] என்பதுபட இராமையினுருதற்பாலதென்பது இதனினுயித்து என்பதுபட வருவதறிக. பிறழ்ச்சியின்மையானல்லது உடனிகழ்ச்சியின்றியமையாமையும் ஏது துணிபொருளின்றி இராமையினானல்லது பிறழ்ச்சியின்மையும் உண்டாமாறின்மையுணர்க.

* காரிய காரணத்தன்மைக்குக் கேடுவருமென்னுந் தருக்கம் என்றது தீயின்றாயிற் புகையுமின்றாதல் வேண்டும் என்பதனுற் புகையுமின்றாதல் வேண்டவே புகைகாரியம் தீயதற்குக்காரணம் என்பது பெறப்படாமையான். அத்தன்மை அவற்றிற்கின்றாதலின் மையின் புகையுள்வழித்தீயுளதாதலின்மை எய்தாமை யுணர்க.

தன்மையுடையதனைத் தம் உள்ளுதற்பொருட்டுத் தன்மைமேல் வைத்துக் கூறுமாபு "பொதுமைச்சார்பு உணரப்படுதலின் எல்லாப் புகைதீக்களினுணர்வும் நிகழும்" என்பதனானுமுணர்க.

௪௯. பிறர்க்கா ராய்ச்சி பேசிற் றுகைமுன்
றொடரே தாவினுற் றுணிவுற் றுணர்வைப்
பிறருணர் தற்குப் பேசினர் தாமப்பார்
தொடர்மொழி தன்னைச் சொல்லுவ தென்ப.

(இ - ள்.) பிறர்பொருட்டனுமானமாவது தான் புகையால் வன்னியை அனுமித்து, பிறர் உணர்தற்பொருட்டு ஐவகையுறுப்புக்களையுடைய வாக்கியத்தைக் கூறுவது. வாக்கியமெனினும் தொடர்மொழியெனினும் ஒக்கும். அது 'மலை தீயுடைத்து, புகையுடைமையால், யாது யாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களைபோல, இதுவும் அங்ஙனம், ஆதலின் இங்ஙனம்', என வரும். இதனுட் கூறப்பட்ட இலிங்கத்தாற் பிறருந் தீயுண்டெனத் தெளிவர். (எ - று.)

*அங்ஙனமாவது அடுக்களை உடைத்தற்போலுடையது. இங்ஙனமாவது துணிபொருளை உடைத்தாவது என்பதாம்.

பிறர்பொருட்டனுமானம். எ - து. பிறர்பொருட்டனுமானங் கூறுகின்றது.

அது. எ - து. ஐவகை யுறுப்புக்களையுடைய வாக்கியத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

௫௰. கோதி லைவகை யுறுப்பவை கூறி
னேது மேற்கோ ளெடுத்துக் காட்டோ
டாகுப நயமென் றனைகாட் டொன்றி



முறையின் முடிந்தது முடித்த லிவற்றை
யறிக புகைதீ யடுக்களை மலையான்.

(இ - ள்) ஐவகையுறுப்புக்களாவன, பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபாயம், நிகமனமென்னுமிவை. பிரதிஞ்ஞை, மேற்கோள் என்பன ஒருபொருட்கிளவி. இதனுள் 'மலை தீயுடைத்து' என்பது பிரதிஞ்ஞை, 'புகையுடைமையால்' என்பது ஏது, 'யாது யாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களைபோல' என்பது உதாரணம், 'இதுவும் அங்ஙனம்' என்பது உபாயம், 'ஆதலின் இங்ஙனம்' என்பது நிகமனம் எனவுணர்க. எ-று.

ஐவகை. எ - து. ஐவகையுறுப்புக்களின் பெயர் கூறுகின்றது.

இதனுள். எ-து. எடுத்துக்காட்டிய வாக்கியத்தின்மேற்கோள் முதலிய ஐந்தினையும் பகுத்துக்காட்டுகின்றது. பக்கத்தைத் துணிபொருளுடைத்தாகக் கூறுகின்றது மேற்கோள். இன், ஆன் என்னுமுருபீறாக இலிங்கத்தையெடுத்துக்காட்டுவது ஏது. வியாத்தியை எடுத்துக்காட்டுவது உதாரணம். பக்கதருமத்தன்மையுணர்தற்பொருட்டுத் திருட்டாந்தத்தைச் சார்த்திக் கூறுவது உபாயம். முடிந்தது முடித்தல் நிகமனம். மற்றதலையின்மை காட்டல்முதலியன நிகமனத்திற்குப் பயனென்க.

௫௧. குறியா ராய்ச்சி கோளற்கரங் கருவி
யிருகருத் துணர்விற் றெல்லா னதுதான்
கருது மளவெனக் கட்டுரைத் தனரே.

(இ - ள்) தன்பொருட்டனுமிதி பிறர்பொருட்டனுமிதி என்னும் இவையிரண்டற்கும் இலிங்கவாராய்ச்சியே கருவி. அதனால் இலிங்கபராமரிசம் அனுமானமெனப்பட்டது. எ - று.

தன்பொருட்டனுமிதி. எ-து. அனுமிதியுணர்விற்குக் காரணங் கூறுகின்றது. அற்றேல், வியாத்தியினையும் பக்கதருமத் தன்மையுணர்வுமே அனுமிதியைப்பிறப்பித்தலின் அவற்றிடையிடுத்த ஆராய்ச்சி வேண்டற்பாலதென்றக்கெனின்;—அற்றன்று, 'வன்னியின் வியாப்பியமான புகையுடைத்து இது' என்னும் சாத்தபராமிசத்தின்கண் ஆராய்ச்சி ஒருதலையான் வேண்டற்பாலதாகலின் எளிதாக யாண்டும் ஆராய்ச்சியே காரணமென்றல் பொருத்தமுடைத்தாகலின். இலிங்கமே காரணமாம் பிறவெனின்;— இறந்தது முதலியவற்றிற் பிறழ்தலான், ஆகாதென்க. வியாபார முடைத்தாகிய காரணமே கரணமென்பார் மதத்தின் ஆராய்ச்சிவழியான் வியாத்தியுணர்வு கரணமெனக்காண்க. வியாபாரம் அதனிற்றோன்றி அதனிற்றோன்றற்பாலதனைத் தோற்றுவிப்பது.

* சாத்தபராமிசம் சத்தத்தாற் பிறப்பதாய பராமிசம். சாத்தபராமிசத்தின்கண் என்பது தன்றோற் பெறப்படாது கேள்வியான் அஃதாவது எடுத்துக் கூறப்படும் தொடர்மொழியான் ஆராய்ச்சி பெறுமிடத்து என்றவாறு. ஆண்டு ஆராய்ச்சி ஒருதலையான் வேண்டற்பாலது என்றது பிறர் சொல்வதனானல்லது தானே உணரமாட்டாதானுக்கு வியாத்தியினையும் பக்கதருமத்தன்மை யுணர்வும் உண்டாமாறின்மையின் ஆராய்ச்சி பிறப்பிப்பதாய வன்னியின் வியாப்பியமான புகையுடைத்து இது என்னுந்தொடர்மொழியானல்லது அனுமிதி பிறக்குமாறின்மையான். எளிதாக என்றது ஆராய்ச்சியின்றியின். அஃதாவது எது அனிபொருளின் வியாப்பியமானதென்னு முணர்வு பக்கதருமத்தன்மையுணர்வு நிகழுமிடத்தே நிகழாதாயின் உணர்விற்கிடையறவுண்டாகலின் இடையறவுபட்டுநிற்பனவற்றைக் கொண்டு கூட்டி இடர்ப்பட வேண்டுதலான் என்க. சாத்தபராமிசமே பிறர்பொருட்டனுமா



னத்தின்கண் உபாயமெனப்படுவது என்பது. இறந்தது முதலியன வாவன;—புகையின்றியும் அழன் சுவடுடையதாவும், இனிப்புகைவரற்பாலது எனக்கருதப்படுவதும் எனவருவன. வியாபாரமுடைத்தாகிய காரணம் என்றது வியாத்தியை. ஈண்டு வியாபாரமாவது ஆராய்ச்சி என்பது.

அக்குறல். எ - து. அனுமானத்தை முடிக்குமுடித்தல் என்னும் உத்தியாற்கூறுகின்றது.

௩௨. மன்னுடன் பாட்டு மன்று மிரண்டு
முறையிருங் கியைந்து முடியு நேர்மறை
யெனக்குறி மூன்று மியலு மென்ப.

(இ - ள்.) இலிங்கம் அந்துவயவெதிரேகி, கேவலாந்துவயி, கேவலவெதிரேகி என மூவகைத்து. அந்துவயம் உடம்பாடு. வெதிரேகம் மறை அந்துவய வெதிரேகி நேர்மறை. எ - று.

இலிங்கம். எ - து. இலிங்கத்தைப் பகுக்கின்றது.

௩௩. இன்றியமையா நின்றுடனிகழ்ச்சி
யுடன்பாட் டானு மறுமறையானு
மன்று குறிநேர் மறையெனா லதனை
யடுப்புகை யுடைமையி னறிக வினியே.

(இ - ள்.) அந்துவயத்தானும் வெதிரேகத்தானும் வியாத்தியுடையது அந்துவயவெதிரேகி. வன்னியைச் சாதிக்குங்கால் புகையுடைமை அந்துவயவெதிரேகி, 'யாண்டெப்புகை ஆண்டுத்தீ அடுக்களைபோல' என அந்துவயவியாத்தியும், 'யாண்டுத் தீயில்லை ஆண்டுப் புகையில்லைமடுப்போல' எனவெதிரேகவியாத்தியும் உடைமையின்.

அந்வயத்தாலும். எ - து. அந்வயவெதிரேகியைத்தெரித்துணர்த்துகின்றது. ஏதுவிற்குந் தனிப்பொருட்கும் உளதாயவியாத்தி அந்வயவியாத்தி, அவ்விரண்டன் அபாவங்கட்கு உளதாய வியாத்தி வெதிரேகவியாத்தியென்றறிக.

*தீயினதின்மை வியாப்பியமாவதூஉம் புகையினதின்மை வியாபகமாவதூஉம் ஒழுக்காய்ச்சிய இரும்பின்கண் வைத்துணர்ந்து கொள்க.

௫௪. உடன்பா டுடையதென் றோதுங் குறிதா
னின்றி யமையா நின்றட னிகழ்ச்சி
யுடம்பா டொன்றி னுடைய ததனை
மன்பெய ரிட்டு வழங்கற் பால
தென்னுக வளக்கற் பாலதின் னைத்தே.

(இ - ள்.) இனி அந்வயத்தின்மாத்திரம் வியாத்தியுடையது கேவலாந்வயி: அஃதெங்ஙனம், 'குடம் அபிதேயம், பிரமேயத்தன்மையால், ஆடைபோல' எனவரும். ஈண்டுப் பிரமேயத்தன்மை அபிதேயத்தன்மைகட்கு வெதிரேகவியாத்தியின்று, எல்லாப்பொருளும் பிரமேயமும் அபிதேயமுமாதலால். பிரமேயம் அளவையால் அளக்கற்பாலது. அபிதேயம் பெயரிட்டு வழங்கற்பாலது. எ - று.

இனி அந்வயத்தின். எ - து. கேவலாந்வயியிலக்கணங்கூறுகின்றது. கேவலாந்வயியாகிய தனிப்பொருட்கு இலிங்கம் கேவலாந்வயி. முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாமை கேவலாந்வயித்தன்மை. இறைவனுணர்விற்கு விடயமாந்தன்மையும் எல்லாம் என்னும் மொழியின் வழங்கற்பாலதாந் தன்மையும் யாண்டுமுண்மை[illegible] அவற்றிற்கு வெதிரேகமின்மையுணர்க.



௫௫. இன்றி யமையா நின்றட னிகழ்ச்சி
மறைமாத் திரத்தின் மருவுங் குறியே
மறையுடைத் தென்ன வழங்கப் படுமால்.

(இ - ள்.) இனிக் கேவலவெதிரேகி வெதிரேகத்தின் மாத்திரம் வியாத்தியுடையது: அஃதெங்ஙனம், 'பிருதிவி ஏனையவற்றின் வேறு, நாற்றமுடைமையின், யாது ஏனைப்பொருள்களின் வேறன்று அது நாற்றமுடைத்தன்று அப்புப்போல, இஃது அங்ஙனமன்று, ஆதலின் இங்ஙனமன்று' எனவரும். ஈண்டு 'யாது நாற்றமுடைத்து அது ஏனைப்பொருள்களின் வேறு இதுபோல' என்னும் அந்வயத்தில் திருட்டாந்தம் இல்லை, பிருதிவிமுழுதும் பக்கமேயாதலின். எ - று.

*கேவலவெதிரேகியாவது அந்வயம் இல்லது எனவே கேவலவெதிரேகியாகிய தனிப்பொருட்கு இலிங்கம் கேவலவெதிரேகி என்றதாயிற்று.

இனிக் கேவலவெதிரேகி. எ - து. கேவலவெதிரேகியிலக்கணங் கூறுகின்றது.

பிருதிவி. எ - து. அதற்கு உதாரணங்கூறுகின்றது. அற்றேல், ஏனையவற்றின் வேறுதல் முன்னர்த் துணியப்பட்டதோ அன்றோ? துணியப்பட்டதெனின் யாண்டுத் துணியப்பட்டது ஆண்டு ஏதுவுண்டாயின் அந்வயமுடைத்தாதல் கூடும்; ஆண்டு ஏதுவின்றாயிற் சிறப்பென்னுமனைகாந்திகமாம்; அன்றெனின், தனிபொருளுணர்ச்சியின்மையின் - அதனான் விசேடிக்கப்படும் அநுமிதியுணர்வு எங்ஙனந்தோன்றும், விசேடணவுணர்ச்சியின்றி விசேடிக்கப்பட்டதனுணர்வு பிறவாமையின். அன்றியும், எதிர்மறையுண

ணமுடைமை, தொழிலுடைமை யென்றலுமாம். 'நித்தமாய்' எ-து. வியாபகத்தன்மையானே ஆன்மாவைப்போல் நிலையுடைப்பொருளென்றவாறு.

௧௫. இறப்புமுதல் வழக்கிற் கேதுக் காலம்.

(இ - ள்.) காலமாவது இறப்புமுதலிய வழக்கிற்கு ஏதுவாயிருப்பது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும்.

காலமாவது. எ-து. காலத்தினிலக்கணங் கூறுகின்றது. காலம் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாயிருப்பது, எல்லாக் காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

௧௬. கிழக்குமுதல் வழக்கிற் கேதுத் திசையே.

(இ - ள்.) திக்காவது கிழக்கு முதலிய வழக்கிற்கு ஏதுவாயுள்ளது. அதுவும் ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும். (எ-று)

திக்காவது. எ-து. திக்கிலக்கணங் கூறுகின்றது. திக்கும் எல்லாக்காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

௧௭. அறிவுப் பண்பிற் றான்மா வெனக
விறையே யீசன்முற் றறிவனோர் முதலே
யுயிர்தா னுடறொறும் வெவ்வே றாகும்.

(இ - ள்.) ஆன்மாவாவது ஞானத்திற்கு இடமாயுள்ளது. அது பரமான்மா, சீவான்மா என இருவகைத்து. அவற்றுள், பரமான்மா ஈசுரன், முற்றறிவன், ஒருவனே. சீவான்மா சரீரந்தோறும் வேறாய், வியாபகமாய், நித்தமாய் இருப்பன்.

ஆன்மாவாவது. எ-து. ஆன்மாவினிலக்கணங் கூறுகின்றது.

அது. எ-து. ஆன்மாவைப் பகுக்கின்றது.



அவற்றுள், பரமான்மா. எ-து. பரமான்மாவினிலக்கணங்கூறுகின்றது. நித்தமானஞானத்திற்கு இடமாதல் ஈசுரனிலக்கணம். அற்றேல், ஈசுரன் உண்டென்பதற்குப் பிரமாணமென்னை? அருவப்பொருளாதலாற் புறவிந்திரியக்காட்சியன்று, ஆன்மாக்களின் சுகதுக்க முதலியவற்றின் வேறாதலால் அகவிந்திரியக்காட்சியுமன்று, இலிங்கமின்மையான் அனுமானமுமன்றாலெனின்;—அற்றன்று, 'அங்குரமுதலியன கருத்தாவையுடையன, காரியமாகலின், குடம்போலும்' என்னுமனுமானம் பிரமாணமாகலான் என்பது. கருத்தா உபாதானத்தைப் புலப்படக்காணும் அறிவிச்சை செயல்களையுடையபொருள். உபாதானம் சமவாயிகாரணம். பரமாணு முதலிய நுண்ணியபொருளெல்லாவற்றையுங் காண்டலின், ஈசுரன் முற்றறிவன்; "இறைவனு வான்ஞானமெல்லா மெல்லா முதன்மையனுக் கிரகமெலா மியல்புடையான்" என்றற்றொடக்கத்தாகமமும் பிரமாணமெனவறிக.

*அருவமெனவே கண்ணிற்கும், பொருளெனவே ஏனையிந்திரியங்கட்குங் காட்சியின்மை போதரல்காண்க. பொருளென்றது ஈண்டுத் திரவியத்தை. என்னை? ஏனையிந்திரியக் காட்சியன்றாதல் சத்தமுதலிய குணங்கட்கின்றித் திரவியத்திற்கே யுண்டாகலான்.

*இலிங்கம்—குறி.

*ஈண்டு ஆகமம் என்றது தேனொழுகு திருவிருத்தச் சிவஞான சித்தியினை.

சீவான்மா. எ - து. சீவனிலக்கணங் கூறுகின்றது. சுகமுதலியனவுடைமை சீவான்மாவினிலக்கணம். அற்றேல், 'யான் மனிதன்' 'யான்பார்ப்பான்' என யாண்டும் யானென்னுமுணர்விற்குச் சரீரமே விடயமாகலின், சரீரமே ஆன்மாவெனிற்படுமெழுக்

தென்னையெனின்;—அற்றன்று, சரீரமே ஆன்மா என்பார்க்குக் கை கால்முதலிய சரீரம் நசித்தலால் ஆன்மாவும் நசித்ததெனல் வேண்டுமாகலினென்க. ஆயின் இந்திரியங்கள் ஆன்மாவென்றே மோவெனின்;—என்றும், 'குடத்தைக்கண்ட யானே இப்பொழுது குடத்தைத் தீண்டினேன்' என்னுந்தொடர்ச்சியறிவு நிகழா தொழிதல்வேண்டுதலின். ஒருவன் அநுபவித்ததனை மற்றொருவன் ஒட்டியுணர்தல் கூடாமையுணர்க. அதனால் ஜீவான்மா உடம்பு பொறி முதலியவற்றின் வேறெனப்படும், சுகமுதலியவற்றின் வேறுபாட்டான் உடம்புதோறும் வெவ்வேறெனவுணர்க. பரமாணுவெனின் உடம்புமுழுதும் வியாபித்த சுகாக்கையநுபவங்கூடாதாகலானும், இடைப்பட்ட பரிமாணமுடையதெனின் அநித்தமாதல் வேண்டும், வேண்டவே செய்த வினை அழிந்து செய்யாத வினை தோன்றிற்றெனல் வேண்டுமாகலானும், அவ்வாறன்றி நித்தமாய் வியாபகமாயுள்ளது ஜீவான்மா வென்றுணர்க.

*தொடர்ச்சியாவது, கண்டவனே தீண்டினனாதல். நிகழாதொழிதற்குக் காரணம் காட்டிய அநித்தவாக்கியம் எழுந்தது என்க.

*வினையழிந்து தோன்றிற்று எனல்வேண்டும் என்றது நித்தமாய ஆன்மாவை அநித்தமெனவே முன்னரீட்டப்பட்டவினை பின்னைப்போகத்திற் கேது என்பது பெறப்படுமாறின்மையான்.

*இவ்வாறு மாறுகொளக்கூறின் அதனை மாறுகொளக் கூறுவதாய தருக்கஞ்செய்தலான்மறுப்பது இந்நூலியல்பாதல் உணர்க. இஃதே முன்னர்க் கூறப்படும் தருக்கம் எனப்படுவது என்க.

கஅ. மனமணு வடிவாய் வருமின் பாதி
யறிதற் கின்றி யமையாக் கருவி
யாகிப் பலவா யுயிரின் றாறுமே.



(இ - ள்.) மனமாவது சுகம் முதலிய அநுபவத்திற்குக் கருவியாகிய இந்திரியம். அதுவும் உயிர்தோறும் நியதமாயிருத்தலின் அநேகமாய், பரமாணுரூபமாய், நித்தமாயிருக்கும். (எ - று.)

மனமாவது. எ-து. மனத்தினிலக்கணங்கூறுகின்றது. பரிசமின்றிச் செயலுடைத்தாதல் மனத்தினிலக்கணம்.

அதுவும் எ-து. மனத்தைப் பகுக்கின்றது. ஒவ்வோரான்மாவிற்கு ஒவ்வொருமனமாக, ஆன்மாக்கள் அநேகமாகலின், மனமும் அநேகமென்றவாறு. இடைப்பட்டபரிமாணமெனின் அநித்தமாய் முடியுமாகலின், 'பரமாணு' எனப்பட்டது. அற்றேல், மனம் வியாபகம், பரிசமில்லாத திரவியமாகலின், ஆகாயம்போலும் எனிற்படுமிழுக்கென்னையெனின்;—மனம் வியாபகமாயின் ஆன்மாவிற்கும் மனத்திற்குஞ் சையோகங்கூடாமையின், ஞானமுண்டாகாதாதல்வேண்டுமென்க. வியாபகப்பொருளிரண்டற்குச் சையோகமுண்டெனின்;—நன்று சொன்னாய், அச்சையோகம் நித்தமாகலின் உறக்கமின்றியிருத்தல்வேண்டும், சுழுமுனைநாடியின் வேறாய இடத்து ஆன்மாவிற்கும் மனத்திற்குமுளதாகிய சையோகம் எக்காலமும் உண்மையானென்க. அணுவாயின், 'மனஞ்சுழுமுனைநாடியின் நுழைந்த காலத்துத் துயில் கூடும், நுழையாத காலத்து அறிவு நிகழும்' என்பதனால் அணுவாதல் பெறப்பட்டது.

*சையோகங் கூடாதென்றது வியாபகப்பொருட்குப் புடைபெயர்ச்சியின்மையின். உறக்கமின்றியிருத்தல் வேண்டும் என்றது நுழையாது வேறாயகாலத்துச் சையோகம் உண்மையான் அறிவு நிகழுமாகலான். அணுவாயின் என்னும் வாக்கியம் மேல்வாக்கியத்திற்கு விளக்கமாவது காண்க.

*அஃதேல் இஃது என்சொல்லியவாறோ எனின் வியாபகமாயின் மனதிற்கும் ஆன்மாவிற்கும் பிரிவுகூடாமையின் அறிவு நிகழும், நிகழவே உறக்கமின்றி யிருத்தல்வேண்டும். அணுவாயின் மனம் பிரிந்து சுழுமுனையின் ஒடுக்கும்; ஒடுக்கவே அறிவு நிகழாமையின் துயில்கூடும். ஆகலான் மனம் வியாபகமன்று அணுவே என்பது சொல்லியவாறு என்க.

*மனம் என்பதிலுகப்போந்த சூத்திரம் இறைவன்பாலே இருந்தமிழ்கேட்டு முறை முதலிலக்கண மொழிந்தருள் முனிவர் ஆசிரியர் அகத்தியனார் அருளிய சூத்திரம்.

## உ. குணம்.

௧௬. கண்மாத் திரத்தாற் கவரப் படுகுண
மெண்ணி னுருவ மெய்ந்தெரி நீர்மவ்
பொன்மை வெண்மை புகைமை கருமை
செம்மை பசுமை சித்திர மெனவேழ்
வகைய மண்ணின் மருவு மேழு
நிகழும் வெண்மை நீர்தீ யிரண்டி
னிறைநீர் விளங்கி டில்லா தேறும்.

(இ - ள்.) உருவம் விழிமாத்திரத்தாற் கவரப்படுங்குணம். அதுவும் வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமை, புகைமை, சித்திரம் என்றும் வேறுபாட்டால் எழுவகைத்து. பிருதிவி அப்புத் தேயுக்களில் இருப்பது. அவற்றுள், பிருதிவியில் எழுவகையும் உள்ளது. நீரில் விளங்கா வெண்மை. தேயுவில் விளக்கமான வெண்மை. (எ - று.)

*வெண்மை உள்ளது எனக்கூட்டுக.



உருவம். எ-து. உருவத்தினிலக்கணங்கூறுகின்றது. எண்முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றும், உருவத் தன்மையாகிய சாதியின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றுங் கூறப்பட்டது. சித்திரரூபத்தை வேறு பிரித்ததென்னை? வியாபியாதிருக்குங் கருமைமுதலியவற்றின் கூட்டமே சித்திரரூபமாலோவெனின்;—அற்றன்று, வியாபித்திருத்தலே உருவத்திற்கு நியமமாகலின். அற்றேல், சித்திரகலிங்கத்தில் அவயவவுருவு தோன்றுமென்றுமோ வெனின்;—என்றும், அவயவிக்கு உருவமின்மையால் ஆடை காட்சிப்பொருளன்றாதல் பெறப்படுமாகலின். காட்சியைப் பயப்பது உருவமென்றது உருவுடைப்பொருளிற் சமவேதமெனக் கோடல் மிகையாமென மறுக்க. இதனானே ஆடை காட்சிப்பொருளாதல் யாவருமொன்றுற் பெறப்படாமையின், சித்திரவுருவம் உண்டென்பது பெற்றாம்.

*எண்முதலியவற்றின் அதிவியாத்திவரும் என்றது அவையும் விழியாற் கவரப்படுவனவாதலுடைமையான். அக்குற்றம், மாத்திரம் என்பதனுள் நீங்கும் என்றது எண்முதலியன துவக்காலுங் கவரப்படுதலின் விழியாற்கவரப்படுதல் அவற்றிற் கிலக்கணமாதலை மாத்திரம் என்பது விலக்கிற்றலான். எண்முதலியவாவன:—சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம் என்பன.

*குணம் எனலான் நீங்கும் என்றது விழிமாத்திரத்தாற் கவரப்படும் என்பது உருவத்தன்மைக் காதலைத் தவிர்ப்பது குணம் என்பதாகலின். என்னை? தன்மைகுணமன்மையான். அவயவவுரு-விரவிய சமவாயிகாரணத்தினின் உருவம், அஃதாயது வியாபியாதிருக்குங் கருமை முதலிய உருவென மேற்கூறப்பட்டது என்க.

*கோடலை மறக்க என்றது, உருவுடைப்பொருளாகிய அவயவத்திற் சமவாய சம்பந்தத்தா னிருப்பதாய அவயவியே ஒற்றுமை பற்றிக் காட்சியைப் பயப்பது எனக்கோடன் மிகையாகலான்.

௨0. காண்சுவை நாவாற் கவரப் படுகுணங்
கார்ப்புப் புளிப்புக் கைப்புக் காழ்ப்பே
யினிப்புத் துவர்ப்பென் றிருமூன் றுகி
நீரி னினிப்பே நிலத்தா றுறுமே.

(இ-ள்) இரதம் நாவினாற் கவரப்படுங் குணம். அதுவும் தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் வேறுபாட்டால் அறுவகைத்து. மண்ணினும் நீரினும் இருப்பது. மண்ணில் அறுவிதமும்; நீரில் தித்திப்பொன்றே. (எ - று.)

இரதம். எ - து. சுவையினிலக்கணங்கூறுகின்றது. உருவம்முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாவினாற்கவரப்படுவது' என்றும், சுவைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றுங் கூறப்பட்டது.

மண்ணினும். எ - து. சுவைக்குச் சார்பு கூறுகின்றது.

௨௧. மண்மாத் திரத்தின் மருவி மூக்காற்
கவரப் படுகுணங் கானி றாற்ற
நன்று தீதென் றிரண்டாய்க் கண்ணும்.

(இ-ள்) கந்தம் மூக்கினாற் கவரப்படுங் குணம். அதுவும் நறுநாற்றம் தீநாற்றம் என இருவகைத்து. பிருதிவியின் மாத்திரம் இருப்பது. எ - று.

கந்தம். எ - து. நாற்றத்தினிலக்கணங் கூறுகின்றது. நாற்றத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமு



தலியனவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மூக்கினாற்கவரப்படுவது' என்றுங்கூறப்பட்டன.

௨௨. ஊற்ற றிந்தோ லொன்றாற் கவரப்
பட்டிடு குணமது படிநீர் தீக்கா
றுங்கி னின்று சசிர வெப்ப
மிரண்டு மில்ல தொனமூன் றுரு
நீர்க் குளிர்ச்சி நெருப்பின் வெப்ப
மேனை யிரண்டிற் கிரண்டு மிலதே.

(இ-ள்) பரிசம் துவக்கிந்திரியத்தான் மாத்திரம் கவரப்படுங் குணம். அது குளிர்ச்சி, சூடு, குளிர்ச்சியுஞ்சூடுமில்லது என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. பிருதிவி அப்புத் தேயு வாயுக்களில் இருப்பது. அவற்றுள், நீரில் குளிர்ச்சி, தேயுவில்சூடு, பிருதிவி வாயுக்களில் குளிர்ச்சியுஞ் சூடுமில்லாத பரிசம். எ - று.

பரிசம். எ - து. ஊற்றினிலக்கணங்கூறுகின்றது. பரிசத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், சையோகமுதலியனவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றுங் கூறப்பட்டன.

*சண்மாத்திரம் என்றதனாற் சையோகமுதலியன விழியானுங் கவரப்படுதலின் பரிசத்தின் இலக்கணம் அவற்றிற்கு வாரா தொழிதல் காண்க.

*குற்றம் வருமாற்றினையும் நீங்குமாற்றினையும் பிறண்டும் இவ்வாறே உய்த்துணர்ந்து கொள்க.

௨௩. உருவந் சுவைசேர் பூதே நாற்ற
நெருப்பா றுஞ்சுரு நிலந்திற் றோன்றி

யழிவன வாமல் லவற்றியல் பாகி
யழிவன வழிவில வாம்பொருட் சேர்ப.

(இ-ள்) உருவமுதலிய நான்கும் பிருதிவியிற் பாகத்தாற் றோன்றுவனவாய், அநித்தமாயிருக்கும். மற்றவற்றிற் பாகத்தா லன்றி இயல்பாய், நித்தமும் அநித்தமுமாயிருக்கும். நித்தப்பொருளைச் சேர்ந்தவை நித்தம். அநித்தப்பொருளைச்சேர்ந்தவை அநித்தம். எ-று.

'பாகத்தான்' எ-து. பாகந்தேயுவின் கூட்டம். அதனான் முன்னுருவமழிந்து வேற்றுருவந்தோன்றுமென்றவாறு. இஃது பாகம் பரமாணுக்களுக்கே, துவியணுகமுதலியவற்றிற்கன்று. ஆதலாற்பாகமாங்காலும் சுள்ளையின் வைத்த குடத்திற் பரமாணுக்களுக்கு வேற்றுருவமுண்டாயவழிப் பசுங்குடக்கெட்டு மீளத்துவியணுகத் தோன்றுதல் முதலிய முறையானே செங்குடம் பிறக்கும். ஆண்டுப் பரமாணுக்கள் சமவாயிகாரணம், தேயுவின் கூட்டம் அசமவாயிகாரணம், உட்டுமுதலியன நிமித்தகாரணம், துவியணுகமுதலியவற்றின் உருவத்திற்குக் காரணவுருவம் அசமவாயிகாரணமென்பர் பீலுபாகவாதிகளாகிய வைசேடிகர். பீலு அணுவென்பன ஒருபொருட்கிளவி. முற்குடத்துக்குக் கேடின்றியே பரமாணுமுடிவான அவயவங்களினும் அவயவியினும் ஒருங்கே வேற்றுருவம் பிறக்குமென்பர் பிடரபாகவாதிகளாகிய நையாயிகர். பிருதிவியின் பரமாணுக்களின் உருவமுதலியன அநித்தமென்றதூஉம் இதனானேயென்பதாம். 'மற்றவற்றின்' எ-து. நீர்முதலியவற்றினென்றவாறு. 'நித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ-து பரமாணுக்களைச் சேர்ந்தவையென்றவாறு. 'அநித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ-து. துவியணுகமுதலியவற்றைச் சேர்ந்தவையென்றவாறு. உருவமுதலிய நான்கும் உற்பூதமாயுள்ளவே காட்சிக்குப் புலனும், உற்பூதமல்லாதன காட்சிக்குப் புலனாகாவெனக்கொள்க. உற்பூதத்தன்மையாவது காட்சியைப் பயப்ப



தொரு தருமவிசேடம், அதனின்மை அநுற்பூதத்தன்மையென்பதாம்.

*காரண உருவம்-காரணமாகும் உருவம், அஃதாவது காரணமாவதனுருவம். அவயவ உருவம் எனினும் ஆம்.

*பிடரம் - தோண்டி.

*தருமவிசேடம் - ஒருவகைத்தருமம்.

*தருமம், ஒன்றின் இருப்பதாவது.

உ௪. ஒருமை முதலா வுறும்வழக் கிற்கோர்
கருவி யெண்ணெனக் கருதப் படும்பிற
பொருளொன் பதினும் பொருந்து மொருமை
நேர்பொரு ளாறு நிலைநிலை யாமை
யிருமை முதலெலாம் யாண்டு நிலையில.

(இ-ள்.) சங்கை ஒருமைமுதலிய வழக்கிற்குக் காரணம். சங்கையெனினும் எண்ணெனினும் ஒக்கும். அது ஒன்பது பொருளினும் இருப்பது. ஒன்று முதற் பரார்த்தமீறாய் உள்ளது. அவற்றுள், ஒருமை நித்தப்பொருளைச் சேர்ந்தது நித்தம்; அநித்தப்பொருளைச் சேர்ந்தது அநித்தம். இருமை முதலிய எல்லாம் யாண்டும் அநித்தமே. (எ-று.)

*பரார்த்தம் தனக்கு மேலோர் எண்ணில்லாதது.

சங்கை, எ-து. எண்ணினிலக்கணங் கூறுகின்றது.

உரு. அளத்தல் வழக்கிற் காரணஞ் சிறப்பே
றுவினை யொழுகுதொ காப்பு மாற்று

நுண்மை பெருமை குறுமை நெடுமை
யெனநான் காகு மென்றிசி னோரே.

(இ - ள்) பரிமாணம் அளத்தல்வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பதுபொருளினும் உள்ளது. அது நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை என நான்குவகைத்து. (எ - று.)

பரிமாணம் எ-து. அளவினிலக்கணங்கூறுகின்றது.

அது. எ-து. பரிமாணத்தைப் பகுக்கின்றது.

௨௫. வேறெனன் வழக்கிற் கேது வேற்றுமை.
யொன்பது பொருளினு முள்ள தாமால்.

(இ - ள்.) வேற்றுமை வேறென்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது. (எ - று.)

வேற்றுமை. எ - து. வேற்றுமையினிலக்கணங்கூறுகின்றது. 'இது இதனின்வேறு' என்னும் வழக்கிற்குக் காரணமென்றவாறு.

*வழக்கிற்குக் காரணம் எனவே வழக்கோர்ப்பவன் என்பதூஉம் ஒன்றைத்தனித்தற்குக் கருவியாவது என்பதூஉம் பெறப்படுதலுணர்க.

௨௬. கூடிய தென்னக் கூறும் வழக்கிற்
கிடுடை யேது புணர்ச்சி யென்ப
தோர்பொருட் சேர்பா லுறுவ தாகிப்
பொருளொன் பதினும் பெருக்கு மென்ப.

(இ - ள்.) சையோகம் கூடியதென்னும் வழக்கிற்குக் காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது. (எ - று.)



சையோகம். எ-து, கூட்டத்தினிலக்கணங் கூறுகின்றது. 'இவ்விரண்டுங்கூடி யின்றன' என்னும் வழக்கிற்குக் காரணமென்றவாறு. சையோகம் தொழிலாற்றோன்றியதும், சையோகத்தாற்றோன்றியதுமென இருவகைத்து. கையின்றொழிலாற் கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய சையோகம் தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய சையோகத்தானே உடம்பிற்கும் புத்தகத்திற்குமுளதாய சையோகம் சையோகத்தாற்றோன்றியது. சையோகம் வியாபியாமலிருப்பது. வியாபியாமலிருத்தல் தன்னதத்தியந்தாபாவமுந்தானும் ஓரிடத்திருத்தல், ஏகதேசத்திருப்பதென்றவாறுமிது.

௨௭. ஆயிற் புணர்ச்சி யழிப்ப தாகி
யோர்குணம் பிரிவுள தெட்டொன் றினுமே.

(இ - ள்) விபாகம் சையோகத்தை நாசம்பண்ணுங்குணம். விபாகமெனினும் பிரிவெனினுமொக்கும். அது ஒன்பதுபொருளினும் இருப்பது. எ-று.

விபாகம். எ-து. பிரிவினிலக்கணங்கூறுகின்றது. காலமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சையோகத்தை நாசம் பண்ணுவது' என்றும், கூறப்பட்டது. விபாகமும்தொழிலாற்றோன்றியதும், விபாகத்தாற்றோன்றியதுமென இருவகைத்து. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவினால் உடம்பிற்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு விபாகத்தாற்றோன்றியது.

௨௮. மொழியின் முன்மை முன்னெனன் வழக்கிற்
கிழிவில் சிறப்புக் கருவி யெனப்படும்.

(இ - ள்) பரத்துவம் முன்னென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம். பரத்துவமெனினும் முன்மையெனினுமொக்கும். (எ - று.)

பரத்துவம். எ - து. முன்மையி னிலக்கணங்கூறுகின்றது.

௬௰. பேறு பின்மை பின்னென் வழக்கிற்
கேறுறு சிறப்புக் கருவி யெனப்படுமே.

(இ - ள்) அபரத்துவம் பின்னென்னும் வழக்கிற்குச்சிறந்த காரணம். அபரத்துவமெனினும் பின்மையெனினு மொக்கும். (எ-று.)

அபரத்துவம். எ - து. பின்மையினிலக்கணங் கூறுகின்றது.

௬௧. உரைநிலை போதா றெவ்வெவா னிரண்டா
மருவு மனதின் மன்முத னான்கின்.

(இ - ள்) அவ்விரண்டும் திக்கினாற் பண்ணப்படுவனவும், காலத்தினாற்பண்ணப்படுவனவும் என இருவகைப்படும். அவை மனத்திலும் பிருதிவி முதலிய நான்கிலுமிருப்பன. அவற்றுள், திக்கினாற் பண்ணப்படும் பரத்துவம் சேய்மைக்கணுள்ளது. திக்கினாற் பண்ணப்படும் அபரத்துவம் அண்மைக்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் பரத்துவம் மூத்தோன்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் அபரத்துவம் இளையோன்கணுள்ளது (எ - று)

அவ்விரண்டும். எ - து. அவற்றைப் பகுக்கின்றது.

திக்கினாற்பண்ணப்படும். எ - து. திக்கினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங்கூறுகின்றது.

காலத்தினாற்பண்ணப்படும். எ - து. காலத்தினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங்கூறுகின்றது.



௬௨. ஆதியில் வீழ்ச்சிக் கமைசார் பெய்து
மேதுத் திண்மை யெனப்படு மதுதா
னீர்மண் ணிரண்டி னிற்ப தென்ப.

(இ - ள்.) குருத்துவம் ஆதியில் வீழ்ச்சிக்கு அசமவாயிகாரணம். குருத்துவமெனினும் திண்மையெனினுமொக்கும். அது பிருதிவியினும் நீரினும் இருப்பது. (எ - று.)

குருத்துவம். எ - து. திண்மையினிலக்கணங்கூறுகின்றது. இரண்டாம்வீழ்ச்சி முதலியவற்றிற்கு வேகம் அசமவாயிகாரணமாகலின், வேகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஆதி' எனப்பட்டது.

*இரண்டாம்வீழ்ச்சி என்பது காண்டலளவை கூறுமிடத்து விளங்கும். ஆண்டுக் காண்க. "நசை, நசையாற் பிறந்ததும்" என்பதனாலுமுணர்க.

*ஒருகருமம் கெடுதலில்லாது என்பது தருக்கநூற்றுணிவு. வீழ்ச்சிமுதலிய கருமத்திற்குச் சமவாயிகாரணம் திரவியம் எனப்படும். பாயிரத்துக் காண்க.

௬௩. ஆதியி லொழுகற் கமைசார் பெய்து
மேது நெகிழ்ச்சி யியல்பொடு திகழ்தந்
தென்றிரவ மாகி யியல்பா னீரி
னிலத்திற் றீயி னியைந்தத் துளதே.

(இ - ள்.) திரவத்துவம் ஆதியில் ஒழுகுவதற்கு அசமவாயிகாரணம். திரவத்துவமெனினும் நெகிழ்ச்சியெனினும் ஒக்கும். அது பிருதிவி அப்புத் தேயுக்களில் இருப்பது. அது இயல்பாயுள்ளது,

நிமித்தகாரணமுள்ளது என இருவகைத்து. நீரின் இயல்பாயுள்ளது. பிருதிவி தேயுக்களின் நிமித்தகாரணமுள்ளது. பிருதிவியின் நெய் முதலியவற்றின் நெருப்புக்கூடுதலால் உண்டாகிய நெகிழ்ச்சி. தேயுவிற் பொன் முதலியவற்றிலுண்டாயது. (எ - று.)

திரவத்துவம். எ-து. நெகிழ்ச்சியிலக்கணங்கூறுகின்றது. 'ஒழுகுதல்' பரப்பல்.

அது. எ-து. அவ்வகையும் கூறுகின்றது. தேயுவின்கூட்டத்தாற் பிறந்தது நிமித்தகாரணமுண்டாயது, அதனின்வேறாயது இயல்பாயுள்ளதென்க. நெய்முதலியவற்றின். எ-து. பிருதிவியின் நிமித்தகாரணமுள்ளதற்கு உதாரணம். பொன்முதலியவற்றின். எ-து. அதற்குத் தேயுவிலுதாரணம்.

௫௭. நீரின் மண்ணி நேர்பொடி யாதி
திரட்டுதற் கேது சிக்கெனல் என்னுங்
குணந்தா னென்ப கூறி னோரே.

(இ - ள்.) சிநேகம் பொடி முதலியவற்றைத் திரட்டுதற்கு ஏதுவாய குணம். நீரின்மாத்திரம் இருப்பது. (எ - று.)

சிநேகம் எ - து. சிநேகத்தினிலக்கணங்கூறுகின்றது. கால முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' எனவும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'திரட்டுதல்' எனவுங் கூறப்பட்டது.

௫௮. ஒலிதான் செவியா னுணரப் படுகுணம்
வெளியா மாகா மாத்திர மேவி
யெழுத்தொலி வடிவென் றிருவகைத் தாகும்.



(இ - ள்) சத்தம் செவியாற் கவரப்படும் குணம். ஆகாயத்தின் மாத்திரம் இருப்பது. அது ஒலிவடிவும், எழுத்துவடிவும் என இருவகைத்து. அவற்றுள், ஒலிவடிவு பேரிகைமுதலியவற்றில் தோன்றுவது. எழுத்துவடிவு வடமொழி முதலிய பாடைவடிவாயுள்ளது.

சத்தம். எ - து. ஓசையிலக்கணங்கூறுகின்றது. ஓசைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'செவியான்' என்றுங் கூறப்பட்டது. ஓசை கூட்டத்தாற்பிறந்ததூஉம், பிரிவாற்பிறந்ததூஉம், ஓசையாற்பிறந்ததூஉமென மூவகைத்து. அவற்றுள், முதலது முரசுகுணிலிவற்றுடைய கூட்டத்திற்பிறந்தது. இரண்டாவது மூங்கில் பிளவுபடுங்கால் அவ்விரண்டின் பிரிவாற்பிறந்ததாய சடசடவோசை. மூன்றாவது முரசுமுதலியவிடத்தொடங்கிச் செவிகாறும் இரண்டாமோசை முதலிய ஓசையாற்பிறந்தது.

௫௯. உணர்ச்சி யென்ப தோரின் வழக்
கனைத்திற் கருவியா மறிவஃ தனுபவ
நினைவென் றிரண்டாய் நிலவு மென்ப.

(இ - ள்.) புத்தி எல்லாவழக்கிற்குங் காரணமாகிய அறிவு. அது நினைவும் அநுபவமும் என இருவகைத்து. (எ - று.)

புத்தி. எ-து. புத்தியிலக்கணங்கூறுகின்றது. 'அறிகின்றேன்' எனப் பின்னிகழுமுணர்ச்சியாற் குறிக்கப்படும் அறிவுத்தன்மையே இலக்கணமென்பதாம்.

*பின்னிகழுமுணர்ச்சி எனவே முன்னிகழுமுணர்ச்சி ஒன்று உண்டென்பது போதருதல்காண்க. ஈண்டு முன்னிகழுமுணர்ச்சி யாவது, புத்தியாகுமறிவு என்பது. அறிகின்றேன் என்பதைப் பின்

வசிகமுமுணர்ச்சி என்பது அறிவு என்பதைத் தெரிந்தபின்பன்றி, அறிகின்றேன் என்னுமுணர்ச்சி நிகழாமையான். பிறவுமிவ் வாறேகொள்க. பாவிரத்தாக்காண்க.

அது. எ-து. புத்தியைப்பகுக்கின்றது.

௫௭. அறுவா சனைமாத் திரத்தாற் றோன்று
முணர்வு நினைவா முணர்வதனின் வேறு
நின்மை யுண்மை யென்றிரு வகைத்தே.

(இ - ள்.) நினைவு வாசனைமாத்திரத்தாற்றோன்றும் ஞானம். அநுபவம் அதனின்வேறாய ஞானம். அது உண்மையநுபவம், இன்மையநுபவம் என இருவகைத்து. (எ - று.)

நினைவு. எ - து. நினைவினிலக்கணங்கூறுகின்றது. பாவனை யெனப் பெயரிய வாசனை என்க. வாசனையினது அழிவுபாட்டின் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஞானம்' என்றும், குடமுதலியவற்றின் காட்சியுணர்வின் அதிவியாத்தி நீக்குதற்கு 'வாசனையாற்றோன்றி யது' என்றும், இவன் அத்தசாத்தன் என்னும் முன்னதறுணர்வின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றுங் கூறப்பட்டது.

அநுபவம், எ-து. அநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. நினைவிற்கு வேறாய உணர்வு அநுபவமென்பதாம்.

*உரைத்தும் என்னும் உத்தியான் அநுபவத்தை விலக்கக்கூறு து நினைவிற்கு வேறாய உணர்வு என்றொழிந்தனென்க.

அது எ-து. அநுபவத்தைப் பகுக்கின்றது.

* வாசனை என்பது முன்னர்வரும், ஆண்டுக்காண்க.



௫௮. அஃதுடைப் பொருளி னஃதுடை யாக
நிகழு முணர்வு நிலவு முண்மை
யஃதில் பொருளி னஃதுடை யாக
நிகழு முணர்வு நிலவு மின்மை.

(இ - ள்.) அஃதுடைப்பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அநுபவம் உண்மையநுபவம். அதுவேபிரமையென்று உரைக்கப்படும். அஃதில்பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அநுபவம் இன்மையநுபவம். அதுபிரமம் என்றுஉரைக்கப்படும். (எ-று.)

[illegible] அஃதுடைப் பொருள் - விசேடியம், அடைமொழி எனினும் ஒக்கும்.

*விசேடணமாக நிகழும் அநுபவம், விசேடண விசேடியங்களின் சம்பந்தங்கவரும் உணர்வு. விசேடணம்-அடை, அஃதாவது இன்னதென விளங்காது தோன்றுவ தொன்றனை விளங்க வரையறுத்துணர்த்துவது என்க.

*வடமொழியின்கண் எழுவாய்த் தொடரின் வருமொழி விசேடணமாயும், ஏனையதொடரின் நிலைமொழி விசேடணமாயும் வழங்குதலின், விசேடணம் இஃதென்பது உணர்ச்சிவகையானன்றி சொல்வகையான் உணரற்பாற்றன்று.

அஃதுடைப்பொருளின்கண். எ-து. உண்மையநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. அற்றேல், 'குடத்தின்கட்குடத்தன்மை' என்னுமுணர்ச்சிக்கண் அவ்வியாத்திக்குற்றந் தங்கும், குடத்தன்மையின்கட் குடமின்மையாலெனின்;—அற்றன்று, எதன்கண் எதன்சம்பந்தமுண்டு அதன்கண் அதன்சம்பந்தத்தின் அநுபவமென்பதுபொருளாகலின். குடத்தன்மையின்கட் குடசம்பந்தம் உண்மையான்,

அவ்வியாத்தியின்மையுணர்க. 'அது' என்பது உண்மையநுபவமே பிரமையென நூலின்கட் கூறப்படுவதென்பதாம்.

*குடத்தின்கட் குடத்தன்மை என்னும் உணர்ச்சிக்கண் அவ்வியாத்திவரும் என்றது, விசேடியத்தின்கண் இருக்கற்பாலது விசேடணமென்பதற்கேற்ப விசேடியமாகிற்கும் குடத்தன்மையின்கண் விசேடணமாகிற்குங் குடமின்மையான். எதன், எதன்; அதன் அதன் கிரனிறை. முன்னர்க்கூறுவதூம் அது.

அஃதில் பொருளின்கண். எ - து. இன்மையநுபவத்தினிலக்கணங்கூறுகின்றது. அஃதேல்; 'இது சையோகமுடைத்து', என்னும் பிரமைக்கண் அதிவியாத்தி வருமாலெனின்;— அற்றன்று, எதன்கண்ணவான் எதன் சம்பந்தமில்லை அதன்கண்ணவான் அதன்சம்பந்தவுணர்ச்சி இன்மையநுபவமென்பது கருத்தாகலின். சையோகமின்மையான் வரைந்த சையோகவுணர்ச்சி மயக்கமாகலின், சையோகத்தான் வரைந்த சையோகசம்பந்தவுணர்ச்சி உளதாகலின், அதிவியாத்தியின்மையுணர்க.

*இதுசையோகமுடைத்து என்பதன்கண் அதிவியாத்திவரும். என்னை? சையோகமில்வழியுஞ் சையோகவுணர்ச்சி நிகழுதலான். ஆண்டுச்சையோகமின்மை யாண்டையதெனின் இதுசையோகமுடைத்து என்புழிச்சையோகம் தான் இல்வழியும் உண்டாகத்தோற்றினும் ஓர்புடையேயிருப்பதாகலிற் சையோகமுடையதன்கட் சையோகமேயல்லது அதன் முழுதுமின்மையும் உடனிகழ்வது தப்புவதன்மையிற் சையோகமின்மை ஆண்டேயதாவது அறிக. உண்மையநுபவமும் இன்மையநுபவமும் ஒருங்கு நிகழினும் வரைந்தனவான் ஒன்றன்பால் ஒன்றின்மைதெரிதலின் அதிவியாத்தியின்மையுணர்க. மயக்கம் என்றது சையோகசம்பந்தவுணர்ச்சி, சையோகமின்மையான் வரைந்தவிடத்தும் நிகழுதலின்.



௩௯. கருத்துணர் வொப்பே காட்சி யொலியென்
றொருநான் கென்ப வுண்மை யுணர்வே
கருத வொப்புமை காண்ட லுரையென்
றுரைப்பவைக் கருவியு மொருநான் கென்ப.

(இ - ள்.) உண்மையநுபவம் காட்சி, அநுமிதி, உபமிதி, சாத்தம் என்னும் வேறுபாட்டால் நால்வகைத்து. அதன் கரணமும் காண்டல், அநுமானம், உவமானம், சத்தம் என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்து (எ - று.)

உண்மையநுபவம். எ - து. உண்மையநுபவத்தைப் பகுக்கின்றது.

அதன்கரணமும். எ - து. தொடர்பாட்டாற் காரணத்தையும் பகுக்கின்றது. 'அதன்கரணம்.' எ - து. பிரமைக்குக் கரணமென்றவாறு. பிரமைக்குக் கரணம் பிரமாணம் என்பது பிரமாணத்தின் பொதுவிலக்கணம். உண்மையநுபவவறிவிற்குக் கருவியாயுள்ளது பிரமாணமென்பது பொருள்.

௪௦. நேருங் கரணஞ் சிறப்புக் கருவி.

(இ - ள்.) கரணமாவது சிறப்புக்காரணம். (எ - று.)

கரணமாவது. எ - து. கரணத்தினிலக்கணங்கூறுகின்றது. சாதாரணகாரணமாகிய காலம் திக்கு முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சிறப்புக்காரணம்' எனப்பட்டது.

௪௧. இன்றி யமையா தேய்கா ரியத்தின்
முன்னிற் பதுவே காரண மொழியிற்
பிறிதோ ராற்றாற் பெறப்படா தாற்பிற.

(இ-ள்.) காரணம் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது. எ-று.

காரணம். எ-து. காரணத்தினிலக்கணங் கூறுகின்றது. கழுதை முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'முன்னிற்பது' என்றொழியாது 'நியதமாய்' என்றும், காரியத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நியதமாய்' என்றொழியாது 'முன்னிற்பது' என்றும், கூறப்பட்டது. 'நியதம்' இன்றியமையாமை. அற்றேல், நூலுருவமும் ஆடையைக் குறித்துக் காரணமாமேலெனின்;—அற்றன்று, பிறிதோராற்றாற் பெறப்படாததாயென்றும் அடைகொடுக்கற்பாற்றாகலின். பிறிதோராற்றாற் பெறப்படாமை பிறிதோராற்றாற் பெறப்படுதலின்மை. பிறிதோராற்றாற் பெறப்படுதல் மூவகைத்து. எதனொடு கூடியே எதனைக் குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவது யாது அஃது அதனைக் குறித்து அதனோடே பிறிதோராற்றாற் பெறப்படுவது: அதனோடே கூடி நூலுருவமும் நூற்றன்மையும் ஆடையைக் குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவது, ஒன்று. பிறிதொன்றனைக் குறித்து முன்னிற்றலுணர்ந்தன்றி எடுத்துக்கொண்டதினைக் குறித்து முன்னிற்றலுணரப்படுவதியாது அஃது அவ்வெடுத்துக்கொண்டதனைக் குறித்துப் பிறிதோராற்றாற் பெறப்படுவது: அஃது ஆகாயம் ஒலியைக் குறித்து முன்னிற்றலுணர்ந்தன்றிக் குடத்தைக் குறித்து ஆகாயம் முன்னிற்பதென்றுணரப்படுவது, ஒன்று. மற்றவிடங்களிலே நியதமாய் முன்னிற்பது இதுவென்று துணியப்பட்டதனாற்றானே காரியத்தோன்றாதி அதனொடு உடனிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது: அது பாகத்தாற்றோன்றும் நிலத்து உருவத்தின் முன்னபாவம் நாற்றத்தைக் குறித்து முன்னிற்பதென்பது, ஒன்று. ஆக மூன்றுந் தெரிந்துகொள்க. இவ்வனங் கூறியவாற்றாற் பிறிதோராற்றாற் பெறப்படாததாய் இன்றியமையாது முன்னிற்பது காரணமெனக் கொள்க.



*கழுதைமுதலியவற்றின்கண் அதிவியாத்தியாரும் என்றது குடத்தைநோக்க மண்கொணருங் கழுதைமுதலியவும் முன்னிற்பவாகலின். காரியத்தின் அதிவியாத்தியாரும் என்றது, காரியமுந் தனக்குத்தானே நியதமாகலின் அஃதாவது காரியமுந் தன்னையின்றித் தானிருப்பதன்மையான்.

*உணரப்படுவது பெறப்படுவது என ஒட்டுக.

*அதனோடே-எதனொடு கூடிநின்றதோ அதனோடே; பற்றுக்கோடாவதனோடே.

*ஒலியைக்கொள்கையெடுத்துக் கூறியது ஆகாயந் தன்குணமாய வொலிக்குச் சமவாயிகாரணமாகலின் அதற்கு ஆகாயம் முன்னிற்பதாயது தானே பெறப்படுதலான். திரவியம் குணத்திற்குச் சமவாயிகாரணம் என்பது சமவாயங் கூறுமிடத்தும் பெறப்படுவதறிக. *மற்றவிடம்-உடனிகழ்ச்சியில்லாவிடம். துணியப்பட்டதனாற்றானே பிறிதோராற்றாற் பெறப்படுமென ஒட்டுக. உடனிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது. என்னை? உடனிகழ்வதை முதனிகழ்வதொன்றன் காரியத்திற்கு முன்னிற்பதென்பது, அம்முதனிகழ்வது தன் காரியத்திற்குத் தான்முன்னிற்பதென்பது துணியப்பட்டதன் பின் அதனாற்பெறப்படுவதாகலான் என்க. உதாரணத்தின்கண் துணியப்பட்டதாவது நாற்றத்தின் முன்னபாவமாதலும், உடனிகழ்வதாவது நிலத்து உருவத்தின் முன்னபாவமாதலும் கண்டுகொள்க. உருவத்தின் முன்னபாவம் நாற்றத்தைக் குறித்து முன்னிற்பது என்பது காரியம் முறையானன்றி ஒருங்கே தோன்றாதி வருவது. பிறவுமன்ன.

௬௨. காரியந் தானே கருதின் முன்னே
யின்மைக் கெதிர்மறை யென்மனார் புலவர்.

(இ-ள்.) காரியம் முன்னின்மைக்கு எதிர்மறை. (எ-று.)

காரியம். (எ-து.) காரியத்தினிலக்கணங்கூறுகின்றது.

௪௩. முதலே சார்பே மொழியு நிமித்த
மெனவை மூன்றுமெனப்படு மவற்று
ளாதாவது யாவ தாமுதற் காரணங்
காரியத் துடனுங் காரணத் துடனும்
பேரார் பொருளிற் பிறிவற நின்றுங்
கேது யாவ தெனிற்சார் பேது
நிகழ்த்திரண் டலது நிமித்த மென்ப.

(இ-ள்.) அக்காரணம் சமவாயி, அசமவாயி, நிமித்தம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. எதன்கண் ஒற்றித்துக் காரியம் தோன்றும் அது சமவாயிகாரணம்: அஃதெங்ஙனம், நூல்கள் ஆடைக்குச் சமவாயிகாரணம்; ஆடையும் தன்னிலையடைத்த உருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம். காரியத்துடனாதல் காரணத்துடனாதல் ஒருபொருளிற் சமவேதித்துக் காரணமாயிருப்பது அசமவாயிகாரணம்: அஃதெங்ஙனம், நூலியைபு ஆடைக்கு, நூலுருவம் ஆடையுருவிற்கு, அசமவாயிகாரணம். அவ்விரண்டின் வேறாய காரணம் நிமித்தகாரணம்: அஃதெங்ஙனம், ஆடைக்குக் கடா வேமா முதலியன. இங்ஙனங் கூறிய மூவகைக்காரணத்துள் யாது சிறந்த காரணம் அதுவேகரணம். (எ-று.)

*சமவேதித்து, சமவாயசம்பந்தத்தான் இருந்து, நீக்கமின்றி நின்று, ஒற்றித்து என்பன ஒருபொருட்கிளவி. முதற்காரணம் ஒழிந்தவற்றன், கருத்தா நிமித்தகாரணமும், வினையாதலானைக்காரணம் என்பதமிழ்நூலாசிரியர்,



அக்காரணம். எ-து. காரணத்தைப் பகுக்கின்றது.

எதன்கண். எ-து. சமவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

காரியத்துடன். எ-து. அசமவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

நூலியைபு. எ-து: 'காரியத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியமாகிய ஆடையோடும் ஒருநூலின்கட் சமவேதித்திருத்தலான், நூலியைபு ஆடைக்கு அசமவாயிகாரணமென்றவாறு.

*சன்மேத்தன், இயைபின்மேற்று, முன்னர் வருவது உருவின்மேற்று.

நூலுருவம். எ-து. 'காரணத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியத்தின் சமவாயிகாரணமாகிய ஆடையுடன் ஒருநூலின்கட் சமவேதித்திருத்தலான், நூலுருவம் ஆடையுருவிற்கு அசமவாயிகாரணமென்றவாறு.

அவ்விரண்டின். எ-து. நிமித்தகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது. சமவாயிகாரணம், அசமவாயிகாரணமாகிய இரண்டின் வேறாகிய காரணமென்றவாறு.

இங்ஙனங் கூறிய. எ-து. கரணத்தினிலக்கணம் முடிந்தது முடித்தலென்னுமுத்தியாற் கூறுகின்றது.

## பிரத்தியக்ஷப்பிரமாணம்.

௪௪. காட்சி யுணர்வின் கருவி காண்டல்
புகலுங் காட்சி யொழியோர் புலனை
மருவு மியைபான் மன்னு முணர்வே

யஃதுடை யில்ல தவுடையு ளதென்ன
விருவகைத் தாகி யியலு மென்ப.

(இ-ள்) அக்காரணம் நான்கனுள், காண்டலாவது புலப்படக் காணும் காட்சியறிவிற்குக் காரணம். காட்சியறிவு இந்திரிய விடய சம்பந்தத்தாற்றோன்றும் ஞானம். அது நிருவிகற்பகம், சவிகற்பகம் என இருவகைத்து. அவற்றுள், நிருவிகற்பகம் விசேடணமின்றித்தோன்றும் ஞானம். சவிகற்பகம் 'இவன் சாத்தன்' 'இவன் கரியன்' 'இவன் பார்ப்பான்' என விசேடணத்தோடு தோன்றும் ஞானம். எ-று.

*காண்டலாவது இந்திரியவிடயசம்பந்தம். காண்டல்செய்கை. காட்சி காரியம்.

அக்காரணம் நான்கனுள். எ-து. காண்டலளவையினிலக்கணங்கூறுகின்றது

காட்சியறிவு. எ-து காட்சியறிவினிலக்கணங்கூறுகின்றது. இந்திரியம் கண் முதலியன. விடயம் குடமுதலியன. அவ்விரண்டன்சம்பந்தம் சையோகமுதலியன. அச்சையோகமுதலியவற்றாற் பிறந்தவுணர்வென்பதாம்.

அவற்றுள், நிருவிகற்பகம். எ-து. நிருவிகற்பகக்காட்சியிலக்கணங்கூறுகின்றது. விசேடணவிசேடியங்களின் சம்பந்தங்கவராதவுணர்வென்றவாறு. அற்றேல், நிருவிகற்பகம் உண்டென்பதற்குப் பிரமாணம் என்னை யெனின்;—"ஆத்தன்மையான் அடையடுத்த ஆவென்னும் விசேடியஞானம் விசேடண ஞானத்தாற்றோன்றற் பாலது, விசேடியஞானமாதலின், குடையுடையானென்னு ஞானம்போலும்" என்னும் அனுமானமே பிரமாணமென்க. விசேடண ஞான



மும் சவிகற்பகமெனின் வரம்பின்றியோடுமாகலின், நிருவிகற்பக முண்டென்பது பெறுதும்.

*நிருவிகற்பகம் உண்டென்பது பெறுதும் என்றது அனுமானத்தாற் றுணியப்படும் விசேடணஞானமே நிருவிகற்பகம் என்பது போதருதலான்.

சவிகற்பகம் எ-து. சவிகற்பகத்தினிலக்கணங்கூறுகின்றது. பெயர் சாதி முதலிய விசேடணவிசேடியங்களின் சம்பந்தங் கவரும் ஞானமென்பதாம். 'இவன்சாத்தன்' 'இவன்கரியன்' என்றது சவிகற்பகத்துக்கு உதாரணம்.

(௪௫) காட்சி யறிவிற் கருவி யாய
பொறிபுலன் கூடப் பொருந்துங் கிழமை
யறுவகைத் தென்ப வறையுங் கிழமை
யுயிரார் புணர்ச்சி பொற்புடை யிரண்டா
னியைவன மூன்றோ டெய்துறு தன்மை
யென்பன வாறு மெண்ணினர் கொளலே

(இ-ள்.) காட்சியறிவிற்கேது இந்திரியவிடயசம்பந்தம். சம்பந்தமெனினும், இயைபெனினும், யாப்பெனினும், கிழமையெனினும் ஒக்கும். அச்சம்பந்தம் சையோகமும், சையுத்தசமவாயமும், சையுத்தசமவேதசமவாயமும், சமவாயமும், சமவேதசமவாயமும், விசேடணவிசேடியத்தன்மையும் என அறுவகைப்படும். கண்ணினாற்குடத்தைக் காணுங்கால் சையோகசம்பந்தம். குடவுருவத்தைக்காணுங்கால் சையுத்தசமவாயம், கண்ணொடுசையுத்தமான குடத்தில் உருவம் சமவாயமாதலாலென்க. உருவத்தன்மைப்பொதுமையைக் காணுங்கால் சையுத்தசமவேதசமவாயம்; கண்ணொடுசையுத்தமான

குடத்தில் உருவஞ் சமவேதம், உருவத்தில் உருவத்தன்மை சமவாயமாதலாலென்க. செவியாற் சத்தத்தை உணருங்கால் சமவாயசம்பந்தம், செவித்துளையிலிருக்கும் ஆகாயமே சோத்திரமாதலால் சத்தம் ஆகாயகுணமாதலிற் குணகுணிகட்குச் சமவாயம் உண்மையானெனவுணர்க. சத்தத்தன்மையை உணருங்கால் சமவேதசமவாயம், சோத்திரத்திற் சமவேதமான சத்தத்திற் சத்தத்தன்மை சமவாயமாயிருத்தலானென்க. அபாவத்தைக் காணுங்கால் விசேடணவிசேடியத்தன்மைச் சம்பந்தம். 'குடமில்லது இப்பூதலம்' என்புழிக் கண்ணொடு சையுத்தமான பூதலத்திற் குடமின்மை விசேடணமாயும் 'பூதலத்திற் குடமில்லை' என்புழிக் குடமின்மை விசேடியமாயும் இருத்தலானென்க. இங்ஙனங் கூறிய ஆறுசம்பந்தத்தினும் தோன்றும் உணர்வு காட்சி. அதற்குக்காரணம் இந்திரியம். அதனால் இந்திரியமே காண்டலளவையென்பது பெறப்பட்டது (எ - று.)

*சையுத்தம், புடைபெயர்ச்சியின்றிச் சையோகசம்பந்தத்திற்கு இடனாவது. சையோகம் கருமம். சையுத்தம் இயல்பு. சமவேதம் சமவாய சம்பந்தத்தானிருப்பது. சமவேதம் இயல்பு. சையுத்தமான—புணர்க்கப்பட்டதான. சையுத்தசமவாயம் என்றது ஓர் இணையியல்லது இரண்டுசம்பந்தத்தைக்கூடி நிற்பதின்மையின். சமவாயமாதல், சமவாயமாயிருத்தல் - சமவாயசம்பந்தத்தானிருத்தல் என்றவாறு.

அச்சம்பந்தம். எ - டு. இந்திரிய விடயசம்பந்தத்தைப் பகுக்கின்றது.

கண்ணினால். எ - டு. சையோகசம்பந்தத்திற்கு உதாரணங்கூறுகின்றது. திரவியக்காட்சியில் யாண்டுஞ் சையோகமே சம்பந்தமென்பதாம். ஆன்மா மனத்தோடும், மனம் இந்திரியத்தோ



டும், இந்திரியம் பொருளோடுங்கூடும்; அதனாற்காட்சியுணர்வு நிகழுமெனவுணர்க.

*இந்திரியம் பொருளோடு கூடும் என்றதனானும் பதார்த்தம் பொருள் எனப்படுவதறிக.

குடவுருவத்தை. எ - து. சையுத்தசமவாயத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

கண்ணோடு. எ - து. அதற்கேதுக்கூறுகின்றது.

உருவத்தன்மைப்பொதுமையை. எ - து. சையுத்தசமவேதசமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

செவியால். எ - து. சமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

செவித்துளையில். எ - து. அதனைத்தெரித்துணர்த்துகின்றது. அற்றேல், சேய்மைக்கண்ணதாகிய ஓசை செவியின்கட்சம்பந்திப்பது எவ்வாறெனின்;— வீசிதரங்கநியாயத்தானும் கதம்பமுகுளநியாயத்தானும் வெவ்வேறோசையைத் தோற்றுவிக்கு முறையானே செவிப்புலத்தின்கட்டோன்றிய ஓசைக்குச் செவிச்சம்பந்தமுண்மையாற் காட்சியுணர்வு நிகழுமென்க.

*வீசிதரங்கம், ஓசை ஓர் முகமாய் ஒன்றை ஒன்று தோற்றுவித்துச் சேறற்கும், கதம்பமுகுளம், ஓர்முகமாயல்லது எப்புறத்தும் அவ்வாறு சேறற்கும் உதாரணம் என்க.

*வெவ்வேறு ஓசையைத் தோற்றுவிக்கும் எனவே, ஓரோசை ஒன்றாய் சிறிது நில்லாதுஎன்பது போதரலின் இரண்டாம் ஓசை முதலியனவாய் வேறுபட்டுவரும் என்பது பெறப்படுதல் அறிக.

சத்தத்தன்மையை. எ - து. சமவேதசமவாயத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

அபாவத்தை. எ - து. விசேடண விசேடியத்தன்மைக்கு உதாரணங் கூறுகின்றது.

குடமில்லது. எ-து. அதனைத் தெரித்துணர்த்துகின்றது. இதனானே அநுபலத்தி வேறுபிரமாணமென்பதூஉம் மறுக்கப்பட்டது. 'ஈண்டுக்குடமுண்டாயின் இப்பொழுது நிலம்போலக்காணப்படவேண்டும், காட்சியின்மையான் இல்லை' என்றுதர்க்கஞ்செய்யப்படும் எதிர்மறைப்பொருளினுண்மையினுணர்வு பெருமையோடு கூடிய இந்திரியத்தானே அபாவவுணர்வு தோன்றுதலின், அநுபலத்திவேறுபிரமாணமென்றல் பொருந்தாமையுணர்க; இடமுனைக்கற்பொருட்டு வேண்டப்படும் இந்திரியமே காரணமாயவழி அநுபலத்தி காரணமென்றல் பொருந்தாமையின். விசேடணவிசேடியத்தன்மை விசேடணவிசேடிய சொரூபமேயன்றி வேற்றுச்சம்பந்தமன்று.

*ஈண்டுக்குடமுண்டாயின் என்பதுயாப்புப்போந்தவாக்கியம் மேலதற்கு விளக்கமாவதறிக. "காட்சியின்மையின் இல்லை" என்பதன்கண் இல்லை யென்பதற்குப் பிரமாணமாய் நிற்பதாய காட்சியின்மையே அநுபலத்தி எனப்படுமென்க. காட்சியின்மை - எதிர்மறைப்பொருளினுண்மையினுணர்வு பெறப்படாமை. அபாவவுணர்வு இல்லையென்றுமுணர்வு. பாயிரத்துப்பார்க்க. அநுபலத்தி அன்னதாவது, அதுவேறுபிரமாணமென்பதை மறுக்குமாறு கூறுவதன்கண் தெரியக்கிடப்பித்தமையினறிக. வேறொருத்து நுதற்பாலதொன்றை இவ்வாறு மற்றொன்று கூறுதன்கண் விளங்கவைத்துணர்த்துப்போவது உடம்பொடுபுணர்த்தல் எனப்படுவது என்க.

*வேற்றுச்சம்பந்தம்பண்புத்தொகை. வேறாயசம்பந்தம் எனவிரியும். அன்றுஎன்றது : அபாவத்தைக் காண்டற்கு வேண்டப்படும் சம்பந்தமாய விசேடணவிசேடியத்தன்மை அபாவத்தின் வேறு



வுந்தன்மையான். சொரூபமாவது; ஒன்றற்கு வடிவமாவதொன்று என்பது.

இங்ஙனம். எ - து. காட்சியுணர்வு முடிக்கதுமுடித்தலென்று முத்திபோர்கூறி, அதற்குக் கருவி கூறுகின்றது. சிறப்புக் காரணமாதலின், இந்திரியம் காட்சியுணர்விற்குக் கருவியென்றவாறு.

அதனுல். எ - து. காண்டலளவை முடிக்கதுமுடித்தலென்றுமுத்திபோர் கூறுகின்றது.

## அனுமானப்பிரமாணம்.

உச. கருதல் கருவி கருத்துணர் விற்குக்
கருத்துணர் வாக்குங் கருத லேரிதி
னின்றி யமையா நின்றிடு நிகழ்ச்சி
யொன்றி யிடைந்து நிறைவு தேர்பா
லிருப்ப துணர்வ தெனுமா ராய்ச்சி
யாங்கது தீயி னடங்கிய புகையினை
யிம்மலை யுடைய தென்று முணர்வா
மிம்மலை தீயுடைத் தென்று முணர்வவ்
வாராய்ச் சியினு ளுவ ததுவே
கருத்துணர் வெனக் காட்டி னாலே.

(இ-ள்.) இனி அநுமானமாவது அநுமிதிக்குக் கரணம். அநுமிதி ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம். ஆராய்ச்சி வியாத்தியடுத்த பக்கதருமத்தன்மை ஞானம்: அது 'வன்னியின் வியாப்பியமான புகையுடையது இம்மலை' என்னும் ஞானம். அவ்வாராய்ச்சியாற் றோன்றியது 'இம்மலை தீயுடைத்து' என்னும் உணர்வு. அதுவே

அநுமிதியென்க. வியாத்தி 'யாண்டுப்புகை ஆண்டுத்தீ' என நியதமான உடனிகழ்ச்சி. பக்கதருமத்தன்மை வியாப்பியமான புகை மலை முதலிய பக்கத்திலிருத்தல். எ - று.

*வியாத்தி யடுத்த, இதன்பொருள் முன்னுரையின் வரும் காண்க. தருமம் என்றொழியாது தருமத்தன்மை எனத்தன்மைமேல் வைத்துக் கூறியது அத்தன்மை உடையதனைத்தும் உள்ளுறுத்தற் பொருட்டு. இவ்வாறு கூறுவது இந்நூற்கோர்மரபாவதறிக.

இனி அநுமானம். எ - று. அநுமானவிலக்கணங்கூறுகின்றது.

அநுமிதி. எ - து. அநுமிதியிலக்கணங் கூறுகின்றது. அற்றேல், 'குற்றியோ மகனோ' என்னும் ஐயத்தின் பின்னர் 'மகன்மையான் வியாபிக்கப்படும் கை கால்முதலியன வுடையன் இவன்' என்னும் ஆராய்ச்சியான் 'மகனே' என்னும் காட்சியுணர்வு பயத்தலின் ஆண்டு அநுமிதியுணர்வே பயப்படுமெனின், 'மகனைப் புலப்படக்காண்கின்றேன்' எனப்பின்னிகழுமுணர்விற்கு மாறுகோடலின், அதன் 'ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம்' என்னும் இலக்கணத்திற்கு ஐயத்தின் பின்னர்த்தாகிய காட்சிக்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;— அற்றன்று, பக்கத்தன்மையோடு கூடிய ஆராய்ச்சியாற் றோன்றும் ஞானமென்பது கருத்தாகலின். பக்கத்தன்மையாவது துணிதல்வேட்கையில்லாமையோடு கூடிய துணிபொருட்பேறின்மை. துணிபொருட்பேறு அநுமிதியுணர்விற்குத்தடை, துணிதல்வேட்கை அதற்குமாற்று, பெறுதியுள்வழியும் 'அநுமிப்பேன்' என்னும் வேட்கையான் அநுமிதியுணர்வு நிகழக் காண்டலின், நெருப்பின்கட்டைத்தடுப்பது மணி, அதற்கு மாற்று மந்திரமாதல்போலுமென்க. எனவே, மாற்றின்மையோடு



கூடியமணியின் அபாயம் சுடுதற்காரணமாதல்போலத் துணியும் விருப்பமில்லாமையோடு கூடிய பெறுதியின்மையும் அநுமிதியுணர்விற்குக்காரணமாதல் பெறப்பட்டது.

* வியாபிக்கப்படும்—உள்ளுறுத்தப்படும், அகப்படுத்தப்படும்.

பயத்தலின் வரும் எனவும் மாறுகோடலின் வரும் எனவும் ஓட்டுக. அதன் இலக்கணம் என இயையும். அதன்,அநுமிதியின். ஆராய்ச்சியாற் பெறப்படுதலின் காட்சி என்பது யாங்ஙனமெனிற், குற்றியோமகனோ என்புழி அஃது இனிது விளங்காதேனும் கண்ணிற்குத் தோன்றுந் தன்மையான். ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம் என்றதற்குக் கருத்தாகலின் என ஓட்டிக்கொண்டுணர்க.

* பக்கத்தன்மை—பக்கத்தினது தன்மை. பக்கம் ... னர் ... ருள் காண்க.

* புலப்படக் காணப்பெறுவது துணிபொருட்பேறு என்பதாம், ஆராய்ச்சியான் அநுமிதிபெறற்குத் துணிபொருட்பேறு தடை என்பதூஉம் மேலுதாரணத்தின் ... பெறப்படுதல் காண்க.

*பெறுதிதடையாகலின், துணிபொருட்பெறுதியின்மையோடு கூடிய ஆராய்ச்சியென்றொழியாது துணிதல் வேட்கையின்மையொடுகூடிய துணிபொருட் பெறுதி என்றது எற்றிற்காலோ வெனின், துணிதல் வேட்கை உளதாயின், ஆராய்ச்சியான் அநுமிதி பெறுதற்குத் தடையாய பெறுதியுள்வழியும், அதனானே அநுமிதி பெறப்படுதலின், ஆராய்ச்சியே கருவி என்பதூஉம் துணிபொருட்பெறுதிதடைஎன்பதூஉம் பொருந்தாமையொடு பக்கத்தின் இலக்கணத்திற்குக் குற்றமும் வருதலான்.

ஆராய்ச்சி. எ-து. ஆராய்ச்சியிலக்கணங் கூறுகின்றது. வியாத்தியை விடயமாகவுடைய பக்கதருமத்தன்மை ஞானம் யாது அது

ஆராய்ச்சி என்பதாம். 'அது' என்பது ஆராய்ச்சியைத் தெரித்துக் காட்டியவாறு. 'அவ்வாராய்ச்சியால்.' எ-து. அநுமிதியுணர்வினைத் தெரித்துக்காட்டியவாறு.

வியாத்தி எ-து. வியாத்தியிலக்கணங்கூறுகின்றது.

'யாண்டெப்புகை' எ-து. வியாத்தியைத் தெரித்துக்காட்டியவாறு. 'நியதமான உடனிகழ்ச்சி' எ-து. இலக்கணம். 'உடனிகழ்ச்சி' ஒருங்கிலக்களத்திருத்தல். அதுநியதமாதல் ஏதுவினிலக்களத்துளதாகிய முழுதுமையாகத்திற்கு எதிர்மறையாகாத துணிபொருளினிலக்களத்துளதாதல். அதுவே வியாத்தியென்பதாம்.

*ஏதுவின் துணிபொருளினிலக்களத்துளதாதலே நியதமாதல் என்றுரைப்பார்க்கு நிலக்களம் இன்றியமையாதிருக்கும் ஏதுத்துணிபொருள்களை உடைத்தாவதாகலின், ஆண்டெடனிகழ்ச்சி உளதாயினின்மை பெறப்படாதின்மையான். முழுதுமையாவத்திற்கெதிர்மறையாகாத, இன்றியமையாத, இல்லாதிருத்தல்கூடாத, விட்டுநீங்கமாட்டாதனென்பன ஒருபொருண்மேலன. பாயிரம் பார்க்க.

பக்கதருமம். எ-து. பக்கதருமத்தன்மை இன்னதென்கின்றது.

௬௭. சாரா ராய்ச்சி தனக்கே பிறர்க்கெனத்
திருவகைத் தாகி யியலு மென்ப.

(இ-ள்) இவ்வநுமானம் தன்பொருட்டநுமானம், பிறர்பொருட்டநுமானம் என இருவகைத்து. எ-று.

இவ்வநுமானம். எ-து. அநுமானத்தைப் பகுக்கின்றது.

௬௮. தனக்கா ராய்ச்சி தானெடுத் தடுத்து
மனக்கடுக் கனைமுதற் காண்ட லானே



யாண்டிப் புகையுண் டாண்டுத் தீயுண்
டெனத்துணி பொருளோ டேது விரண்டிற்
கின்றி யமையா தெய்து டனிகழ்ச்சி
கண்ட வுணர்வு கருத்தி னிருத்தோ
ரேதுத் தோன்றுழி யெழும்ப வதன்வழி
னீதுதுணி பொருளி னிடைப்படு மேது
வுறுவ தென்று முணர்வா மஃதே
குறியா ராய்ச்சி கூறுங் காலே.

(இ-ள்.) தன்பொருட்டநுமானம் தனக்கநுமிதி ஞானம் விளங்குதற்குக் காரணம்: அஃதெங்ஙனமென்றே, ஒருவன் தானே அடுத்தடுத்துக்கண்டவதனால் 'யாண்டெப்புகை ஆண்டுத் தீயுண்டு' என அடுக்களை முதலியவற்றின் அவ்விரண்டற்கும் வியாத்தியை உணர்ந்து, மலையின் அண்டையிற்கட்டுநின்றவன்; ஆண்டுச்சென்றுழி 'இம்மலையில் தீயுண்டோ இல்லையோ' என ஐயுற்றான்; அம்மலையின் மேற் புகையைக்கண்டுழி 'யாண்டெப்புகை ஆண்டுத் தீ' என்னும் வியாத்தி நினைவு நிகழும். அந்நினைவு நிகழ்ந்தபின்னர், 'வன்னியின் வியாப்பியமான புகையையுடையது இம்மலை,' என்னுமுணர்வு தோன்றும்: அதுவே இலிங்கபராமரிசமெனப்படும். அதனால் 'இம்மலை நெருப்புடைத்து' என்னும் அநுமிதிஞானம் தோன்றும். இது தன்பொருட்டநுமானமெனக. இலிங்கபராமரிசமெனினும் குறியாராய்ச்சியெனினும் ஒக்கும். எ-று.

* தனக்கு என்றது பிறரானல்லது தானேயே தனக்கு என்றவாறு.

ஒருவன். எ - து. தன்பொருட்டனுமானத்தைத் தெரிந்துக் காட்டுகின்றது. அற்றேல், 'யாண்டும்பிருதிவியின் கூருந்தன்மை ஆண்டு இரும்பாற்போழற்பாலதாந்தன்மை,' என்றற்றொடக்கத்து உடனிகழ்ச்சி பல்கார்கண்டுழியும் வயிரமணி முதலியவற்றிற் பிறழக் காண்டலின், அடுத்தடுத்துக்காண்டலால் வியாத்தி கவர்தல் யாண்டையதெனின்;— அற்றன்று, பிறழ்ச்சியுணர்வின்மையொடு கூடிய உடனிகழ்ச்சியுணர்வே வியாத்தியைத் தெரிவிப்பதாகலின். பிறழ்ச்சியுணர்வு துணிவும் ஐயமுமென இருவகைத்து. அவற்றுள், துணிவு இயல்பானே தெரிந்து நீக்கப்படும். ஐயப்பிறழ்ச்சி தருக்கத்தாற்றெரிந்து நீக்கப்படும். புகைநீக்களின் வியாத்தியுணர்தற் கட்பிறழ்ச்சியையப்பாடு நீக்குவது காரியகாரணத்தன்மைக்குக் கேடு வருமென்னுந் தருக்கமாமென்க. அற்றேல், உலகத்துள்ள எல்லாப் புகைநீக்களும் காட்சிப்படாமையின் வியாத்தியுணர்ச்சி யாண்டைய தெனின்;— அற்றன்று, புகைத்தன்மை நீத்தன்மை யாகிய அவற்றின் பொதுவியற்சாதி உணரப்படுதலின் எல்லாப் புகை நீக்களினுணர்வும் நிகழுமென்க. 'அதனுள்' என்பது இலிங்கபராமரிசத்தான் என்றவாறு.

* அடுத்தடுத்துக்காண்டலான் வியாத்தி கவரப்படும் என்பது மேலே வருவதறிக.

* பிறழ்ச்சியின்மையொடுகூடிய உடனிகழ்ச்சியுணர்வேவியாத்தியைத் தெரிவிப்பது என்றது, மேனுதாரணத்தின்கண் எது துணிபொருளின்றி யிருப்பதாகலின் முன்னர்ப் பலகாற் காணப்பட்ட உடனிகழ்ச்சிக்குப் பிறழ்ச்சியுண்மை எய்துதலின் அஃது இன்றியமையாததாதல் பெறப்படாமையான்.



* பிறழ்ச்சி - ஒருமுறையுற்றி நிகழாமை, தவறு, அஃதாவது ஈண்டுப் பலகாற்காணப்பட்டு உடனிகழ்ச்சி ஒரோவிடத்துக் காணப்படாமை; அல்லதூஉம் எது துணிபொருளுள்வழியேயன்றி இல்வழியும் உளதாவது. இயல்பானே நூர்வாயிலானன்றித்தானே என்பதாம்.

* பிறழ்ச்சியையப்பாடாவது புகையுள்வழித்தீயுளது என்பதனுள் உளதாமுடனிகழ்ச்சிக்கு யாண்டாயினும்பிறழ்ச்சி உண்டாங்கொலோ என்பது. அவ்வையப்பாட்டை நீக்குவது தருக்கம், அஃதாவது பிறழ்ச்சியின்மையைத் தெளிவிப்பது தருக்கம் என்றது, தீயின்றாயிற் புகையுமின்றாதல்வேண்டும் என்னுந் தருக்கத்தான், விட்டு நீங்காமை, அஃதாவது எது துணிபொருளின்றியிராமை உணரப்படுதலின், ஆண்டு உடனிகழ்ச்சிக்குப் பிறழ்ச்சி உளதாமாறின்மையான்.

* எனவே பிறழ்ச்சியின்றி உடனிகழ்ச்சியின்றியமையாததாய் வியாத்தியாவது எது துணிபொருளின்றியிராமையானல்லது எய்துமாறின்மைகாண்க. இவ்வாறு வியாத்தி எது துணிபொருளின்றியிராமையினுளதற்பாலதென்பது இதனினுயிது என்பதுபட வருவதறிக. பிறழ்ச்சியின்மையானல்லது உடனிகழ்ச்சியின்றியமையாமையும் எது துணிபொருளின்றி இராமையினானல்லது பிறழ்ச்சியின்மையும் உண்டாமாறின்மையுணர்க.

* காரிய காரணத்தன்மைக்குக் கேடுவருமென்னுந் தருக்கம் என்றது தீயின்றாயிற் புகையுமின்றாதல் வேண்டும் என்பதனுற், புகையுமின்றாதல் வேண்டவே புகைகாரியம் தீயதற்குக்காரணம் என்பது பெறப்படாமையான், அத்தன்மை அவற்றிற்கின்றாதலின்மையின் புகையுள்வழித்தீயுளதாதலின்மை எய்தாமையுணர்க.

தன்மையுடையதனைத் தம் உள்ளுதற்பொருட்டுத் தன்மைமேல் வைத்துக் கூறுமாபு "போதமைச்சார்ந்து உணரப்படுதலின் எல்லாப் புகைநிக்களினுணர்வும் நிகழும்" என்பதனானுமுணர்க.

௪௯. பிறர்க்கா ராய்ச்சி பேசிற் றுகன்முன்
றொடரே தவினாற் றுணிவுற் றுணர்வைப்
பிறருணர் தற்குப் பேணுந் துய்ப்பார்
தொடர்மொழி தன்னைச் சொல்லுவ தென்ப.

(இ-ள்.) பிறர்பொருட்டநுமானமாவது தான் புகையால் வன்னியை அநுமித்து, பிறர் உணர்தற்பொருட்டு ஐவகையுறுப்புக்களையுடைய வாக்கியத்தைக் கூறுவது. வாக்கியமெனினும் தொடர்மொழியெனினும் ஒக்கும். அது 'மலை தீயுடைத்து, புகையுடைமையால், யாது யாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களைபோல, இதுவும் அங்ஙனம், ஆதலின் இங்ஙனம்', என வரும். இதனாற் கூறப்பட்ட இலிங்கத்தாற் பிறருந் தீயுண்டெனத் தெளிவர். (எ-று.)

*அங்ஙனமாவது அடுக்களை உடைத்தற்போறுடையது. இங்ஙனமாவது துணிபொருளை உடைத்தாவது என்பதாம்.

பிறர்பொருட்டநுமானம். எ-து. பிறர்பொருட்டநுமானங் கூறுகின்றது.

அது. எ-து. ஐவகை யுறுப்புக்களையுடைய வாக்கியத்திற்கு உதாரணங்கூறுகின்றது.

௫௦. கோதி லைவகை யுறுப்பவை கூறி
னேது மேற்கோ ளெடுத்துக் காட்டோ
டாகுப நயமென் றறைகாட் டொன்றி



முறையின் முடிந்தது முடித்த லிவற்றை
யறிக புகைதீ யடுக்களை மலையான்.

(இ-ள்) ஐவகையுறுப்புக்களாவன, பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபாயம், நிகமனம் என்னுமிவை. பிரதிஞ்ஞை, மேற்கோள் என்பனவொருபொருட்கிளவி. இதனுள் 'மலை தீயுடைத்து' என்பது பிரதிஞ்ஞை, 'புகையுடைமையால்' என்பது ஏது, 'யாது யாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களைபோல' என்பது உதாரணம், 'இதுவும் அங்ஙனம்' என்பது உபாயம், 'ஆதலின் இங்ஙனம்' என்பது நிகமனம் எனவுணர்க. எ-று.

ஐவகை. எ-து. ஐவகையுறுப்புக்களின் பெயர் கூறுகின்றது.

இதனுள். எ-து. எடுத்துக்காட்டிய வாக்கியத்தின்மேற்கோள் முதலிய வைந்தினையும் பகுத்துக்காட்டுகின்றது. பக்கத்தைத் துணிபொருளுடைத்தாகக் கூறுகின்றது மேற்கோள். இன், ஆன் என்னுமுருபீறாக இலிங்கத்தையெடுத்துக்காட்டுவது ஏது. வியாத்தியை யெடுத்துக்காட்டுவது உதாரணம். பக்கதருமத்தன்மையுணர்தற்பொருட்டுத் திருட்டாந்தத்தைச் சார்த்திக் கூறுவது உபாயம். முடிந்தது முடித்தல் நிகமனம். மறுதலையின்மை காட்டல்முதலியன நிகமனத்திற்குப் பயனென்க.

௫௧. குறியா ராய்ச்சி கொளற்காங் கருவி
யிருகருத் துணர்விற் கெல்லா மதுதான்
கருத லளவெனக் கட்டுரைத் தனரே.

(இ-ள்) தன்பொருட்டநுமிதி பிறர்பொருட்டநுமிதி என்னும் இவையிரண்டற்கும் இலிங்கவாராய்ச்சியே கருவி. அதனால் இலிங்கபராமரிசம் அநுமானமெனப்பட்டது. எ-று.

தன்பொருட்டனுமிதி. எ-து. அனுமிதிபுணர்விற்குக் காரணங் கூறுகின்றது. அற்றேல், வியாத்திவிசிட்டபக்கதருமத் தன்மையுணர்வுமே அனுமிதியைப்பிறப்பித்தலின் அடையடுத்த ஆராய்ச்சி வேண்டற்பாலதென்றாங்கொளின்;—அற்றன்று, 'வன்னியின் வியாப்பியமான புகையுடைத்து இது' என்னுஞ் சாத்தபராமரிசத்தின்கண் ஆராய்ச்சி ஒருதலையான் வேண்டற்பாலதாகலின் எளிதாக யாண்டும் ஆராய்ச்சியே காரணமென்றல் பொருத்தமுடைத்தாகலின். இலிங்கமே காரணமாம் பிறவெனின்;— இறந்தது முதலியவற்றிற் பிறழ்தலான், ஆகாதென்க. வியாபாரமுடைத்தாகிய காரணமே கரணமென்பார் மதத்தின் ஆராய்ச்சிவழியால் வியாத்தியுணர்வு கரணமெனக்காண்க. வியாபாரம் அதனிற்றோன்றி அதனிற்றோன்றற்பாலதனைத் தோற்றுவிப்பது.

*சாத்தபராமரிசம் சத்தத்தாற் பிறப்பதாய பராமரிசம். சாத்தபராமரிசத்தின்கண் என்பது தன்றாற் பெறப்படாது வேண்டியான் அஃதாவது எடுத்துக் கூறப்படும் தொடர்மொழியான் ஆராய்ச்சி பெறுமிடத்து என்றவாறு. ஆண்டு ஆராய்ச்சி ஒருதலையான் வேண்டற்பாலது என்றது பிறர் சொல்லதனாலல்லது தானே உணரமாட்டாதானுக்கு வியாத்திவிசிட்டபக்கதருமத்தன்மையுணர்வும் உண்டாமாறின்மையின் ஆராய்ச்சி பிறப்பிப்பதாய வன்னியின் வியாப்பியமான புகையுடைத்து இது என்னுந்தொடர்மொழியானல்லது அனுமிதி பிறக்குமாறின்மையான். எளிதாக என்றது ஆராய்ச்சியின்றியின் அஃதாவது எது தன்பொருளின் வியாப்பியமானதென்னும் உணர்வு பக்கதருமத்தன்மையுணர்வு நிகழுமிடத்தே நிகழாதாயின் உணர்விற்கிடையறவுண்டாகலின் இடையறவுபட்டுநிற்பனவற்றைக் கொண்டு கூட்டி இடர்ப்படவேண்டுதலான் என்க. சாத்தபராமரிசமே பிறர்பொருட்டனுமா



னத்தின்கண் உபாயம்எனப்படுவது என்பது. இறந்தது முதலியன வாவன;—புகையின்றியும் அடுப்பின் சுவடுடையதாடம், இனிப்புகை வரற்பாலது எனக்கருதப்படுவேதிடம் எனவருவன. வியாபாரமுடைத்தாகிய காரணம் என்றது வியாத்தியை. ஈண்டு வியாபாரமாவது ஆராய்ச்சி என்பது.

அதறேல். எ-து. அனுமானத்தை முடித்துமுடித்தல் என்னும் உத்திபாற்கூறுகின்றது.

௬௨. மறையுடன் படிபாட மன்று மிரண்டு
முறைபொருங் கியைந்து முடிபு நேர்மறை
யெனக்குறி மூன்று மியலு மென்ப.

(இ-ள்.) இலிங்கம் அந்துவயவெதிரேகி, கேவலாந்துவயி, கேவலவெதிரேகி என மூவகைத்து. அந்துவயம் உடம்பாடு. வெதிரேகம் மறை. அந்துவய வெதிரேகி நேர்மறை. எ-று.

இலிங்கம். எ-து. இலிங்கத்தைப் பகுக்கின்றது.

௬௩. இன்றி யமையா தீண்டே னிகழ்ச்சி
யுடன்பாட் டாலு மறுமறை யாலுந்
தன்று குறிநேர் மறைசொ லதனை
யடர்புகை யுடைமை யழலி னிலையே.

(இ-ள்.) அந்துவயத்தானும் வெதிரேகத்தானும் வியாத்தியுடையது அந்துவயவெதிரேகி. வன்னியைச் சாதிக்குங்கால் புகையுடைமை அந்துவயவெதிரேகி, 'யாண்டுப்புகை ஆண்டுத்தீ அடுக்களைபோல' என அந்துவயவியாத்தியும், 'யாண்டுத் தீயில்லை ஆண்டுப் புகையில்லை மடுப்போல' என வெதிரேகவியாத்தியும் உடைமையின்.

அந்வயத்தாலும். எ - து. அந்வயவெதிரேகியைத்தெரித்துணர்த்துகின்றது. ஏதுவிற்குத் தன்பொருட்கும், உதாரணவியாத்தி அந்வயவியாத்தி, அவ்விரண்டன் அபாவங்கட்கு உதாரண வியாத்தி வெதிரேகவியாத்தியென்றறிக.

*தீயினின்மை வியாப்பியமாக அதன் புகையினின்மை வியாபகமாவதூஉம் ஒழுகக்காய்ச்சிய இரும்பின்கண் வைத்துணர்ந்து கொள்க.

௬௪. உடன்பா டுடையதென் றோதுங் குறிதா
னின்றி யமையா நியதிட னிகழ்ச்சி
யுடம்பா டொன்றி னுடைய ததனை
மன்பெய ரிட்டு வழங்கற் பால
தென்னுக வளக்கற் பாலதின் வைத்தே.

(இ - ள்.) இனி அந்வயத்தின்மாத்திரம் வியாத்தியுடையது கேவலாந்வயி: அஃதெங்ஙனம், 'குடம் அபிதேயம், பிரமேயத்தன்மையால், ஆடைபோல' எனவரும். ஈண்டுப் பிரமேயத்தன்மை அபிதேயத்தன்மைகட்கு வெதிரேகவியாத்தியின்று, எல்லாப்பொருளும் பிரமேயமும் அபிதேயமுமாதலால். பிரமேயம் அளவையால் அளக்கற்பாலது. அபிதேயம் பெயரிட்டு வழங்கற்பாலது. எ - று.

இனி அந்வயத்தின். எ - து. கேவலாந்வயியிலக்கணங் கூறுகின்றது. கேவலாந்வயியாகிய தனிப்பொருட்கு இலக்கணம் கேவலாந்வயி. முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாமை கேவலாந்வயித்தன்மை. இறைவனுணர்விற்கு விடயமாந்தன்மையும் எல்லாம் வல்ல [illegible] மொழியின் வழங்கற்பாலதாந் தன்மையும் [illegible] அவற்றிற்கு வெதிரேகமின்மையுணர்க.



௬௫. இன்றி யமையா நியதிட னிகழ்ச்சி
மறைமாத் திரத்தின் மருவுங் குறியே
மறையுடைத் தென்ன வழங்கப் படுமால்.

(இ - ள்.) இனிக் கேவலவெதிரேகி வெதிரேகத்தின் மாத்திரம் வியாத்தியுடையது: அஃதெங்ஙனம், 'பிருதிவி ஏனையவற்றின் வேறு, கந்தமுடைமையின், யாது ஏனைப்பொருள்களின் வேறன்று அது கந்தமுடைத்தன்று அப்புப்போல, இஃது அங்ஙனமன்று, ஆதலின் இங்ஙனமன்று' எனவரும். ஈண்டு 'யாது கந்தமுடைத்து அது ஏனைப்பொருள்களின் வேறு இதுபோல' என்று அந்வயத்தில் திருட்டாந்தம் இல்லை, பிருதிவிமுழுதும் பக்கமேயாதலின். எ - று.

*கேவலவெதிரேகியாவது அந்வயம் இல்லது எனவே கேவலவெதிரேகியாகிய தனிப்பொருட்கு இலக்கணம் கேவலவெதிரேகி என்றாயிற்று.

இனிக் கேவலவெதிரேகி. எ - து. கேவலவெதிரேகியிலக்கணங் கூறுகின்றது.

பிருதிவி, எ - து. அதற்கு உதாரணங்கூறுகின்றது. அற்றேல், ஏனையவற்றின் வேறுதல் முன்னர்த் துணியப்பட்டதோ அன்றோ? துணியப்பட்டதெனின் யாண்டுத் துணியப்பட்டது ஆண்டு ஏதுவுண்டாயின் அந்வயமுடைத்தாதல் கூடும்; ஆண்டு ஏதுவின்றாயிற் சிறப்பென்னுமனைகாந்திகமாம்; அன்றெனின், துணிபொருளுணர்ச்சியின்மையின் அதனான் விசேடிக்கப்படும் அநுமிதியுணர்வு எங்ஙனந்தோன்றும், விசேடணவுணர்ச்சியின்றி விசேடிக்கப்பட்டதனுணர்வு பிறவாமையின். அன்றியும், எதிர்மறையுண

ர்ச்சியின்மையின் வெதிரேகவியாத்தியுணர்வும் உண்டாகாதாலோ வெனின்;— அற்றன்று, அப்புமுதலிய பதின்மூன்றன்கண்ணும் ஒன்றற்கொன்று வேறாந்தன்மை யுளவாமன்றே, அப்பதின்மூன்றன்கண்ணும் தனித்தனி துணியப்பட்ட வேறாந்தன்மை பின்னர்ப்பிருதிவியின்கண் ஒருங்கு துணியப்படுமாகலினென்க. பதின்மூன்றன்றன்மையானும் வரைந்துகொள்ளப்பட்ட வேறுதற்றன்மை ஒருநிலைக்களத்திராமையின், அந்நவயமுடைத்தாகாமையும் சிறப்பனைகாரகமின்மையுமுணர்க. தனித்தனி நிலைக்களத்து முன்னர்த்துணியப்பட்டதாகலின் துணிபொருள்விசேடணத்தான் அமைந்த அநுமிதியுணர்வுக்கடும், வெதிரேகவியாத்தியும் உண்டென்க.

* வேறுதல்—வேறாந்தன்மை. வினையவற்றின் வேறுதல், நன்றாமெனுநிர்தவற்றின் வேறுதல். முன்னர், பிருதிவி வினையவற்றின்வேறு என்னும் அநுமிதிபிறத்தற்கு முன்னர் என்பது. சிறப்பனைகாரகமாம் என்றது, துணியப்பட்டதன்வழி இராதவெனு சிறப்பனைகாரகம் எனப்படுமாகலின், அவ்விசேடணமாகிய வினையவற்றின் வேறுஎன்பது. விசேடிக்கப்பட்டதாவது பிருதிவி வினையவற்றின் வேறுஎன்பது எனக. 'அப்புமுதலிய' என்பதுமுதலாக எழீஇய தொடர்மொழியின் உட்கிடைக்கிரண்டற்கும், 'பதின்மூன்றன்றன்மையானும்' என்பதுமுதலாகப் போந்த தொடர்மொழியும் 'தனித்தனி நிலைக்களத்து' என்பதுமுதலாக எழுந்த தொடர்மொழியும் எதிர்நிரனிறையாக் கொண்டு வைத்து விளக்கமாயதுமுணர்க. பிறவும் இவ்வாறு அறிந்துகொள்க. தனித்தனியல்லது ஒருங்கே வரைந்துகொள்ளப்பட்ட எனத்தொடருரைக்க. ஒருநிலைக்களத்திராமையின் என்றது, பிருதிவியல்லது வேறொருநிலைக்களத்தும் அவ்வொருங்கு துணியப்படும்வேறுதற்றன்மை இராமையான்.



* அப்புமுதலிய பதின்மூன்றாவன, பாவபதார்த்தத்துட் பிருதிவியல்லாதன என்பது. தனித்தனிநிலைக்களம் என்றது பிருதிவியல்லதனை. பிருதிவியிற் முன்னரே துணியப்பட்டதாயின் பதின்மூன்றன்றன்மையானும் ஒருங்கே வரைந்து கொள்ளப்பட்ட வேறுதற்றன்மையொருநிலைக்களத்திராமையின் அத்தன்மையான் விசேடிக்கப்பட்ட அநுமிதியுண்டாமாறின்மை யுணர்க.

டுசு. ஐய முற்றே பதவியின் றுணிபு
மெய்யுறு பொருட்கிடன் வேறு துணித்த
பொய்யில் பொருட்கிடன் பொருளி விட்டுறு
டைய்து மிடன்மூன் றென்றிசி னோரே.

(இ - ள்.) பக்கம் ஐயுற்றுத் துணியும் பொருளுக்கிடன்; அஃதெய்வனம், புகையுடைமையாகிய ஏதுவிலைப்பக்கம். சபக்கம் துணிந்தபொருளுக்கிடன்; அஃதெய்வனம் அடுக்களை. துணிந்த பொருளில்லையிடம் விபக்கம்; அஃதெய்வனம், ஆண்டு மடு. எ - று.

* பதார்த்தமும் பொருள் எனப்படும், எல்லாப்பொருள், வினைப்பொருள், துணியப்பொருள் என்பனவற்றுள்ளும் [illegible]றுதல்ஐறிக.

பக்கம். எ - ற. பக்கத் [illegible]நிலைக்களனக்கூறுகின்றது. அற்றேல், கேதுவைக்கெய்யனான் ஆண் [illegible] வென்பது துணியப்பட்டதாகலின் ஆண்டு ஐயமின்மை [illegible] கேள்வியின்பின்னர்த்தாகிய திக்கலக்கண்ணும், காட்சிப்புலனாகிய நெருப்பின்கண் துணிதலின் ஆண்டும், அவ்வேட்கை உளதாயவழி அநுமிதியுணர்வுபிறத்தலின் ஆண்டும், அவ்வியாத்தி வருமாலோவெனின்;— அற்றன்று, முன்னர்க்கூறிய

பக்கத்தன்மைக்குப் பற்றக்கோடாதல் பக்கத்துக்கு இலக்கணமாகலின்.

*பற்றக்கோடாகாமையின் அவ்வியாத்தி இன்று என்றதாயிற்று.

*சித்தனைக்கண்ணும், செருப்பின்கண்ணும் அவ்வியாத்தி வரும். என்னை? சித்தனையும் செருப்பும் ஐயுறற்பாலதற்கிடனாகாது துணியப்பட்டதற்கிடனாகலின். அவை பக்கமாதல், ஐயப்பாடிசிக்குந்தற்குச் சித்தனையும், அனுமிதிபிறத்தற்கு செருப்பும் இடனாதல் பற்றிப் பெறப்படுவதாகிய, ஆன்மா உடம்பேன்பது சித்தனையின்வைத்துத் துணியப்படுவதனாற் சித்தனை இடற்றுறவுணர்க.

சபக்கம். எ - து. சபக்கத்தினிலக்கணங்கூறுகின்றது.

துணித்த. எ - து. விபக்கத்தினிலக்கணங்கூறுகின்றது.

௬௭. காண்வழிற் கருத்துணர் விற்குத் தடையாய்
முன்மை யுணர்விற் குறுபுல னாய
தின்மை யேதுவென் றேனைப் போலி
பிறழ்ச்சி யுள்ள தேயில் லாதது
மாறு கொள்வது மறுதலை யுளது
மறுப்புடைத் தென்றை வகைய தாமால்.

(இ - ள்.) இனி ஏதுப்போலி சவ்வியபிசாரம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதம் என ஐவகைத்து. எ - று.

இனி ஏதுப்போலி. எ - து. இக்கணம் உண்மையேதுவைத் தெரித்துணர்த்தி, சுண்டு இன்மையேதுவைத் தெரித்துக்காட்டும் பொருட்டுப் பகுக்கின்றது. அனுமிதியுணர்விற்குத் தடையாய



உண்மையுறுபவுணர்விற்கு விடயமாதல் ஏதுப்போலியிலக்கணம்.

*இன்மை ஏதுவென்றது போலியாகலான். உணர்வினைத்தடை என்றது, அநுமிதியுணர்வினைத் தருவதாதல் போக்குவதாதல் ஏதுவின் உணர்ச்சியல்லது ஏதுமன்மையான் என்பது.

௬௮. அவற்றுள்:—
பிறழ்ச்சி முடிவு பெருமை பொதுவே,
சிறப்பொடு மூன்றுச் செறியு மென்ப.

(இ - ள்.) அவற்றுள், சவ்வியபிசாரம் அனைகாந்திகம், பிறழ்ச்சியுடையது. அது பொதுவும், சிறப்பும், முடிவுபெருமையும் என மூவகைத்து. எ - று.

அவற்றுள். எ - து. அனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது.

அது. எ - து. அனைகாந்திகத்தைப் பகுக்கின்றது.

*பிறழ்ச்சியாவது ஏது துணிபொருளுள்வழி இருக்கற்பாலது என்னும் நியமத்தின் வேறுபட இருப்பது.

௬௯. பொருளி லிடத்தும் பொருந்து மேது
பிரிவர் பொதுவென் பிறழ்ச்சிய தாமே.

(இ - ள்.) அவற்றுள், பொதுவனைகாந்திகவேதுப்போலி துணிபொருளில்லாவிடத்தும் இருக்கும் ஏது: அது 'இம்மலை நெருப்புடைத்து, அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பதாம், அளவையான் அளக்கற்பாலதாந்தன்மை நெருப்பில்லாவிடமாகிய நீர்த்தடாகத்தினும் இருத்தலினென்க. எ - று.

அவற்றுள், பொது. எ - து. பொதுவனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது.

அது. எ - து. அசாதாரணங்கூறுகின்றது.

*இவ்வேது நடையாமாறு, அநுமானவநைகாந்திகத்திற்கொரு ருக்கு தொருத்தார் கூறப்படுதலின், அதற்கை ஒவ்வொன்றுக்காங் கிகொண்டார்க்கு ஆங்காங்கொட்டிக்கொண்டனர்.

கூ0. பொருளுறு மிடமே பொருளில் விடமே
யிருமிட மெல்லா மில்லது சிறப்பு
யிருப்பதையுறு மிடமாத் திரத்தின்.

(இ - ள்.) சிறப்பனைகாந்திகம் சபக்ஷ விபக்ஷங்களெல்லாவற்றினும் இல்லாதது: அது 'சத்தம் நித்தியம், சத்தத்தன்மையுண்மையான்' என்பது. சத்தத்தன்மை நித்த அநித்தப்பொருள் எல்லாவற்றிலும் இன்றிச் சத்தத்தின் மாத்திரம் இருப்பது. (எ - று.)

சிறப்பு. எ-து. சிறப்பனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது.

கூக. முடிவு பெறுமை மொழியின் மறையியை
டெம்பா டின்றற் குறுகாட் டிலதால்.

(இ - ள்.) முடிவுபெறுமை அந்வயதிருட்டாந்தமும் வெதிரேகதிருட்டாந்தமும் இல்லாதது: அது 'எல்லாப்பொருளும் அநித்தம், அளவையான் அளக்கப்படுதலின்' என்பது. ஈண்டு முழுவதும் பக்கமாயிருத்தலின், திருட்டாந்தமில்லை. (எ - று.)

முடிவுபெறுமை எ - து. முடிவுபெறுமையனைகாந்திகத்தினிலக்கணங்கூறுகின்றது.



கூ௨. இலகு துணிபொரு ளில்லா விடத்தின்
விலகா துளதாய் மேவு மேது
குலவு மாறு கொள்வ தெனப்படும்.

(இ - ள்.) இனித் துணிபொருள் இல்லாவிடத்து வியாப்பியமாயிருக்கும் ஏது விருத்தமென்றும் ; ஏதுப்போலி: அது 'சத்தம் நித்தியம், காரியப்பாட்டால்' எனவரும், காரியப்பாடு நித்தியமல்லா அநித்தப்பொருளில் வியாப்பியமாயிருப்பதாகலின் என்க. (எ - று.)

இனித் துணிபொருள். எ-து. விருத்தத்தினிலக்கணங் கூறுகின்றது.

கூ௩. துணிபொருள் மறுதலையாகித் தானுந்
துணிந்த பொருளைத் துணியும் வேறோ
ரேதுவை யுடைய தேது மறுதலை
யேதி னுடைத்தென் றுரைப் படுமால்.

(இ - ள்.) துணிபொருட்கு மறுதலையாகிய துணிந்த பொருளைச் சாதிக்கும் வேறொரேதுவினையுடைய ஏது சற்பிரதிபக்கம் என்னும் ஏதுப்போலி: அது 'சத்தம் நித்தியம், செவிக்குப் புலனாதலின், சத்தத்தன்மை போலும்' 'சத்தம் அநித்தியம் காரியப்பாட்டால் குடம்போலும்' எனவரும். எ - று.

துணிபொருட்கு. எ - து. சற்பிரதிபக்கவிலக்கணங்கூறுகின்றது.

* சத்தம் நித்தியம். எ - து. நூலாசிரியர்மதமன்று என்க என்பது.

௬௪. ஏர்பே றிலதே னது விளம்பிற்
சார்பி லாமை சாற்றுரு வின்மை
யிடைபிறை வின்மை மேவு மூன்றும்.

(இ - ள்.) இனி அசித்தமென்னும் ஏதுப்போலி சார்பசித்தம், உருவசித்தம், வியாப்பியத்தன்மையசித்தம் என மூவகைப்படும். எ - று.

இனி அசித்தம். எ - து. அசித்தத்தைப் பகுக்கின்றது.

௬௫. சார்பி லேது சாற்றிற் றனிப்பொருட்
கேரிட னின்மையி னிடன்றனக் கிலதே.

(இ-ள்.) அவற்றுள், சார்பசித்தமாவது 'ஆகாயத்தாமரை மணமுடைத்து, தாமரைத்தன்மையால், பொய்கைத்தாமரைபோலும்' எனவரும். ஈண்டு மணமுடைமைக்கு ஆகாயத்தாமரை சார்பு அதுவே இல்லை. எ - று.

அவற்றுள், சார்பு. எ - து. சார்பசித்தத்திற்குதாரணங் கூறுகின்றது.

௬௬. உருவி லேது வோரி னிடத்திற்
குருவ மாகா துறுவது தானே.

(இ-ள்.) உருவசித்தமாவது சொரூபாசித்தம்: அஃதெங்ஙனம், 'சத்தம் குணம், கண்ணுக்குப்புலனாதலின்' எனவரும். ஈண்டுக்கட்புலனாதல் சத்தத்திற்கின்றி, சத்தம் செவிக்குப்புலனாதலின். எ - று.

உருவசித்தம். எ - து. உருவசித்தத்திற்கு உதாரணங்கூறுகின்றது.



*சொரூபமாவது, ஒன்றற்கு வடிவமாவதொன்று மேலுமுரைக்கப்பட்டது.

௬௭. மிடைபிறை யில்லா வேது விளம்பி
னடர்துணி பொருளி னடங்குவ தின்மை
புணர்க்குஞ் செய்கை யுடைய தாகிற.

(இ - ள்.) வியாப்பியத்தன்மை யசித்தமாவது செயற்கையோடுகூடிய ஏது. செயற்கை சாத்தியத்தில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது. சாத்தியத்தில் வியாபித்தல் சாத்தியப்பொருளிருக்குமிடத்தின்கணுள்ள முழுமையபாவத்திற்கு எதிர்மறையாகாமை. ஏதுவில் வியாபியாமை ஏதுவிருக்குமிடத்தின்கணுள்ள முழுமையபாவத்திற்கு எதிர்மறையாதல். 'இம்மலை புகையுடைத்து, தீயுடைமையால்' என்புழி ஈரவிறகின்கூட்டம்செயற்கை. அது 'யாண்டுப் புகையுண்டு ஆண்டு ஈரவிறகின் கூட்டமுண்டு' எனச் சாத்தியப்பொருளில் வியாபகமாயும், 'யாண்டுத் தீயுண்டு ஆண்டு, ஈரவிறகின் கூட்டமின்று, ஒழுகக்காய்ச்சிய இரும்பில் ஈரவிறகின் கூட்டமின்மையின்' என ஏதுவில் வியாபகமின்றியும் இருத்தலின், ஈரவிறகின் கூட்டம் உபாதி. அவ்வுபாதியுடைமையின் வன்னியுடைமையாகிய ஏது வியாப்பியத்தன்மையசித்தம். எ - று.

*உபாதியுடைமையின் வியாப்பியத்தன்மை பெறப்படாமை யாங்ஙனமெனின், உபாதியில்லாவிடத்தும் இருக்கும் ஏது உபாதியின் அடங்காதென்பதுதானே பெறப்படும், படவே உபாதியின் அடங்குவதொன்றின் அடங்காமை பெறுதற்கண் யாதும் ஆராய்ச்சி வேண்டாமையான் என்க. ஏது துணிபொருளின் வியாப்பியமாகாக்கால் வியாத்தியுணர்வு உண்டாகாமையின் அநுமிதி பெறப்படுமாறின்மை அறிக.

* வியாப்பியத்தன்மை. எ - து. வியாப்பியத்தன்மையினிலக்கணங் கூறுகின்றது.

செயற்கை. எ - து. செயற்கையிலக்கணங்கூறுகின்றது. செயற்கை துணிபொருளெல்லாவற்றிலும் வியாபிப்பதும், பக்ஷதருமத்தான் வரைந்து கொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும், ஏதுவான் வரைந்துகொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும், யாதானுமோர் தருமத்தான் வரைந்துகொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும் எனநான்கு வகைத்து. அவற்றுள், முதலது சாவிறவின் கூட்டம். இரண்டாவதாய் ஏதுவுக்காட்டிப்பொருள், அவ்வையான் அனைக்கற்பாலதாகலின்' என்பதில் ஒன்றே புறப்பொருண்மையான் வரைந்துகொள்ளப்படுங் காட்சிப்பொருளின் வியாபிப்பது உற்பூதவுருவமென்க. மூன்றாவது 'அழிவுபாட்டபாவம் நாசமுடைத்து, உண்டாகற்பாலதாகலின்' என்பது. ஈண்டு உண்டாகற்பாலதாந்தன்மையான் வரைந்துகொள்ளப்படும் நாசமுடைமையின் வியாபிப்பது பாவத்தன்மை. நான்காவது 'முன்னபாவம் நாசமுடைத்து, அனையையான் அனைக்கற்பாலதாகலின்' என்பது. ஈண்டு உண்டாகற்பாலதாந்தன்மையான் வரைந்துகொள்ளப்படும் நாசமுடைமையின் வியாபிப்பது பாவத்தன்மையெனக் கொள்க.

* பக்ஷதருமம்-பக்ஷத்தினது தருமம். உதாரணத்தில் பக்ஷமாவது, வாயு. அதன்தருமமாவது புறப்பொருண்மை; அஃதாவது புறவிந்திரியத்திற்குப் புலனாகுந் திரவியத்தன்மை. புறப்பொருண்மையைத் திரவியத்தன்மை என்றது அஃதன்றித்தன்மையான் வரைந்துகொள்ளப்படுதன்கண் உருவம் வியாபியாமையான். அப்பொருண்மையான் வரைந்துகொள்ளப்படும் காட்சிப்பொருள் குடமுதலியன. புறப்பொருண்மையான் வரைந்துகொள்ளப்படும் என்றது உருவமுதலியவற்றின்கண் அதிவியாத்தி வாராமற்பொருட்டு. வாயுவைக் காட்சிப்பொருள் என்றது காட்சியாலுணரப்படும் பரிசத்திற்குப் பற்றுக்கோடாகலின் என்பது. வினையிரண்டன்கண் பாவத்தன்மையை உபாதி என்றது ஏதுவிற்கிடனாகிய அழிவுபாட்டபாவமுன்னபாவங்களின்கண் பாவத்தன்மை வியாபியாமையானென்க. பாவம்-உண்மை, அஃதாவது உளதாந்தன்மை.



௬௪. தன்னூற் றுணியப் பிறம்பொரு டள்ளி
யின்மை மற்றொரு தன்மையி னூனே
துணியப் படுவது சொலுமுறைப் புடைய
தெனப்படு மேய வெதிரது பாலே.

(இ-ள்.) தன்னூற் சாதிக்கப்படும் பொருளினபாவம் மற்றொரு ஏனையவாற்றுணியப்படின் அது பாதிதமென்னும் ஏதுப்போலி: 'நெருப்புச்சூடில்லது, திரவியமாதலின்' எனவரும். ஈண்டு சூடின்மை சாத்தியம், அதனபாவமாகிய சூடு துவக்கிந்திரியக்காட்சியான் அறியப்படுதலின் இது பாதிதமாயிற்று. அனுமானமெய்தான் உரைக்கப்பட்டது. எ - று.

தன்னூல். எ - து. பாதிதத்தினிலக்கணங்கூறுகின்றது.

அனைகாந்திகம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதமென்பவற்றைப் பிறழ்ச்சியுடையது, மாறுகொள்வது, மறுதலையுடையது, பேறில்லது, மறுப்புடையது என மொழிபெயர்த்துக் கொள்க.

இவற்றான், பாதிதம் கொள்ளற்பாலதன் அபாவத்தை நிச்சயித்தலானும், சற்பிரதிபக்கம் மறுதலைப்பொருளுணர்விற்குக் கரு

வியாகலானும், அநுமிதிக்கே தடையாவனவாம். ஏனையவை பூரா ய்ச்சிக்குத் தடையாய் இருந்துகொண்டே அநுமிதிக்குத் தடையா வனவாம். அவற்றுள்ளும் பொதுவனைகாந்திகம் பிரபூரணமையின்மை யானும், விருத்தம் ஒருநிலைக்களத்துளதாகலின்மையானும், வியா ப்பியத்தன்மைசித்தம் விசேடணம்தவிர்ந்த வியாத்தியின்மையா னும், சிறப்பனைகாந்திகமும் முடிவுபெறுமையும் வியாத்திக்கண் ஐயந்தோற்றுவித்தலானும், வியாத்தி புணர்விற்குத் தடை. சார்ப சித்தமும் உருவசித்தமும் பக்கதருமத்தன்மைபுணர்விற்குத் தடை யெனத் தெரிந்துகொள்க. செயற்கைபிறழ்ச்சியுணர்வின்வழியா னே வியாத்தியுணர்விற்குத்தடை. தனித்ததனைத் தனிவிப்பதாகிய சித்தசாதனம் பக்கதருமத்தன்மையைக் கெடுத்தலாற் சார்பசித் தத்துள் அடங்கும். தோல்வித்தானத்துளடங்குமென்பர் கவினர்.

*ஒருநிலைக்களத்துளதாகலின்மை ஏதுதனிப்பொருளொடொரு நிலைக்களத்துளதாவதின்மை என விரித்துரைக்க. ஒருநிலைக்களமெ னினுஞ் சமானாதிகரணமெனினும் ஒக்கும். வியாத்தியின்மையான் என வாளாகூறாது விசேடணமமைந்த வியாத்தி என்றது ஏதுதனி பொருளுள்வழி உடனிருப்பினும் அவ்வாறன்றாதல் விசேடணமின் வழி உடனிகழ்ச்சியாவதல்லது வியாத்தியாகாமையான். என் னையோ வியாத்தியாகாமையெனிற் கூறுதும். விசேடணமாவது ஏதுதனிப்பொருளின்றியிராது என்பது. அதமை. விசேடணம் என்றது ஏதுதனிப்பொருளின்றியிராமையினல்லது உடனிகழ் ச்சி யின்றியமையாததாதலெய்தாதென்பது இதனிறுபதிது என் பதபடரிப்பதருணறிக.

*உடனிகழ்ச்சி வியாத்தியாதற்குப்பிறழ்ச்சியின்மையும் பிறழ் ச்சியின்றாதற்கு ஏது தனிப்பொருளின்றியிராமையும் காரணமாவ தாய்ந்துணர்ந்து கடைப்பிடிக்க.



*இதுவிசேடணமாயது மேலும் பெறப்படுமாறு காண்க. இவ் வாற்றானே தனிப்பொருளின்றியிராத ஏது தனிப்பொருளுள்வழி உளதாவது விசேடணமமைந்த வியாத்தி என்பது தெரிந்துகொள்க. உபாதி உள்வழி உடனிகழ்ச்சியிருப்பினும் இன்றியமையாதாவ தின்று, அவ்வழி ஏது தனிப்பொருளின்றியிராத ஏதுவன்மையின் விசேடணம் பெறப்படாது, பிறழ்ச்சிபெறப்படுதலான். எனவே விசேடணமில்வழி, ஏது தனிப்பொருளோடொருங்கிருப்பினும் அவ்வா றன்றாதல் உடனிகழ்ச்சியாவதல்லது வியாத்தியாகாமை அறிக. பாவிகத்துக்காண்க.

*பிறழ்ச்சியுணர்வின்வழியானே செயற்கைவியாத்தியுணர் விற்குத்தடை என்றது உபாதிவியாத்தியுணர்வு உண்டாகாமற் செய் வதாய பிறழ்ச்சியுணர்வைத் தருதலானல்லது நேரேதடையாவ தன்மையான். உபாதியாவது தானுள்வழித் தனிப்பொருளின்கண் ஏது அடங்குவதன்று; அஃதாவது தனிப்பொருளில்லாவிடத்தும் ஏதுவிருக்கும் எனக்காட்டுவதாம்.

*தனித்ததனைத் தனிவிப்பதாகிய சித்தசாதனம் கொள்ளற் பாலதன்மையிற் குற்றமுடைத்து என்பதறிக. தனித்ததனைத் தனிவிப்பதாவது ஒன்றாகத் துணியப்பட்டதனைப் பின்னர் மற் றொன்றாகத் தனிவிப்பது; அல்லதூஉம் தன்றுணியப்பட்ட தொன்றற்கு மாறுகொள்வதைத் தனிவிப்பதாவது என்பது. சித் தசாதனம் இத்தன்மைத்தாதல் [illegible] கிடைக்க சிவஞானபோதச் சிற்றுரை முதலியவற்றினும் இந்நூலிற் பிரமாணியவாதத்தினும் காண்க.

## உவமானப்பிரமாணம்.

உறுபெயர்க் கேர்பொருட் கியைபுண ருணரு
மறிவோப் புமையா னவதோடு புணர்வே.

(இ - ள்.) உவமானம் உவமிதியறிவிற்குக் காரணம். உவமிதி பெயர்க்கும் பெயர்ப்பொருட்குமுள்ள சம்பந்தமறியுமறிவு. அதற்குக் காரணம் ஒப்புமையறிவு. அஃதெங்ஙனமெனின், ஆமா என்னுஞ் சொற்குப் பொருளுணராதான் ஒருவன் 'ஆவினையொக்கும் ஆமா' என ஓராண்மகன் கூறக் கேட்டுக் காட்டகம் புக்கானாக; அவன் கூறிய தொடர்மொழிப்பொருளை நினைந்து ஆவொப்புமையுடைத்த பிண்டத்தைக் கண்ட பின்னர் 'இஃது ஆமா' என்னும் உவமிதியறிவு தோன்றுமென்க. உவமானம் உரைக்கப்பட்டது. ம - ரு.

உவமானம். எ - து. உவமானத்தினிலக்கணங் கூறுகின்றது.

உவமிதி எ - து. உவமிதியிலக்கணங் கூறுகின்றது.

## சத்தப்பிரமாணம்.

௭௦. உரையென் வளவை யுண்மை கூறு
முரியோ னுரைக்க வுறுதொடர் மொழியா
மாற்ற லுடைய பதமொழி பதத்தா
லிப்பொரு ளுணர்த்துக வித்தொ லென்றே
யிறைவன் விருப்ப மென்மனார் புலவர்.

(இ - ள்.) சத்தப்பிரமாணம் ஆப்தன்வாக்கியம். ஆப்தன் உரியோன் என்பன ஒருபொருட்கிளவி. ஆப்தனாவான் உண்மைப் பொருளைக் கூறுவான். வாக்கியம் பதங்களின் கூட்டம்: அஃது



'ஆவைக்கொணர்' என்பனமுதலியவாம். பதமாவது ஆற்றலுடையது. ஆற்றல் 'இப்பதத்தால் இப்பொருளுணர்த்துக' என்னும் இறைவன் சங்கேதம். எ - ம.

சங்கேதம்— இச்சை.

சத்தப்பிரமாணம். எ - து. சத்தப்பிரமாணத்திலக்கணங் கூறுகின்றது.

ஆப்தன். எ - து. ஆப்தன் இன்னான் என்கின்றது.

வாக்கியம். எ - து. வாக்கியமின்னதென்கின்றது.

பதம். எ - து. பதத்தினிலக்கணங் கூறுகின்றது.

ஆற்றல். எ - து. பொருளினைவு நிகழ்தற்கு அநுகூலமாய பதங்கட்கும் பதார்த்தங்கட்குமுளதாயசம்பந்தம் ஆற்றலெனவும் அது வேறுபதார்த்தமெனவும் சைமினிமதநூலார் கூறுப, அதனை மறுத்து ஆற்றலின்னதென்கின்றது. ஆதன் பூதன் முதலியவற்றிற்குப்போலக் குடமுதலிய பதங்கட்கும் சங்கேதமே ஆற்றலாகலின், அது வேறுபதார்த்தமென்பது பொருந்தாதென்பதாம். ஆ முதலிய பதங்கட்குச் சாதியே முன்னர்க் கருதப்படுதலின் பதங்கட்குச் சாதியின்கண்ணே ஆற்றலெனவும், பொருட்பேறின்றி கடாமுத லியவற்றின்கண்ணே நிகழுமெனவும் கூறுவாருமுளர். அதுபொருந்தாது, வியவகாரத்துள் 'ஆவைக்கொணர்' என்றற்றொடக்கத்து முதியோர்வழக்கின்கண் 'ஆவைக்கொணர்' முதலியன பொருளின்கண்ணே நிகழ்வனவாகக் காணப்படுதலின், ஆற்றலும் அப்பொருளின்கண்ணே ஆற்றலென்பதே சாதியடுத்த பொருளின்கண்ணே ஆற்றலென்பதே காண்டலிற் சாதியடுத்த பொருளின்கண்ணே ஆற்றலுணருமாறு முதியோர்வழக் பொருத்தமுடைத்தாகலின். அங்ஙனமன்றே, சொற்பொருளுணர்தல் காரணியப்படும்: அங்ஙனமன்றே, சொற்பொருளுணர்தல் வேட்கையுடையாரொருவன் 'ஆவைக்கொணர்' என முதி

யோன் கூறாத்தொடர்மொழியைக் கேட்டபின்னர், இடைப்பட்ட முதியோன் முயலுந்தொழிலை நோக்கி, ஆவைக்கொணர அதனையுங்கண்டு, இடைப்பட்ட முதியோன் முயலுந்தொழில் நிகழ்தற்குக் காரணமாகிய ஞானம் உடன்பாட்டானும் மறையானுந் தொடர்மொழியாற்றோன்றற்பாலதெனத் தெளிந்து, 'குதிரையைக் கொணா' 'ஆவைக்கட்டு' என்னும் வேறுதொடர்மொழிக்கண் ஞான்றாம்பின்னும் உற்றுநோக்கி, ஆவென்னும் பதத்திற்கு அத்தன்மையமைந்த பிண்டத்தின்கண் ஆற்றல், குதிரையென்னும் பதத்திற்குக் குதிரைத் தன்மையமைந்த பிண்டத்தின்கண் ஆற்றல் எனச் சொற்பொருளுணர்ந்துகொள்ளுமென்க. அங்ஙனமாக, வழக்கமினைத்தும் யாண்டும் காரியப்பொருட்டாகலின், காரியப்பொருட்கே நிகழுந் தொடர்மொழிக்கண்ணே சொற்பொருள் உணரப்படுமன்றி நிகழ்ந்ததன்மேற்றாய தொடர்மொழிக்கட் சொற்பொருளுணர்ச்சி நிகழாதாலெனின்;— அற்றன்று, 'கடலின்கண் முதுகுமெலிப்பெருமுதியுளன்' என்றற்றொடக்கத்து நிகழ்ந்ததன்கண்ணும் வழக்குமுண்மையானும், 'மலர்ந்த தாமரைக்கண் வண்டுளது' என்றற்றொடக்கத்து யாண்டும் உணரப்படும் பதத்தியைச் சார்த்தி வழங்குதலான் நிகழ்ந்ததன்கண்ணும் அன்றி முதலியவற்றின் சொற்பொருளுணர்வு நிகழக் காண்டலானும், என்க.

* அநுகூலமாய சம்பந்தம் என முடிபுசெய்க.

* ஆதன் முதலியவற்றை உதாரணங்காட்டியது பெயர் இக்னையானல்லது சம்பந்தந்தான் இடப்படாமை வெளிப்படையாகத் தோற்றுதற் பொருட்டு என்பது. வழக்காவது ஆட்சி. அஃதாவது சொல்லையெடுத்து வழங்குவது.

* காரியமாவது தொழிலான் முற்றப்பெறுவது. அதனைப்போதிக்கானக.



உ. ஒளிரு மாற்ற லுடைய தாகும்
பாலதன் கிழமை பன்னிலக் கணைதான்
புரைதீ ரவ்வப் பொருளி னுணர்ச்சி
விரும்பா லுரைக்கப் படுவ தொன்றாந்
தன்மை கருதாத் தானிக ழாமை
பெண்ணி லிலக்கணைக் கேது வென்ப,

இலக்கணையும் சத்தித்திற் கனுமனமும் ஆற்றலுடைத்தாகற்பாலதன்சம்பந்தம் இலக்கணை: அது 'கங்கையின்கணிடைச்சேரி' என்பது. ஈண்டுக் கங்கையென்னுஞ் சொற்குப் பொருளாகிய வெள்ளத்தின் சம்பந்தத்தானே கரையென்பது உணரப்படுமாகலின், கரையின்கண்ணும் ஆற்றலுடைத்தென்றல் வேண்டாமையுணர்க. மா முதலிய பதங்கட்காயின் மாமரத்திற்கும் குதிரைக்கும் ஒன்றற்கொன்று சம்பந்தமின்மையின், ஆண்டு வெவ்வேறாற்றல் வேண்டற்பாலனவாம். அவ்விலக்கணை விட்டவிலக்கணையும், விடாதவிலக்கணையும், விட்டுவிடாதவிலக்கணையு மென மூவகைத்து. சொல்லின்பொருட்குத் தொடர்கேட்டுள்ளவிடத்து விட்டவிலக்கணை: அது 'கட்டில் கரைகின்றது' என்பது. சொல்லின்பொருட்குத் தொடர்கேட்டின்மையிடத்து விடாதவிலக்கணை: அது 'குடையினர் செல்கின்றனர்' என்பது. சொற்பொருளின் ஒருதேசத்தை விட்டு ஏகதேசத்திற்குத் தொடர்பொன்றி கூட்டினவிடத்து விட்டுவிடாதவிலக்கணை:- அது 'அது நீயாகின்றாய்' என்பது. 'குன்றம்பாவை' என்றாற்போல உருவகமுதலியனவும், குறிக்கப்படுங்குணத்தின் சம்பந்தத்தான் உணரப்படுதலின், இலக்கணையேயாம். குறிப்பும் ஆற்றல் இலக்கணை என்னுமிவற்றுள் அடங்கும்.

பொருளாற்றலால் உணரப்படுங்குறிப்பு அநுமான முதலியவற்றான் வேறோதற்றுற்பெறப்படுவது. தாத்பரியவுணர்வு சிறுபான்மை இலக்கணைக்குக் காரணம். தாத்பரியம் அவ்வப்பொருளுணர்ச்சி விருப்பான் உச்சரிக்கப்படுந்தன்மை. வெவ்வேறு பொருள்படுதலின், தாத்பரியவுணர்வும் தொடர்மொழிப்பொருளுணர்ச்சிக்குக் காரணம். தாத்பரியத்தை உணர்விப்பது வினா, கரப்பு, இடமுதலியனவெனவுணர்க. "சிதலைப் பெருங்கடல் சேர்த்தான்" என்புழிச் 'சேர்த்தான்' என்பது சொல்லெச்சம். அதனால், சொற்களெல்லாம் பொருளுணர்தற்பொருட்டாகலிற் பொருளுணர்ச் சத்தி சொல்லுருவிக்கலாகாமையிற் பெயர்வெச்சமென்றிலை பொருத்தமுடைத்தெனின்;— அற்றன்று, சொல்லிசேடத்தாற் பெறப்படுவதாய சொற்பொருளுணர்ச்சிய சொல்லுணர்ச்சிக்கேதுவாதலின். அவ்வாறுகொள்ளாக்கால், 'குடம் செயப்படுபொருளொடு கொணர்தல் வினைமுதற்றன்மை' என்றவழிக் 'குடத்தைக்கொணர்ந்தான்" என்றுஞ் சொல்லாற் பெறப்படு முணர்ச்சி சிறத்தல் வேண்டுமென்பது. பங்கயமுதலிய சொற்களின் அவயவாற்றற் காரணமும் பொதுவாற்றல் இருகுறியும் விளக்குதலின், இஃதெ தன்மைய காரணமிருத்தலென்க. வியதயாய்த் தாமரையுணர்வே கிழத்தற்பொருட்டுப் பொதுவாற்றலும் வேண்டப்பட்டது; அல்லாக்கால் குமுத முதலியவற்றையும் பங்கயமென்கொண்டுதலின். பிரபாகரமதத்தவர் மற்றொன்றுரூடு கொண்டு கூட்டுதற்கண் ஆற்றலென்பர். வைசேடிகத்தவர் கொண்டுகூட்டுதல் தொடர்மொழிப்பொருளின்றன்மையாக உணரப்படுதலின், கொண்டு கூட்டுதற்றின்கண்ணே ஆற்றல் சொல்லப்படாதென்பர்.

*கொண்டுகூட்டினளிதும், அந்நுவயத்தளிதும், இசைப்பினளிதும் பொருத்துமென்க.



*பொருளாற்றலென்பது தொடர்மொழிப்பொருள் பிறிதோர்சொற் பொருளைப் பயத்தற்கேதுவாந்தன்மை. அங்ஙனமாதல், ஏலாதோர் முடிவெய்தாதன்மேன். மேலோர்குந்தாவேதமெனத்தகை, எவ்வோர் தமிழ்ப்பொருள் தனிமறையின்கண், "இலமென்றும்" என்னும் அருமைத் திருக்குறளின் அருள்வாக் கென்னை கைவிடுகொள்ளுரை புரையாளர் பரிமேலழகியருரையானும், மெய்த்தமிழ்மேல் செறிபனையடங்க, நூற்றுப் பயனுங்குறிப்பிடத் தெருட்டும், தாப்பனையாவிற்றமிழ் தொல்காப்பியம், "எழுத்தொருட்டு மொழி" என்னுஞ் சூத்திர முதலியவற்றின் சிறுமொழியாலேசூ மொழிக்கு உரையானுமுணர்க. இன்னும் இந்நூலின்கண் அருத்தாபத்தி கூறப்பட்டது. "பொருளால்" என்பதனானுங் காண்க.

*அநுமானத்தாற் பெறப்படும் என்பதனால் அருத்தாபத்தி கூறிற்று என்க. வேறோதற்றான் என்றது பொருளாற்றல், குறிப்பு, இலக்கணை இரண்டனுள்ளும் அடங்குந்தன்மையான். தாத்பரிய உணர்வு - தாத்பரியத்தோற்றம்; தாத்பரியத்தைத் தெரியுமுணர்வு. 'அவ்வப்பொருள், வெவ்வேறு பொருள்' என்றது தெரியுமுணர்வு. பிறழாத பலபொருள் படுமிடத்தல்லது தாத்பரியம் தோன்றாதென்பதறிக. தாத்பரியம் இற்றுவது தமிழ்ப் பொதுமறையின்கண், "நடுக்கமுடையவர்க்கு" என்றதற்றொடர் அருமைத் திருக்குறளின், 'காயல்' 'உண்ணதால்' என்றதற்கு பெருமொழிக்குரையாளரிட்டவுரையானுமுணர்க.

*சொற்பொருளுணர்ச்சிய சொல்லுணர்ச்சிக்கேது என்றது ஒன்றனைத் தெரிக்கும் அதனான் அதன் பெயர் தெரியாவிடத்து அதன் பெயர் கருவிக்கலாகாமையான் என்பது.

*அவயவ ஆற்றலாவது ஓர்சொல் பிரிந்து நின்று உறுப்பாற் பொருள்பயத்தற்றன்மை. பொதுவாற்றலாவது பிரியாது ஒரு சொல்லாய் நின்றே பொருள் பயத்தற் றன்மை.

பிரபாகரர்—குருமதத்தர்.

௭௧. அவாய்நிலை தகுதி யண்மை மூன்றும்
மேவி தொடர்மொழிப் பொருளை யுணர
மேவுங் கருவி யெனவிளம் புவரே.

(இ - ள்) வாக்கியப்பொருளுணர்விற்குக் காரணம் அவாய்நிலையும், தகுதியும், அண்மையுமாம். எ - று.

அவாய்நிலையும் தகுதியும் அண்மையும். எ - து. அவற்றின் ஞானமென்றவாறு.

௭௨. ஒருசொற் றன்னை முடித்தற் குரிய
வுரைதா னில்வழி முடிவுபெறா
நிற்ப தவாய்நிலை நினையுங் காலை
பாதை பொருட்கு வாராமை தகுதி
தெரியி னண்மை சேர்ந்து மொழிக
ளொருதொட ராக வியைய வோதல்.

(இ - ள்.) அவாய்நிலை ஒருபதம் தன்னை முடிப்பதொருபதம் இல்லாதவழி முடிவுபெறாது நிற்றல். தகுதி பொருட்கு பாதையின்மை. அண்மை பதங்களை ஒருதொடராக வியையக் கூறுதல். எ - று.

அவாய்நிலை. எ - து. அவாய்நிலையிலக்கணங்கூறுகின்றது.

தகுதி. எ - து. தகுதியிலக்கணங்கூறுகின்றது.



அண்மை. எ - து. அண்மையிலக்கணங் கூறுகின்றது. சொல்லின்பொருளுணர்ச்சி விரையத் தோன்றுதல் அண்மையென்றவாறு. உச்சரித்தலும், அதனைப் பயப்பிப்பதாகலின், அண்மையெனப்பட்டது.

௭௩. ஒல்லு மவாய்நிலை முதலிய மூன்று
மில்லாத் தொடர்மொழி பெறுவ லாதல்
சொலினின் றென்ப வறிவி லோரே.

(இ - ள்.) அவாய்நிலை முதலிய மூன்றும் இல்லாதவாக்கியம் பிரமாணமன்று. 'குதிரை; ஆன்மகன் யானை' எ - து. அவாய்நிலை யின்மையாற் பிரமாணமன்று. 'தீயானனை' எ - து. தகுதியின்மை யாற்பிரமாணமன்று. 'ஆவைக்கொணர்' என்றன்முதலியன, ஒரு தொடராகக்கூறாது யாமத்துக்கு ஒன்றொன்றாகக் கூறின் அண்மையின்மையால், பிரமாணமன்று. எ - று.

ஆகுதினை. எ - து. அதற்குதாரணங்கூறுகின்றது. 'குடஞ் செயப்படுபொருண்மை தோன்றுதல் வினைமுதற்றன்மை'. எ - து. அவாய்நிலையின்மைக்கு உதாரணமெனக் காண்க.

௭௪. ஒருமறை மொழியென் றுலக மொழியென்
றிருவகை தொடர்மொழி யென்ப திறைவ
னுரியோர்கள் வாய்மொழி யுண்மை யென்ப
தெரியி னல்லன தேறப் படாவே.

(இ - ள்.) இத்தொடர்மொழி வேதவாக்கியம், உலகவாக்கியம் என இருவகைப்படும். வேதவாக்கியம் இறைவன் வாய்மொழியாகலின் எல்லாம்பிரமாணமேயாம். உலகவாக்கியத்தின் உரியோன் வாய்மொழி பிரமாணம், மற்றையது அப்பிரமாணம். எ - று.

வேதவாக்கியம். ய - து. வேதவாக்கியத்துக்கு விசேடங்கூறுகின்றது. வேதம் அநாதியாயுண்மையின் இறைவன் வாக்கியமென்றலெவ்வாறெனின்;—அற்றன்று, வேதம் புருடனாற் செய்யப்பட்டது, வாக்கியத்திரட்சியாயிருத்தலின், பாரதமுதலியவற்றின் வாக்கியம்போலும் எனவறிக. இவ்வனுமானத்திற்குக் கர்த்தாவுண்மை நினைக்கப்படுதல் வேண்டுமாம் பிறவெனின்;—வேதமர் முதலியோரால் மாணாக்கர் பரம்பரையில் வேதத்திற்குக் கர்த்தாவுண்மை நினைக்கப்படுதலின் ஏதுவிறும் வியாபித்தலின், ஆகாதென்க. "அவனிடத்தினின்றும் வேதமுண்டாம் பிறந்தன" என்னுஞ் சுருதியுண்மையும் உணர்க. அற்றேல், 'இஃது அக்கரம்' என முன்னுணர்ந்ததே தெரிதலின் எழுத்துக்களெல்லாம் நித்தியமாதல் பெற்றும், பெறவே, வேதம் அநாதியென்றுற் படுமெனின்;—அற்றன்று, 'காலாந்தரத்திலுங் கண்டிருந்தது' என்னுமுணர்வு எழுத்துக்களை பழுதுக்களெல்லாம் அநித்தமாதல் பெறப்படுதலின். 'இதுவுந்தக்காரம்' என முன்னறிந்து செய்தல் 'இதுவும் அவ்விளக்கொண்டை' என் பதுபோல அநித்தியமுற்றியெனக. எழுத்துக்களே நித்தமென்னக் கொள்ளினும் தொடர்ப்பாடாகக் கோவைப்படும் வாக்கியம் அநித்தமேயாம். ஆதலான், வேதம் இறைவன் வாய்மொழியேயெனக்கொள்க. மனு முதலிய மிருதிகளும் ஒழுக்கமும், வேதத்தை முதனூலாகவுடைமையின், பிரமாணமேயாம். மிருதிக்கு முதனூலாகிய வேதவாக்கியம் இக்காலத்து நுதலாமின்மையின் மிருதிக்கு முதனூலாயுள்ளதொருவாக்கை இறந்ததென்று சொல்லற்பாற்று. இக்காலத்து வழங்கப்படும் வேதவாக்கியம் முதனூலெனக் கோடல் பொருந்தாமையின், என்றும் அனுமித்தறியற்பாலதோர் வேதம் முதனூலாக உண்டெனின்;—அது பொரு



ந்தாது, அவ்வாறுண்டாயினும் எழுத்துக்களின்றொடர்ப்பாட்டினைக்கு பிரமாணமாயின், உணர்த்துதற்குரியபாலென்க. அற்றேல், இப்பதங்கள் நினைப்பிக்கப்படும் பொருட்தொடர்ச்சி முடையன, அவாய்நிலை முதலியவற்றையுடைய சொற்றிரட்சியாதலின், சம்மதமாய வாக்கியம் போலும், என்னும் அனுமானத்தானே யாண்டும் உணர்வு நிகழ்தலிற் சத்தம் வேறு பிரமாணமன்றெனின்;—அற்றன்று, அத்தகைமைக்கு அறிதிதியுணர்விற்கு வேறாய இயைபுமுடைத்தென் பதற்குச் 'சொல்லுணர்கின்றேன்' எனப் பின்னிகழுமுணர்வே சான்றாதல் எவ்வாற்றானும் இன்மையாதலின்.

இனிப் 'பசுவினுற் கூறுகின்ற பசுப்பொருள்' எனக்கண்டவிடத்துச் சொல்லப்படுஞ் சொல்லுக்குரிய பொருளை வேதிருத்தலைக் காணின் இது இயைபுடையதென்று சொல்லப்படுமாதலின், அருத்தாபத்தியும் வேறு பிரமாணமாமோவெனின்;—அற்றன்று, 'தேவதத்தன் இரவுண்பன், பகலுண்ணுதலின்றிப் பருத்திருத்தலின்' என்னும் அனுமானத்தானே இயைபுண்டென்பெறப்படுதலினென்க. 'தூற்றில் ஒப்பதன்' என்னும் உணர்வும் அனுமானமேயாம். 'இங்கு வீடுபேறுண்டு' என்னும் உணர்வும் அதுவாதலினென்க. இங்ஙனம் வேதத்துப் பிரமாணமோ வேறு மாவல் முதலியன, அணைத்தவிய சேட்டையும், சத்தனுமானத்தின் வழியாலே வழங்கிற்கு வரவாதலின், வேறு பிரமாணமன்று. ஆதலால், காண்டல், கருதல், ஒப்புமை, உரையெனக் கூறப்பட்ட நான்குமே பிரமாணமெனக்கொள்க.

சத்தானுமானத்தின் வழியாலே சத்தத்தின் வழியிலே, அனுமானத்தின் வழியாலேயும் எனக் கூறினமையாமே. சத்தம் என்றெழுதிய நுதாணத்தை உடன் கூறியது சேட்டையுஞ் சேர்த்தொருமிக்கப்படும் சொல்லின் வழியால் 'வழங்காதிறுமி

அனுமானத்தின் வழியானே தெளிவாவது எளிதாகப் பெறப்படலான்.

## பிரமாணியவாதம்.

3. விளைந்த வுணர்வு மெய்பொய் யாத
லலங்கியா தானே யணியப் பால
தெனுமா ராய்ச்சியி னெய்பொய்ந் தன்மை
யனுமிதி தானே யணியப் படுமா
லோர்மெய் யாத லுறுதன் ஞான்றே
றும்மிதி தானே யணில தென்று
மவ்விரு திறனு ணாகு முணர்வைக்
கவரு மெல்லாக் கருவியி னுெயங்
கவரப் படுவ தென்பது காணிற்
றன்றாற் றணியப் படுவது தானு
முணரப் படுபொரு ளுறுநேர் கிடைத்துப்
புணர்பயன் படலாற் போக்காற் றணியப்
படுவது பிறிதாற் படுவது றணிய
வென்ப மெய்ம்மை யியல்புணர்ந் தோரே.

இனி ஞானங்கள், அதனையுடையதன்கண் அது விசேடணமாகத் தோன்றுதல் தன்றானுணர்தற்பாலதோ பிறிதானுணர்தற்பாலதோவென்று ஆராயத்தக்கன. எண்டு ஞானம் பிரமாணமாதல் அது பிரமாணமாதலின்மையைக் கவராது எல்லா ஞானங்களையுங் கவருங் கருவியாற் கவரற்பாலதோவன்றோ என்பது ஐயப்பாடு. இவ்விரண்டனுள், முன்னையது தன்றானுணர்தற்பாலதா



தல். பின்னையது பிறிதானுணர்தற்பாலதாதல். அனுமானத்தாற் கவரற்பாலதாகலான் றணிந்ததனைத் றணிதலென்னுங் குற்றம் வாராமல் நீக்குதற்பொருட்டு 'எல்லாம்' என்றும், இவ்வுணர்வு மெய்யநுபவமன்றென்னும் ஞானத்தாற் பிரமாணமாதல் கவரப்படாமையின் ஆண்டுமறுப்புவாராமை நீக்குதற்குப் 'பிரமாணமாதலின்மையைக் கவராது' என்றும், இவ்வுணர்வு மெய்யநுபவமன்றெனப் பின்னிகழுமுணர்வு பிரமாணமாதலைக் கவருங் கருவிக்குப் பிரமாணமாதலின்மையைக் கவராமையின்மையால் தன்றுலாதல் கூறியவாறு. இன்றுய்ப்படியும், அதனைநீக்குதற்கு 'அது' என்றும், கூறியவாறு. அது பிரமாணமாதலின்மையைக் கவராதென்றது பிரமாணமாதற் குச் சார்பாயுள்ளது, பிரமாணமாதலின்மையைக் கவராதென்ற வாறு. எடுத்துக்காட்டிய உதாரணத்தின்கண் முந்திய முயற்சியிற் பிரமாணமாதலின்மையைக் கவர்வது பின்முயற்சியின் அதனைக் கவராமையின், தன்றுலாதல் பெறப்படும். அற்றேல், 'குடத்தைக் காண்கின்றேன்' என்னும் பின்னிகழ்ச்சிக்குக் குடமும் யான் குடத்தன்மையும்போல அவற்றின் சம்பந்தமும் விடயமாகலின் முன்னர்த்தோன் முயற்சி வடிவாகிய சம்பந்தம் ஒப்ப நிகழ்தலின் மெய்யநுபவத்தன்மை யாம் உருவின் விசேடணத்தின் சம்பந்தமே மெய்யநுபவத்தன்மை வாகிய பதார்த்தமாகலிற் பிரமாணமாதல் தன்றாலே உணரப்படு மாலோவெனின்;— அற்றன்று, பிரமாணமாதல் தன்றானுணர்தற் பாலதாயின் புனருணர்வுதோன்றியது மெய்யோ அன்றோவெனப் பயிலாதகாலத்து மெய்யநுபவத்தன்மைக்கண் ஐயப்பாடின்றாதல் வேண்டும், பிரமாணமாதல் பின் முயற்சியாற்றெளியப்படுதலான். முன்னர் ஐயப்பாடின்மை பெறப்படுதலின், தன்றானுணர்தற்பால தாதலின்மையால் பிறிதானுணர்தற்பாலதேயாம்: அங்ஙனமன்றே, முதற்கட்புனருணர்வு தோன்றியபின்னர் முயன்று சென்றுழிப் புனல்கிடைத்ததாயின், முன்னர்த் தோன்றிய புனருணர்வு மெய்

யநுபவம், முயன்றசென்றது பயப்படச்செய்தலின். 'யாதுமெய் யநுபவமன்று அது பயப்படச்செய்யாது, பொய்யநுபவம் போ லும்' என்னுங் கேவலவெதிரேகி யநுமானத்தான் மெய்யநுபவத் தன்மை தெளியப்படும். இரண்டாவது நிகழ்வது முதலிய ஞானங் களின் முன்னைஞானம் திருட்டார்த்தமாதலுண்மையான், அதன் சாதியுடைமையாகிய இலிங்கத்தானே அந்வயவெதிரேகியநுமா னத்தானுந் தெளியப்படும். மெய்யநுபவத் தோற்றத்தின்கட் பிறி தானுதல் குணத்தானுண்டாதற் பாலதாதல். மெய்யநுபவத்திற் குச் சிறந்த காரணம் குணம், பொய்யநுபவத்திற்குச் சிறந்த கார ணம் குற்றம், அவற்றுள், காட்சியுணர்வின்கட் குணம் விசேடணத் தையுடைய விசேடியத்தின் சம்பந்தம், அநுமிதிக்கட்குணம் வியா பகமுடையதன்கண் வியாப்பியமென்னு முணர்வு, உவமிதிக்கட் குணம் மெய்யான ஒப்புமையுணர்வு, சத்தவுணர்வின்கட்குணம் மெய்யான தகுதி முதலியவற்றினுணர்வு என்றுமின்றோரன்ன பிறவும் ஆராய்ந்துணர்ந்துகொள்க. முன்னர்த்தோன்றுகின்ற உரு விற் பிரகாரமின்மை பின்முயற்சியினுணரப்படாமையின், பொய் யநுபவமாதல் பிறிதானுணர்தற் பாலதேயாம். தோற்றத்தின்கட் பிறிதானுதல் பித்தமுதலிய குற்றத்தான் உண்டாதற்பாலதாதல். அற்றேல், பொய்யுணர் வென்பதேயில்லை அனைத்துணர்வும் மெய் யாகலின், இப்பியின்கண் 'இதுவெள்ளி' என்னுமுணர்வான் முயற்சி நிகழக்காண்டலின் மலைவுண்டு என்பது கூடாது. வெள்ளியி னினைவும் முன்னர்த்தோன்றுகின்றதனுணர்வும் என்னும் இரண் டானுமே முயற்சி நிகழ்தல் கூடுமாதலின், முன்னர்த்தோன்றிய தன்கண் வேறுபாடு தோன்றாமையே யாண்டும் முயற்சி பிறப்பித்த லான், 'இது வெள்ளியன்று' என்பது முதலியவற்றின் மிகைப் பாடின்மையான் எனின்;— அற்றன்று, மெய்யாகிய வெள்ளியிட த்து முன்னர்த் தோன்றுகின்றது விசேடியமாகவும் வெள்ளித்தன்



மை விசேடணமாகவும் உடைய ஞானம் முயற்சியைப் பிறப்பிக்கு மென வொப்புக்கோடல் பொருத்தமுடைத்தாகலின், இப்பியின் கண்ணும் வெள்ளியின் விசேடணமாகவே முயற்சியைப் பிறப்பிப்பதாக லின் அடையிசைந்தஞானமே கொள்ளற்பாற்றாகலானென்க.

*ஞானங்கள் ஆராய்ந்தக்கன என வினா முடிபுசெய்க. தோ ன்றுதல் - மனத்தின்கண் நிகழுதல், புலப்படுதல் என்பதாம். அதனை என்றது மெய்யநுபவத்தன்மையை. உடையது என்றது மெய்யநுபவமாகிய ஞானத்தைகள உய்த்துணர்க. மெய்யநுபவத் தன்மை இயல்பாதலும் அதனையுடைய மெய்யநுபவமாகிய ஞா னம் இயல்பியாதலும் அரிது ஞானம் பிரமாணமாதல் கவரற்பால தென இவையும். பிரமாணமாதல் என்பது மேற்கூறிய உண்மை யநுபவத்தொடு இயைபுடைத்தாதலறிக. கவர்தல், விடயமாகக்கோ டல், உணர்த்துதல் என்பன ஒரு பொருண்மேலன. பிரமாணமா தல்; மெய்யநுபவமாதல், பிரமாணியம் என்பன ஒரு பொருட்பன் மொழி.

* ஞானம் பிரமாணமாதலின்மையைக்கவராது, ஞானத்தைக் கவருங்கருவி எல்லாவற்றினாலும், ஞானம் பிரமாணமாதல் கவரற் பாலதோ அன்றோ என்பது ஐயப்பாடு எனப் பெயர்த்துரைத்தல் கொள்க. எல்லாக்கருவியானும் என்பது கவர்தற்குரிய கருவியாதி றானும் என்றவாறு. பிரமாணமாதல் தன்றானுணர்தற் பாலதென் புழி எல்லாம் என்றது ஞானத்தைக் கவருங்கருவி என்றொழியின் தானிச்சுதனைத் துணிதல் என்னுங்குற்றம்வரும் என்றது பிரமாண மாதல் பிறிதானுணரற்பாலதென்னும் பிறர் மதத்தின்கண் பிறி தெனப்படும் அநுமானமும் ஞானத்தைக்கவருங் கருவியாகலான். அக்குற்றம்வரின் தன்றானுணரற் பாலதென்னார் தன்கோள் இழ க்கப்படும் என்க.

* எல்லாம் எனவே அக்குற்றம் வாராது என்றது பிரமாணமாதல் தன்றலாய்து எனப்படும் பின்னிகழுமுணர்வாற் கவரப்படுவது என்பார்க்கும் அங்ஙனம் கவருங்கால் தடையுண்டாயின் அநுமானத்தாற் கவர்படலது என்பது உட்படாதேயெனினும் தடையில்வழி அப்பின்னிகழுமுணர்வே சாதுமாகலின், ஞானத்தைக்கவருங்கருவி அநுமானமாத்திரமன்று வேறுமாம் என்பது அவ்வெல்லாம் என்பதனுனெய்துகலான்.

* இவ்வுணர்வு மெய்யநுபவமன்று என்பதன்கண், இவ்வுணர்வென்பது முன்னிகழுமுணர்வு எனவும் அதனைக் கவர்தாயமெய்யநுபவமன்று என்பது பின்னிகழுமுணர்வு எனவும் கூறப்படும், நின்றுண்டான பின்னர் மற்றொன்று உண்டாதலின். இவ்வுணர்வென்பது சுட்டு இப்பின்கண் இது வென்னி என்றற்றொடக்கத்தது ஆன்று அஃதாவது தன்றலகுது என்பதன்கண், மறப்பு வரும் என்றது; மெய்யநுபவமன்று என்றும் ஞானத்தாற் கவரப்படும், அஃதாவது தன்றுனே கவரப்படும், இவ்வுணர்வு என்பது பொய்யாதல் பெறப்படுதலின் பிரமாணமாதல் தன்றுற் கவரப்படாமையான்.

* பின்னிகழுமுணர்வு பிரமாணமாதலைக் கவருங்கருவி—என்றது 'மெய்யநுபவமன்று' என்பது பொய்யன்று மெய்யே என உணர்வதாய மூன்றாவது நிகழும் ஞானத்தை என உய்த்துணர்ந்து கொள்க. தன்றலாதல் இன்றாய் முடியும் என்றது பிரமாணமாதலைக் கவர்வதாமே பிரமாணமாதலின்மையையும் கவருதல் கூடாமையான். பிரமாணமாதலைக் கவ்வதுதானே பிரமாணமாதலின்மையையுங்கவருதல் யாண்டைபடுதெனின் மெய்யநுபவமன்று என்றும் இரண்டாவதுஞானம் பொய்யன்று மெய்யே என்றும்



மூன்றாவது நிகழும் ஞானத்தான் மெய்யநுபவமன்று என்பது பிரமாணமாதல் கவரப்படுவதுபோல, இவ்வுணர்வு என்பதாய முதலாவது ஞானம் பொய்யாதலும் அஃதாவது பிரமாணமாதலின்மையுங் கவரப்படுதலானறிக. தன்றலாதலின்று என்றுங் குற்றம் "அது" என்பதனுனீக்கும் என்றது, மேற்போந்தவாற்றுன் மெய்யநுபவமன்று என்பது பிரமாணமாதலைக் கவருங்கருவி பிரமாணமாதலின்மையையுங் கவரினுங் கவரப்படும் பிரமாணமாதலின்மை என்றது பிரமாணமாதற்குச் சார்பாயுள்ளதின் வேறாயதொன்று பிரமாணமாதலின்மையை என்பது, 'அம்மது' என்பதனுற் பெறப்படுதலான். சார்பாயுள்ளது பிரமாணமாதல் என்பது விளைப்பெயர்கொண்டு முடிந்து நிற்கும் ஓர் எழுவாய்த்தொடர். அல்லவுடம் சார்பாயுள்ளதன் பிரமாணமாதல் எனினும் ஆம்.

* "குடத்தை யான் காண்கின்றேன்" என்பதைப்பின்னிகழுமுணர்வுஎன்றது குடமாவது இன்னதெனத் தெரிந்தபின்பல்லது குடத்தை யான் காண்கின்றேன் என்னுமுணர்வு நிகழாமையான் என்பது. மேனுமுனைக்கப்பட்டது.

* 'முயற்சிகெடுவாய சம்பந்தம்' என்றது சம்பந்தம் தன்னை யகப்படுத்து நிற்பதாய முயற்சியாயிலாயல்லது உணரப்படுமாறின்மையான். முயற்சி, வியாபம்; உஷார்ச்சி என்பன ஒரு பொருட்கிளவி எங்க.

*புனலைப்பயிலலாவது தண்ணீரைப் பெற்றுவைத்து அதன் கண்மூழ்கல், அதனைக்குடித்தல் முதலியன செய்வது. முன்னர் - பயிறுவதன்முன்னர். அநுபவத்தன்மை அநுபவமாதற்றன்மை

* அதன் சாதியாயது இரண்டாவது நிகழ்வது முதலியவற்றினும் முன்னையதாயதிலும் ஒப்பநிகழ்வதாய ஓர் பொதுத்தன்மை.

* தோற்றத்தின்கட் பிறிதாதல் என்பது அநுபவத்தன்மை உணருமாறு அற்றாக, அநுபவம் உண்டாமாறு யாங்ஙனமென்றும் கடாவிற்குக் குணத்தானுதல் குற்றத்தானுதல்அல்லது உண்டாகா தென விடைகூறுகின்றது.

* முன்னர்த் தோன்றுகின்ற உரு என்பது இப்பியின்கண் இது வெள்ளி என்றற் றொடக்கத்தது. பிரகாரமின்மை விசேடணத்தின் சம்பந்தமின்மை, அஃதாவது இப்பியின்கண் வெள்ளித் தன்மையின் சம்பந்தமின்மை என்பதாம்.

* உணர்வில்வழிமுயற்சிநிகழாதன்றே; முயற்சிநிகழக்காண்டலின் இப்பியின்கண் இது வெள்ளி என்பது உணர்வாதல் பெறப்படும். அவ்வுணர்வு மெய்யன்றன்றே. ஆகலின் பொய்யுணர்வு என்பதேயில்லை என்றதற்கு மலைவு உண்டெனின் அது கடாதென விரித்துரைத்துக் கொள்க.

*இரண்டானுமே முயற்சிநிகழுமெனின்'இதுவெள்ளியன்று' என்றற்றொடக்கத்தவற்றினும் அவ்விரண்டானு முயற்சி நிகழற்பாற்றாகலின் அவற்றின்கண் மிகைப்படவருமாற் பிறவெனின்:— அற்றன்று, முன்னதின் வேறுபடத்தோன்றாமையும் முயற்சி நிகழ்தற்கோர் காரணமாக் சொல்லப்படலான். அவ்விமிகைப்படுவென்றது முன்னர்த் தோன்றியதன்கண் முயற்சியை நிகழ்த்துவது அதின் வேறுபடத் தோன்றுவதினும் சேறலை என்க.

* மிகைப்பாடின்மையான் 'இரண்டானுமே முயற்சி நிகழ்தல் கூடும் எனவும், கூடுமாகலின் மலைவு உண்டென்பது கூடாது எனின் எனவும் ஒட்டிக்கொண்டுணர்க.



* அடையடுத்தஞானமே அஃதாவது தோன்றுகின்றது விசேடியமாகவும் வெள்ளித்தன்மை விசேடணமாகவும் உடையஞானமே கோடற்பாற்று என்றது மெய்யநுபவத்தின்கண் அடையடுத்தஞானமே முயற்சியை நிகழ்த்துவது என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாகலானும்,முயற்சியைப் பிறப்பித்தற்கு வெள்ளியினினைவு முன்னர்த்தோன்றுகின்றதன் உணர்வு என்றும் இரண்டனொடு முன்னர்த்தோன்றியதன்கண் வேறுபாடு தோன்றாமையும் கூட்டி மூன்றனைக்காரணமாகக் கோடலினும் அடையடுத்தஞானம் ஒன்றனையே கோடல் எளிதாகலானும் என்பது. எனவே பொய்யுணர்வு உண்டென்பது இதனாற்போதரும் பயன் என்க.

* பிரமாணமாதல் தன்னானுணர்தற்பாலது என்பது மீமாஞ்சகர் மதம். பிறிதானுணர்தற்பாலது என்பது நையாயிகர்மதம். பொய்யுணர்வு இல்லையென்பது குருமதம் என உணர்க.

௭௯. தொடர் மொழிப்பொரு ளுணர்ச்சி யென்று
மொழியா னுய வுணர்ச்சிக் கேது
வுரையா முன்னை யுணர்வா மிதுவே.

(இ-ள்.) வாக்கியப் பொருளுணர்ச்சி சத்தத்தாலாய வுணர்ச்சி; அதற்குக் காரணம் சத்தம். இங்ஙனம் மெய்யநுபவம் தெரித்துரைக்கப்பட்டது. எ-று.

௮௰. பொய்யுணர் வதனைப் புகலிற் றருக்க
மையந் திரிவென் றுறு வகைத்தால்.

(இ-ள்.) இனிப் பொய்யநுபவம் ஐயம், திரிவு, தருக்கம் என்னும் வேறுபாட்டான் மூவகைத்து. எ-று.

இனிப் பொய்யனுபவம். இ-து. பொய்யனுபவத்தைப் பகுக்கின்றது. கனவு மானதக் காட்சித் திரிபாதலின், மூவகைமையின் மாறுபாடின்மை யுணர்க.

எள. உறையொரு தன்மை யுடைய தொன்றன்
மாறு பட்டு வருபல தன்மை
யடுத்த வுணர்வே யைய மென்ப.

(இ-ள்.) அவற்றுள், ஐயமாவது ஒரு தருமியின் மாறுபட்ட பலதருமங்களான் விசேடிக்கப்பட்ட வுணர்வு. தருமமெனினும் தன்மையெனினும் ஒக்கும். அது 'குற்றியோ மகனோ' என்பது.

அவற்றுள், ஐயம். எ-து. ஐயவிலக்கணம் கூறுகின்றது. 'புலிவிற்கெண்டை' எனத் திரட்பெற்றியதன்கண் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஒருதருமியின்' என்றும், 'குடத்திரவியம்' என்பது முதலியவற்றின் குடத்தன்மை திரவியத்தன்மை எனப் பலதன்மை உண்மையின் ஆண்டதிவியாத்தி நீக்குதற்கு 'மாறுபட்ட' என்றும், 'ஆடைத்தன்மையின் மாறுபட்ட குடத்தன்மையுடையது' என்பதன்கண் அதிவியாத்தி நீக்குதற்குப் 'பல' என்றும் கூறியவாறு.

எஅ. எனுமதி யில்லதை யிருப்ப தாகத்
துணிதல் திரிவெனச் சொல்லுநர் மென்ப.

(இ-ள்.) திரிவு பித்தைப்பிறிதாயவுணர்வு: அது இப்பியை வெள்ளியென்பது. எ-று.

திரிவு. எ-து. திரிவிலக்கணம் கூறுகின்றது. அஃதில்லாதன்கண் அது விசேடணமாதலுடைமை நிச்சயித்தலென்றவாறு.



எக. மேவிடு நிறைவே யிடைநிறை வென்னச்
சொலுமிரு தன்மை யாதாரத் தேற்றிப்
படுமிடை நிறைவைப் படைத்துரைப் பதனுற்
படாமிரு நிறைவைப் படைத்து மொழிவ
திடார் தருக்க மெனப்படு வதுதான்.

(இ-ள்.) தருக்கம் வியாப்பியத்தை ஆரோபித்தலான் வியாபகத்தை ஆரோபிப்பது: அது 'தீயில்லையாயின் புகையுமில்லையாதல் வேண்டும்' என்பது. எ-று.

தருக்கம். எ-து. தருக்கத்தி னிலக்கணங்கூறுகின்றது. தருக்கம், திரிவினுட்படுமாயினும், பிரமாணத்திற்கு உபகாரமாதலான், வேறு கூறப்பட்டது.

* ஒழுக்காய்ச்சிய இரும்பின்கண் தீயிருப்பினும் அதன்கட் புகையின்மையான், புகையுள்வழியேயல்லது இல்வழியும் தீயிருத்தலின் தீயின் தன்மை வியாபகத்தன்மையும், புகையின் தன்மை வியாப்பியத் தன்மையும் ஆவதூஉம், புகையின்றின்மை தீயில்வழியேயல்லது உள்வழியும் இருத்தலிற் புகையின்மை வியாபகமும் தீயின்றின்மை வியாப்பியமும் ஆவதூஉம் உய்த்துணர்ந்துகொள்க.

* தருக்கம் எனினும், படைத்துமொழிதலெனினும், ஆரோபித்தலெனினும் ஒக்கும். படைத்துமொழிதல் - இலதை உளதாகக் கொண்டு கூறுவது. உளதையிலதாகவைத்துக் கூறுவதென்றுற் படுமிழுக்கென்னையோ வெனின்;—அற்றன்று, ஒன்றனை உளதாகத்தோன்றுவதல்லது இலதாகத்தோன்றுமாற்றின்மையான். படைத்துமொழிதல் அன்னது என்பதனைக் குழவித்திங்க ... தருக்கண்ணி, யழலவிர்சோதி. மருமலர்க் கட்டுள், தருவோடுயர்ந்த வரிய வளவிய லென்றும், விரிசடை மறைமுடி விற்றிருக் தருளும், ...யுணர்கப்

பொருள் "குறையுறக்கிழவனை" என்றும் அருமைத்திருச் சூத்திரத்து, உரைவரை மாண்பினை யுயிர்த்துயர்காட்டிப், பொருவினற்கீரர் புகன்றருளுரையிற் கூறியவாற்றுணர்க. இவ்வாறு ஆரோபித்தலான் விளையும்பயன் காரியகாரணத்தன்மைகட்குக் கேடுவரும் எனக் காட்டி மேற்கோளை வலியுறுத்துவது என்க.

௮0. மெய்பொய் யென்ன மேவுறு பலத்தா
லியைப்பு நினைவு மிரண்டா மென்ப.

(இ - ள்.) நினைவு மெய், பொய் எனவிருவகைத்து. மெய்யுறு பயத்தாற்றோன்றிய நினைவு மெய். பொய்யுறுபயத்தாற்றோன்றிய நினைவு பொய். புத்தி உரைக்கப்பட்டது. எ - று.

நினைவு. எ-து. நினைவைப் பகுக்கின்றது.

௮௧. யாவர்க்கு நன்றென் றுணரப்
படுவ தின்பம் பகருங் காலே.

(இ - ள்.) சுகம் எல்லார்க்கும் நலமாக உணரப்படுவது. எ-று.

சுகம். எ-து. இன்பத்தினிலக்கணங் கூறுகின்றது. 'இன்பமுடையேன்யான்' என்றற்றொடக்கத்துப் பின்னிகழ்ச்சியாற் குறித்துணரப்படும் இன்பத்தன்மை முதலியவனவுடைமையே இலக்கணமென்க. நன்றெக்கூறியது சொரூபமென்க.

* நன்றெக்கூறியதாவது, சுகம் எல்லார்க்கும் நலமாக உணரப்படுவது என்பது. பின்னிகழ்ச்சி - பின்றுணர்ச்சி.

௮௨. தெரியி னெவர்க்குந் தீங்கெனத் துணர
வருவது துன்ப மாண்புணர் வார்ப்பெறின்.

(இ - ள்.) துக்கம் எல்லார்க்குந்தீயதாக உணரப்படுவது. எ-று.



௮௩. விருப்ப மிச்சை வெறுப்பு வெகுளி.

(இ - ள்.) வெளிப்படை.

௮௪. முயற்சி தொழிலென மொழியப் படுமால்.

(இ - ள்.) வெளிப்படை.

௮௫. அறம்விதி வினையா லாவ தென்ப.

(இ - ள்.) தர்மம் விதிவினையாற் றோன்றியது. எ - று.

௮௬. மறமறு வினையான் வருவ தெனப்படும்.

(இ - ள்.) அதர்மம் விலக்குவினையாற் றோன்றியது. எ - று.

௮௭. உணர்ச்சி முதலா வுறுமோ ரெட்டு
முணர்வுடைப் பொருட்கே யுரிய குணங்கண்
முயற்சி விருப்ப முணர்ச்சி மூன்று
முயிர்க்கு நிலையில வோரிறை தனக்குப்
பெயரா நிலையுள பெற்றி யோரின்.

(இ - ள்.) புத்திமுதலிய எட்டும் ஆன்மாவிற்கே யுரியகுணங்கள். புத்தி, இச்சை, முயற்சி என்னும் மூன்றும் நித்தமும் அநித்தமுமாம். இறைவனுடைய புத்திமுதலிய மூன்றும் நித்தம், உயிருடைய புத்தி முதலிய மூன்றும் அநித்தம். எ-று.

௮௮. வேகம் பாவனை மேனிலை பெறுத்தல்
வாசனை மூன்று வகைய தாகும்.

(இ - ள்.) வாசனை வேகமும், பாவனையும், நிலைபெறுத்தலும் என மூவகைத்து. எ - று.

வாசனை. எ-து. வாசனையைப் பகுக்கின்றது. வாசனைத்தன்மையாகிய சாதியுடைமை வாசனையிலக்கணம்.

௮௯. மண்முத னான்கின் மனத்தின் வேக
மென்னப் படுவ திருக்கு மென்ப.

(இ-ள்.) அவற்றுள், வேகம் பிருதிவிமுதலிய நான்கினும் மனத்தினும் இருக்கும். எ-று.

அவற்றுள், வேகம். எ-து. வேகத்திற்குப் பற்றுக்கோடு கூறுகின்றது. வேகத்தன்மைச் சாதியுடையது வேகம்.

* வேகம் என்னும் வாசனை, தருக்குமுதலியவற்றின்கட் சமற்றுதை விட்டபின்னர்க் கிடப்பது காண்க.

௯௦. அநுபவ மதனின் காரிய மாகி
நினைவிற் கேது வாய்நிற் பதுதா
னுணர்பா வனைமற் றுயிர்க்கல திலையால்.

(இ-ள்.) பாவனை அநுபவத்தின் காரியமாய் நினைவிற்குக் காரணமாயுள்ளது. அது ஆன்மாவின்மாத்திரம் இருக்கும். எ-று.

பாவனை. எ-து. பாவனையிலக்கணம் கூறுகின்றது. ஆன்மாமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'அநுபவத்தின்காரியம்' என்றும், அநுபவத்தின் அழிவுபாட்டின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நினைவிற்குக்காரணம்' என்றுங்கூறியவாறு. நினைவே பாவனைக்குக் காரணமென்பர் நவீனர்.

௯௧. நிலைபெறுத் துவதுதா னேர்வே றியல்பா
யலரச் செயப்பட் டதுவே மீட்டு



மந்நிலை யாக்குவ ததுபாய் முன்னு
மண்ணின் கண்ணே மருவு மாற்பிற.

(இ-ள்.) நிலைபெறுத்துவது வேறுதன்மையாகச் செய்யப்பட்டது மீட்டும் அந்நிலையையாக்குவது. அது பாய்முதலிய பிருதிவியினிருக்கும். குணம் கூறப்பட்டது. எ-று.

நிலைபெறுத்துவது. எ-து. நிலைபெறுத்துவதினிலக்கணம் கூறுகின்றது. எண்ணல்முதலிய எட்டும், நிமித்தத்தானாகிய செறிம்பியும், வேகமும், நிலைபெறுத்துவதையும் பொதுக்குணங்கள். ஏனை உருவமுதலியன விசேடகுணங்கள். திரவியத்தைப் பகுக்கும் உபாதியிரண்டின் ஒருநிலைக்களத்து இராதசாதியுடைமை விசேடகுணத்தன்மை.

* உபாதியிரண்டின் ஒருநிலைக்களம் என்றது ஒன்றற்கல்லது இரண்டற்கு நிலைக்களமாகாதோர் குணத்தை என்க. ஒருநிலைக்களம் சமானாதிகரணம். பரியாயத்தாற்காண்க. திரவியத்தைப் பகுக்கும் உபாதி மண்டன்மை, நீரின்றன்மை என்றற்றொடக்கத்தன. உபாதியிரண்டன் ஒருநிலைக்களம் - இருமை, வேற்றுமை, சையோகமுதலியன என்றவாறு.

## ௫. கருமம்.

௯௨. சாற்றிற் கருமந் தான்புடை பெயர்ச்சி
தீக்கா னீர்மண் சீர்மனத் துறுமால்.

(இ-ள்.) கருமம் புடைபெயர்ச்சி. கருமமைந்தனுள், எழும்பல் மேலிடத்திற் கூடுதற்கேது. வீழ்தல் கீழிடத்திற் கூடுதற்கேது. வளைதல் உடல்சேர்ந்து கூடுதற்கேது. நிமிர்தல் நிமிர்ந்து கூடுதற்

சேது. வினையனைத்தும் நடத்தலென்பதும். அது பிருதிவிமுதலிய நான்கிலும் மனத்திலும் இருக்கும். எ - று.

கருமம். எ - து. கருமத்தினிலக்கணங் கூறுகின்றது.

கருமமைந்தனுள். எ-து. எழும்பல் முதலியவற்றின் காரியவேறுபாடு கூறுகின்றது. உடலின்கண் மிகவுக்கோணலை உண்டாக்குவது வளைதல். செவ்விதாகலை உண்டாக்குவது நிமிர்தல்.

## ௪. சாமானியம்.

௬௩. ஒன்று பொதுமை தொழில்குணம் பொருளே
மூன்றினு முளதாய் முரணறி விலதா
யொன்றாய்ப் பலவற் றொருங்கு சேரா
வுடைய தன்மை போதிரு வகைய
தடைமெய் மேல தல்லன கீழே.

(இ - ள்.) இனிச் சாமானியமாவது நித்தமாய், ஒன்றாய், பலவற்றின் ஒருங்கு சேர்தலையுடைய சாதி. அதுமேல், கீழ் என இருவகைத்து. திரவியம், குணம், கன்மம் என்னும் மூன்றினுமிருக்கும். இருவகையுள், உண்மைத்தன்மை மேற்சாதி, திரவியத்தன்மைமுதலியன கீழ்ச்சாதி. எ - று.

இனிச்சாமானியம். எ - து. சாமானியத்தினிலக்கணங் கூறுகின்றது. சையோகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நித்தம்' என்றும், பரமாணுவின் பரிமாணமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குப், 'பலவற்றின்' என்றும், கூறியவாறு. ஒருங்குசேர்தல் சமவேதமாதலென்பதாம். ஆகவே, அபாவமுதலியவற்றின் அதிவியாத்தியின்மையுணர்க.



*பலவற்றின் எனவே அதிவியாத்தி நீங்கும் என்றது பரமாணுவின்கண் பரிமாணமுதலியன ஒவ்வொன்றும் ஒன்றினிருப்பது ஒன்றினின்றி வெவ்வேறுபடுவனவாதலான். அபாவமுதலியவற்றின்கண் அதிவியாத்தியின்று எனிற்று அபாவம் பலவற்றின்கணிருப்பினும் சமவாய சம்பந்தத்தான் இருப்பதன்றாகலான் என்பது.

## ௫. விசேடம்.

௬௪. மாணிலைப் பொருடா மன்கா யிரீர்
நான்கி னணுவு நபோவான் முதலா
மைந்து மான வழிவில் பொருளா
நேரவை வெவ்வே றாகி நிற்ற
றெரிப்பன சிறப்புச் சேர்ந்தவற் றாமே.

(இ - ள்.) இனி விசேடம் நித்தப்பொருள்களின் இருப்பனவாய், அவை வெவ்வேறாய் நிற்றலைத் தெரிப்பனவாம். நித்தப்பொருள்களாவன பிருதிவிமுதலிய நான்கின் பரமாணுக்களும் ஆகாயமுதலிய வைந்துமெனவுணர்க. எ - று.

இனிவிசேடம். எ - து. விசேடத்தினிலக்கணங் கூறுகின்றது.

## ௬. சமவாயம்.

௬௫. நீக்கமின்றி நிற்பன வற்றி
னொட்டிப் பிறப்பின் றான்றுங் கிழமை
யொற்றுமை யென்ப வுறுவன நீங்கா
திரண்டனு ளொன்றாங் கேய்பிறி தொன்றை
யொருவறப் பற்றி யுறுமவை யொன்று

முதல்சினை குணங்குணி மூள்வினை வினைமுதல்
பொதுமை யுருவ நிலைமை சிறப்பாம்.

(இ - ள்.) இனிச்சமவாயமாவது நித்தமாகியசம்பந்தம். அது நீக்கமின்றி இருப்பனவற்றின்கணிருக்கும். யாவை இரண்டனுள் ஒன்று மற்றொன்றனைப் பற்றியேயிருக்கும் அவை நீக்கமின்றி இருப்பன. அவைசினையும் முதலும், குணமும் குணியும், வினையும் வினைமுதலும், சாதியும் வடிவும், விசேடமும் நித்தியப்பொருளும் என்பன. எ - று.

இனிச்சமவாயம். எ - து. சமவாயத்தினிலக்கணங் கூறுகின்றது. சையோகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நித்தம்' என்றும், ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'சம்பந்தம்' என்றும், கூறியவாறு.

யாவை. எ - து. நீக்கமின்றியிருத்தலினிலக்கணங் கூறுகின்றது. 'கரியகுடம்' என்னும் அடைபடுத்துணர்வு, விசேடண விசேடியங்கட்கு உளதாகிய சம்பந்தத்தை விடயமாகவுடையது, அடைபடுத்த உணர்வாகலின், குழையன் என்றுமுணர்வுபோலும் என்னும் அனுமானத்தால், சமவாயம் உண்மை பெறப்பட்டது.

சினையும் முதலும். எ - து. திரவிய சமவாயி காரணம் சினை, அதனால் உண்டாகற்பாலதாய திரவியம் முதலெனக்கொள்க.

## ஏ. அபாவம்.

கசு. முன்னரின் மையினை மொழியிற் றோற்ற
மின்றி யழிவை யெய்வ தாகி
யுறுகா ரியத்திற் குளதாம் முன்னே.



(இ - ள்.) அபாவம் நான்கனுள், முன்னபாவம் தோற்றமின்றி நாசமுடையது: அது காரியத்தோற்றத்திற்கு முன்னுள்ளது. எ-று.

முன்னபாவம். எ - து. முன்னபாவத்தினிலக்கணங் கூறுகின்றது. ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாசமுடையது' என்றும், குடமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'தோற்றமின்றி' என்றும், கூறியவாறு. முன்னபாவம், தன்னெதிர்மறைப்பொருளின் சமவாயி காரணத்தின்கண் இருந்து, எதிர்மறைப்பொருளைத் தோற்றுவிப்பதாய், 'தோன்றும்' என்னும் வழக்கிற்கு ஏதுவாயதாம்.

கஎ. சாற்றொன் றழியச் சார்பி லின்மை
தோற்ற முடைத்தாய் ஆன்றழி வின்றி
யுறுகா ரியத்திற் குள்ளது பின்னே.

(இ - ள்.) அழிவுபாட்டபாவம் தோற்றமுடைத்தாய், நாசமின்றியிருப்பது: அது காரியத்தோற்றத்தின் பின்னுள்ளது. எ-று.

அழிவுபாட்டபாவம். எ-து. அழிவுபாட்டபாவத்தினிலக்கணங் கூறுகின்றது. குடமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாசமின்றி' என்றும், ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'தோற்றமுடைத்தாய்' என்றும், கூறியவாறு. அழிவுபாட்டபாவம், தன்னெதிர்மறையாற்றோன்றி, எதிர்மறையின் சமவாயி காரணத்தின் இருப்பதாய், 'அழிந்தது' என்னும் வழக்கிற்கு ஏதுவாவதாம்.

கஅ. முழுது மின்மை முக்கா லத்து
முளதா யோவி தென்றியை பதனுள்

வரைந்து கொளப்படு மன்றி யெதிர்மறைத்
தன்மை யுடைத்தாய்ச் சார்வது தானும்.

(இ-ள்.) முழுதுமபாவம் முக்காலத்திலும் உளதாய சமுசர்க்கத்தான்வரைந்து கொள்ளப்படும் எதிர்மறைத்தன்மையை யுடையது: அது 'நிலத்திற்குடமில்லை' என்பதாம். எ - று.

*உளதாய என்னும் பெயரெச்சம் உடையது என்னுங் குறிப்பு வினைப்பெயர்கொண்டது.

முழுதுமபாவம். எ - து. முழுதுமபாவத்தினிலக்கணங்கூறுகின்றது. ஒன்றினொன்றபாவத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'சமுசர்க்கத்தான் வரைந்துகொள்ளப்படும்' என்பதும், அழிவுபாட்டபாவம் முன்னபாவங்களின் அதிவியாத்தி நீக்குதற்கு 'முக்காலத்திலும் உளதாய' என்பதும் கூறியவாறு.

* சமுசர்க்காபாவம் என்றது காரணப்பெயராய் நின்றது, அல்ல இயைபின்மைக்கிய விசேடணம் அமைந்து நின்றது எனவு ணர்க.

*சமுசர்க்கத்தான் வரைந்துகொள்ளப்படும் என்றது எதிர்மறைத்தன்மை சமுசர்க்கத்தான்வரைந்து கொள்ளப்படுதலாவது அதனானுண்டாகற்பாலதாய அபாவமுண்டா மாறின்மையான். வரைந்துகொளப்படுவதன் அபாவத்தை வரைந்துகொளப்படும் என்றது உபசாரவழக்கு. உபசாரம் என்பது ஒன்றன் இயல்பை மற்றொன்றன்மேல் வைத்துக்கூறுவது.

௬௪. அதுவது வாத லதன்வடி வென்ப
ததனான் வரைந்த பொருளை யாங்கே



யெதிர்மறை யாக வெய்து மின்மை
பிறிதவ தாகா தெனுமது மதுதா
னொன்றினொன் றின்மை யென்றிசி னோரே.

(இ-ள்.) ஒன்றினொன்றபாவம் அதன் வடிவான்வரைந்த பொருளைப் பிரதியோகியாகவுடைய இன்மை: அது 'குடம் ஆடையன்று' என்பது. எ - று.

*அதுதன்வடிவான்வரைந்த - பிறிதொன்றாகாத என்றபடி.

ஒன்றினொன்றபாவம். எ - து. ஒன்றினொன்றபாவத்தினிலக்கணங்கூறுகின்றது. எதிர்மறைப்பொருளொன்றேயுடைய முழுதுமபாவமும் ஒன்றினொன்றபாவமும், எதிர்மறைத்தன்மையை வரைந்துகொள்ளும் ஆரோபிதலான் உளதாய சமுசர்க்க வேறுபாட்டால், பலவகையாம். அங்ஙனமாமாறு, 'சாத்தனை குறியும், குழையுடைய சாத்தனிலன்' என்னுமுணர்ச்சினிகழ் தலான் அடையமைந்தவபாவம், 'ஒன்றுளதாயினும் இரண்டி ல்லை' என்னுமுணர்ச்சியான் இரண்டன் றன்மையான் வரைந்து கொள்ளப்பட்டவபாவம், சையோகசம்பந்தத்தாற் குட...ய நிலத்தர் சமவாயி சம்பந்தத்தாற் குடமில்லை என்னுமபாவம் பலவாய் விரிதல் காண்க. குடமுடையநிலத்து வெவ்வேறு வரைப்பட்ட குடங்களின்மையின், குடத்தன்மையான் வரைந்து கொள்ளப்படும் பிரதியோகியையுடைய பொதுவபாவம் வேறெனக்கொள்க. ஒன்றினொன்றபாவமும் இவ்வாறே காண்க. 'குடம் ஆடையில்லை' என வேற்றுத்தன்மையான் வரைந்துகொள்ளப்படும் தன்மையான் வரைந்துகொள்ளப்பட்டதவபாவம் நிலைக்களத்துளதாய தன்மையான் வரைந்துகொள்ளப்பட்டவபா வம் வேறு கொளற்பாற்றன்று, ஆடையிற் குடத்தன்மை இல்லை வெனக்கொள்ளின், கேவ வென்பதே அதன்பொருளாகலின்.

லாக்ஷவபியாம். காலவிசேடத்திறுணரப்படும் அபாவம்முழுதுமபாவமே, வேறன்றென்க. குடமில்லாதநிலத்துக் குடங்கொணர்ந்தழி முழுதுமபாவம் வேறிடத்துச் சேறலில்லாவழியும் உணர்ச்சி நிகழாமையின், குடங்கொண்டு போயபின்னர் உணர்ச்சிநிகழ்தலின், நிலத்திற்குங் குடத்திற்கும் உள்ள சையோகத்தின் முன்னபாவமும் அழிவுபாட்டபாவமும் முழுதுமபாவ உணர்ச்சியை நிலைபெறுத்துவதெனக் கொள்ளற்பாற்று. அதாஅன்றி குடமுடைய நிலத்து அதன்சையோகத்தின் முன்னபாவமும் அழிவுபாட்டபாவமும் இன்மையின் முழுதுமபாவத்திறுணர்ச்சி நிகழாதெனவும், குடங்கொண்டுபோயபின் அதன்சையோகத்தின் அழிவுபாட்டபாவமும் குடங்கொணர்தற்குமுன்னர் அதன்சையோகத்தின் முன்னபாவமும் உண்மையின் அவ்விரண்டிடத்தும் அதனுணர்ச்சி நிகழ்வதெனவும் கொள்க. வெறுநிலக்கணமாதலானே 'இல்லை' என்னும் வழக்கம் நிகழ்தல் கூடுமாகலின், அபாவம் வேறுபதார்த்தமன்றென்பது குரும்பம். அதுபொருந்தாது, அபாவங்கொள்ளாக்கால் 'வெறிது இன்னது' எனப்பொருள் கூறமாட்டாமையின். இல்லதன் அபாவமாவது பாவமேவேறன்று, வேறெனக் கொள்ளின் வரம்பின்றியேபோமாகலின். அழிவுபாட்டின் முன்னபாவமும் முன்னபாவத்தின் அழிவும் தத்தம் எதிர்மறைப்பொருளே, வேறல்லவெனக்கொள்க. இல்லதனபாவம் வேறென்றே, மூன்றுமபாவம் மூன்றிய அபாவமாகலின், வரம்பின்றியேபோமாறில்லை என்பர் கவினர்.

* ஆரோபித்தல்—படைத்துமொழிதல். மேலுமுரைக்கப்பட்டது. குழையுடைய சாத்தனிலன் என்றொழியாது சாத்தனுருவிலுமன் மேலே ஒட்டிக்கூறியது இலன்என்னுமபாவம் இயல்பாகுவதன்று ஆரோபித்தலானதாயதொன்று எனத்தெரிவித்தற்பொருட்டு என்க. பிறவுமிவ்வாறேகொள்க. ஒட்டிக்கூறுங்கால் அபாவம்



ஆரோபத்தாலுளது என்பது எய்துமாதின்றும். ஆதலே எதிர்மறை ஒன்றேயாகத் தானும் ஒன்றாகற்பாலதாய அபாவம் பலவாதற்குக் காரணம் ஆரோபித்தல் என்பது எய்தப்படாமையறிக என்பது. பாயிரத்துக்காண்க.

* பொதுவபாவம் என்றது வெவ்வேறுவகைப்பட்ட குடங்கள் எல்லாவற்றின்கண்ணும் ஒப்புநிற்றலாற் பொதுவெனப்படும் குடத்தன்மையுடைய உரைத்து கொள்ளப்பட்ட பிரதியோகியையுடையதா[illegible] வேறியம்பது ஆவன்னதாயதோர் குடத்தின் அபாவத்தின் வேறு என்றவாறு. வேற்றுநிலக்கணத்துளதாயதன்மையான் [illegible]தெரிக்கப்பட்டதன் [illegible] தன்மையடிவு எனப்படுவதென[illegible]. கேவலான்வயியாம் என்றது குடத்தன்மையான் ஆடைமைக்கு சொல்லப்படுதல், ஆடையிலும் அஃதொ[illegible]மையான் [illegible] இல்லையானும் அவ்வபாவம் யான்டுமுளதாவ[illegible]. இல்லையென்னும் வழக்கம் எனவே வழக்கம் என்பது [illegible]. சொல்லே எடுத்தாளுவது என்பதெய்துவதறிக.

* வேறெனவே—பாவமன்றென.

௪00. இறைநாயன் பொருட்டொரு சொல்லா முறையா
லைந்துவ்வறு முன்னே யடங்குவ வைதா
[illegible] ஒழிப்பு பதாதா செய்யுநா பின்னிதே.

(இ - ள்.) எல்லாப்பதார்த்தங்களும் முறையானே கூறியவற்றுள் அடங்குதலின், பதப்பொருள்கள் ஏழென்பது பெற்றும். எ-று.

4. அளவை யளக்கற் பால னைதய
மொளிர்பயன் காட்டே யுடைய தளவென்
றுடன்பாட் டதுபடைப் புறப்புத் தானிவு

மெய்ம்மை புணர்தல் வேட்கை யோன்கதை
யெனுங் கருவி யிரண்டி னதன்கண்
வெல்லும் வேட்கை யுள்ளோன் கதைசெறு
தன்கோள் நிலைபெறுத் தாது பிறன்கோட்
களைதன் மாத்திர முடிவுடைக் கதைதா
னேர்தரு மேதுப் போலி தன்னே
யொருகருத் துட்கொண் டுரைத்த மொழிக்குப்
படைத்து வேறு பொருள்கொடு பழித்தல்
போலி விடையே புகல்வார் தோல்வி
யேதுறுத் கேது வொருநா
லியம்பும் பெயர்ப்பொருள் விரிபட் டன்றே.

5\. ஓர்கதை யென்ப துணையிற் கூறு
வார்பல ருடைத்தாய் வருமிறு விடைகள்
பயக்குந் தொடர்மொழிக் கோவைப் பாடே.

6\. ஆதி யிரா றளக்கும் பாலி
னாயிர முடம்பே யுறுபொறி பொருளொடு
பெயருள முணர்வே பேறா மதனொடு
விகாரி யுகர்வே வினிவே குற்றந்
துன்பம் விடெனச் சொலப்படும் விடு
மீண்டுந் தோன்ற மேவோர் துன்பர்
தருமுன் னின்மை சார்ந்தொருங் குறுத
துன்பத் தழிவே யுணல்விடு வினிதே.



பல்லாப்பதார்த்தங்களும் ஈ - து. பிரமாணம், பிரமேயம், ஸம்சயம், பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுப்போலி, சலம், சாதி, தோல்வித்தானம் என்பவற்றின் உண்மையறிவால் வீடடைதல் உளதாமென நியாயநூலிற் பதினாறுபதார்த்தங்கூறுதலான், அவற்றுள் ஒன்றேனும் விடாதொழிக்கப்படாவிதத்து ஈண்டு கூறுகின்றது. எல்லாப் பதார்த்தங்களும் எழுவகையுள் அடங்குமென்றவாறு. ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவர்க்கம், எனப்பிரமேயம் பன்னிருவகைத்து. பிரமேயம் பிரமாணத்தால் அளக்கற்பாலதென்றவாறு. பிரவிருத்தி தன்மாதன்மங்கள். தோடம் விருப்பு வெறுப்பு மயக்கங்கள். விருப்பு காமம். வெறுப்பு வெகுளி. மயக்கம் சரீரமுதலியவற்றை ஆன்மாவெனமருளுதல். பிரேத்தியபாவம் சாக்காடு. பலம் போகம். அபவர்க்கம் வீடுபேறு. அது தன்னிலேக்கணுள்ளதாகிய துன்பத்தின் முன்னபாவத்தோடு ஒருங்குநில்லாத துன்பத்தினழிவு. பிரயோசனம் சுகமும், துக்கமின்மையும். திருட்டாந்தம் அடுக்களைமுதலியன. சித்தாந்தம் பிரமாணமுடையதென உடன்பட்டது. நிர்ணயம் நிச்சயித்தல்; அது பிரமாணத்திற்குப்பயன். வாதம் உண்மைபுணர்தல் வேட்கையோன்கதை. செற்பம் சாதனமிரண்டினுள் வெல்லும்வேட்கையுடையோன்கதை. விதண்டை தன் கோட்பாட்டை நிலைபெறுத்தாது பிறன் கோட்பாட்டைப் பழிப்பதுமாத்திர முடிவு பெறுமுடைய கதை. கதையாவது கூறுவார்பலரையுடைத்தாய்ச் சொல்லப்படும் விடைகளைப் பயக்கும் தொடர்மொழியின் கோவைப்பாடு. சலம் ஒருகருத்துப் பற்றிக்கூறிய மொழிக்கு வேறுபொருள் படைத்திட்டுக்கொண்டு பழித்தல். சாதிபோலியுத்தரம். அது பொதுவியல்பு, வேற்றியல்பு,

உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்ச்சுரை, பழித்துரை, விகற்பம், சாத்தியம், அடைவு. அடையாமை, பிரசங்கம், வேறிருட்டாந்தம், உற்பத்தியின்மை, ...ம், பிரகரணம், ஏதுவின்மை, அருத்தாபத்தி, விசேடமின்மை, உபலத்தி, அநுபலத்தி, நித்தம், அநித்தம், காரியம், சமமாதல்என்க. தோல்வித்தானம் வாதம்செய்வோர் தோல்வியுறுதற்கேது. அவைமேற்கோளழிவு, வேறுமேற்கோள், மேற்கோள்மாறுபாடு, மேற்கோள்விடுதல், வேற்றேது, வேற்றுப்பொருள், பொருளின்மை, பொருளுணரப்படாமை, பொருட்பேறின்மை, காலம்பெறாமை, குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியதுகூறல், பிறர்கூற்றின்மை, அறியாமை, மறக்கப்படாதமதத்தையுடன்பட்டுக்கூறல், உடன்படற்பாலதனையொழிதல், உடன்படற்பாலதல்லதனையுடன்படுதல், சித்தாந்தப்போலி, ஏதுப்போலி என்பனவாம். ஏனையவை வெளிப்படை.

அற்றேல், பதார்த்தம் ஏழென்றதென்னை? ...குலத்தின்னொருப்பேர்நியமமியும் நடையுண்டாயிற்று பிறவாமைகாண்டலின் ஆற்றல் வேறுபதார்த்தமாமேலவெனின்;—அற்றன்று, வடையினபாவம் காரியமெனப்படுதற்குக் காரணமாகலான் ஆற்றலுடன்பாடன்மையின், காரணமாதற்றன்மையே ஆற்றலென்னும்பதார்த்தமாகலினென்க. அற்றாயினும், சாம்பர்முதலியவற்றுள்ளே விண்கலமுதலியவற்றிற் றூய்மைபிறத்தல் காண்டலின், சத்தியென்னும் ஆற்றல்கொள்ளற்பாற்றெனின்;—அற்றன்று, தூய்மையென்னும் பதார்த்தமாவது சாம்பர்முதலியனகூடுங்காலத்து ஒருங்குநிற்பதாகிய தீண்டற்பாலதல்லதனைத் தீண்டலாகிய வாலாமையை எதிர்மறையாகவுடைய அபாவமெல்லாவற்றுள்ளும் உடனிகழும் சாம்பர்முதலியவற்றின் அழிவுபாடேயாகலின். உடையபொருண்மையும் வேறு பதார்த்தமன்று, வேண்டியவாறே வைப்பதற்குரியோ



ருடைய பொருண்மையென்னும் பதார்த்தமாகலின். உடைய பொருண்மையை வரைந்துகொள்வது ஏற்றல் விலைகொடுத்தல் முதலியவற்றாற் கொள்ளப்படுந்தன்மை.

* ஆற்றல் என்பது ஒருபிரப்பிக்குந் தன்மை பதார்த்தமாவது அழிவுபாடே எனவும் ...கிய வாலாமை எனவும் விபாக்கு முடிபுசெய்க. உடைய பொருண்மை உடைய பொருளாதற்றன்மை. அது பொருண்மை என வரையறுத்தின் வேறுபட்ட பொருள்படத் தோன்றுமன்றிக... பாயிரத்துட் காண்க.

## விதிவாதம்.

7. மொழியின் விதிதான் முயற்சிவிளைக்கும்
வினையின்த் தோற்றுவிக்கு முணர்வாற்
கவரப் படுவது காணிய வுதுகண்,
மொழிலான் முற்றுப் பெறுவ தாகி
விழையப் படற்குக் கருவிற் ...மை
யுடைத்தென் றுரைப்பவி தொன்றென்
றுறுதி காண்போ ருரைத்தன ரினிதே.

இனி விதி இன்னதெனத் தெரிக்குமாறு;—விதியாவது முயற்சியைப் பிறப்பிப்பதாகிய இச்சையைத் தோற்றுவிப்பதாகிய உணர்ச்சிக்கு விடயமாயுள்ளது. அவ்விதியை உணர்த்துவது வியங்கோள் விகுதி முதலியன. தொழில் முற்றுப்பெறுதன்கண் முயறல் செல்லாமையின், தொழில் முற்றுப்பெறுமென்னும் உணர்வு முயறலை நிகழ்த்துவது. அற்றேல் நஞ்சுண்டல் முதலியவற்றினும் முயற்சி செல்லற்பாற்றெனின்;—அற்றன்று, காமிய விதிக்கண்

விழையப்படுதற்குக் கருவித்தன்மையாகிய இலிங்கமுடைய தொ
ழில் முற்றுப்பெறுமென்னும் ஞானமும், சித்தவிதிக்கண் விதித்தவ
ந்து நிகழ்பாற்று என்னும் ஞானமும், காமியநைமித்திகத்தின்கண் கிரி
[..]யாதுமின்றென்றும் ஞானமுமே ப்ரவர்த்தகத் தோற்றுவிப்பதா
கலின். குருமதத்தார் விசேடணத்தை[..]யுடையதன் றன்மையின்
நினைவாற் றோன்று ஞானம் உடனிகழுமாதலான், உடனிகழ்ச்சி
யுண்டென்பர். அது பொருந்தாது, தொழிலின் முற்றுப்பெறும்
விழையப்படுவதற்கேதுவை உணருங்காலே இன்றி, காலாந்தர
முயற்சியைப் பிறப்பிக்குமெனக் கருதிக்காட்டலாற் கொள்ளற்
பாற்றாகலின். அற்றேல், சித்தவிதி விழையப்படும் பலத்திற்குக்
கருவியன்மையின், ஆண்டு முயற்சிசெல்லாமை வரப்பெறுமெ
னின்?—அற்றன்று, சித்தவிதிக்கண்ணும் விதித்தன செய்யாமை
யான் வருங்குற்றம் களைதலாதல் பாவக்கேடாதல் பயனெனக்
கொள்ளற்பாற்றாகலின். இதனானே தொழிலதன் முற்றுப்பெறும்
விழையப்படுதற் கேதுவாதற் றன்மையே வியங்கோள் விகுதிப்
பொருளெனக்கொள்க. அற்றேல், "துறக்கம் விழைவோன் சோ
திட்டோமத்தான் வேட்க" என்புழிக் காலவிடையீட்டாற் றுறக்கத்திற்
கேதுவாகிய காரிய நிகழ்ச்சி பு[..]ம் அக்காரியம் வேள்வி
யெனின் அது விரைவக் கெடுவதாகலான் எதிர்காலத்தின்கணிகழ்
கடவதாய துறக்கத்திற்கேதுவாதல் கூடாமையின், அதற்கு இடை
யீட்டுநிலைபெற்ற காரியமாகிய அபூர்வமே விகுதிப்பொரு
ளெனக் கோடற்பாற்று. காரியம் செய்வையான் முற்றுப்பெறும்.
செய்வை செயப்படுபொருளுடைத்தாதலால் 'செயப்படுபொருள்
யாது' என்னும் அவாய்நிலைக்கண் வேட்டல் செயப்படுபொருளாய்
முடிவுபெறும். 'எவனுடைய காரியம்?' என்ன ஏவப்படுவோனவாய்நிலைக்
கண் 'துறக்கம் விழைவோன்' என்னும் பதம் ஏவப்படுவோன் மேற்



றும் முடிவுபெறும். ஏவப்படுவோன் காரியம் புரிசெய்வான். அதி
ருவே சோதிட்டோமமெனப் பெயரிய யாகமாகிய செயப்படுபொ
ருள் துறக்கம் விழைவோனாற் செயற்பாலதென வாக்கியப்பொருள்
முடிவுபெறும். 'இவ்விகுதியர்த்தத்தின் கண்ணதாகலின், [..]
ளும் எரியோம்பு" என்னும் நித்திய விதி வாக்கியத்தினும் அபூர்வ
மே சொற்றுப் பொருளாகக் கொடற்பாற்று. "பிணியின்மை விழை
வோன் மருந்து கொள்க" எனவும், உலகத்தின்கண்ணதாகிய வியங்
கோள் விகுதிக்கு இலக்கணையாற் றொழிற்காரியமே பொருளெனக்
கோடற்பாற்றெனின்;—அற்றன்று, யாகத்தின்கண்ணும் தகுதியின்
றெனத் தெளிவுபெறுமையின் அதுவே விகுதிப்பொருளாக உணர்
த்தபின்னர் உறுதிப்பொருட்டு அவாந்தர வியாபாரமாக அபூர்வத்
கோடற்பாற்றாகலின். "புறந்தெறித்துரைத்தலாற் செ[..]று"
என்றுங் கருவியாறுமைக்க. சொல்லியினறிவுபாடு வியாபார
மன்று. உலகின்கட் சொற்பொருளுணர்ச்சி வலியின் விளைமுற்
றின்கண் வியங்கோளானுணர்த்தப்படுவது செய்கையான் முற்
றுப்பெறும் விழையப்படுதற்கு ஏதுவாய[..]தேயாமாகலின்,
வியங்கோட்டன்மை[..]ருள் விகுதிப்பொருண்மையும், விகுதித்தன்மை
யான் முயற்சிப்பொ[..] அடங்கும். 'அடுகின்றான்' அடு
தலைச் செய்கின்றான், என்றும் பொருடோன்றக் காண்டலானும்,
'யாதுசெய்கின்றான்?' என்னும் கடாவின்கண் 'அடுகின்றான்' என
விடையிறுத்தலானும், முயற்சியே விகுதிக்குப் பொருளாதல் தெளி
யப்பட்டமையானென்பர். "தேர் செல்கின்றது" என்றற்றொடக்
கத்தின் இலக்கணையான் அதற்கு[..]புடைபெயர்ச்சிபொ
ருள். "சாத்தன் அடுகின்றான்" 'சாத்தனால் அரிசி யடப்படுகின்
றது' என்றற்றொடக்கத்தின்கண் விகாரமுதலும் செயப்படுபொரு
ளும் 'விகுதிக்குப் பொருளல்ல, அவற்றின் ஒருமை முதலிய என்

கனே பொருளென்க. வினைமுதலும் செயப்படுபொருளும் அவற்றை ஆக்கித்தலாற் பெறுதும். 'ஊக்கண்டேன்' என்புழித் தெளியக்கண்டேன் எனத் தெளிவின்கட் பகுதிப்பொருள் ஆதல். உபாக்கயின் அவற்றை விளக்குதன்மாத்திரையே, ஏதுவின்கண் ஆதலின் றென்க.

* அர்த்தவ் - முயற்சி நிகழ்த்துதற்கேதுவாகியவாயது செய்யாது விடற்குற்றம் பயப்பதாய விதி கருமமுதலியன என்க. சன்மி விசேடணமாவது, விருப்பம் என்பது. விசேடணமுடையது என்றது விழைவுப்பொருட் சேறலாவதினை. அதன் தன்மையாவது விழைவிற்கும் ஏதுவாதற்கும் உள்ள சம்பந்தம். அச்சம்பந்தத்தின் கண் விழைவுப்பொருட்கு இது கருவியாயுள்ளது என்றுணர்வு. அவ்வினைவாற் சோற்றம் ஞானம், இது செய்யவேண்டுமென்றுணர்வு. அது உடனிகழும் என்பது விதி நுவ்வொன்றினும் முயற்சியைப் பிறப்பிப்பதாய ஞானத்தொடு இது செய்யற்பாலதென்றுணர்வு ஏதுவாகும் என்றவாறு. புத்திசெய்வான் தெரிந்து சொன்னான். இலக்கணத்தையே தெளிந்துபார்த்து, அபூர்வமே விருத்திக்குப் பொருள் என்பார்க்கு உழைத்து சன்மையாகிய விருத்திக்கு அபூர்வங்கோடல் வேண்டப்பட்டதாதலின் அதற்குக் காரணமாதற் சம்பந்தம்பற்றித் தொழிற்காரியம் கோடற்பாலதாதலின். தொழிற்காரியம், தொழிலான் முற்றப்பெறுவது என்க.

* அர்த்தவ் என்பது அபூர்வமுதலியன விருத்திக்குப் பொருளாக என்றவாறு. ஏன்? யாகத்தின்கண்ணும் ஏதுவே விருத்திக்குப் பொருளாகவுணர்த்தபின்னர் அவ்வேள்வி வினையக்கெடுதாகலின் உறுதிப்பொருட்டு அக்காலத்து வியாபாரமாக அபூர்வங்கோடற்பாலதல்லது அபூர்வமும் தொழிற்காரியமும் விருத்திக்குப் பொருளா



காமையின், ஏதுவே விருத்திக்குப் பொருளாமென்பது எளிதினெய்துதலான். அபூர்வமாவது ஓர் வியாபாரம் என்பது. தருதி ஏதுவாதற்றன்மை. உறுதிப்பயனாதற்றன்மையைத் தணிவது.

* கருவியானும் அபூர்வமே வியாபாரமாகக் கோடற்பாற்றுத் துணைக்கண விரித்துரைத்துக்கொள்க; ஏற்றித்தலிற் கெடற்பாலது அபூர்வமேயாதலின். தான் செய்த கற்காரியத்தைத் தானே புகழின் அது கெட்டொழியும் என்பது கருமமுணர்ந்தோர் கொள்கை. வேள்வி ஒழிவுபடாது வியாபாரமென்று அறிவுபட்டிற்கோர் கேடின்மையின்.

* விதிப்பொருண்மையும் முயற்சிப்பொருண்மையும் தனித்தனி இவ்விருதி பலபொருள் ஒருசொல்லின் வேறு; வெவ்வேறு தன்மையான் இருபொருள் பயத்தலான் என்க.

* தெளிப்பட்டமையான் முயற்சிப்பொருண்மையும் உடைத்து என இயையும். வினைமுதலும், செயப்படுபொருளும் விருத்திக்குப் பொருளாக அன்றது அவை பொருளாய சாத்தன் அறிவின்றான், செயப்படுபொருளின்றது என்னுமிடத்து வினைக்கண் சாத்தன் அறிவென்பன சொற்றொடர்ப் பொருளாதலின், விருத்திக்கு முயற்சியென்றி வன்றும்பொருளாதல் செல்லாது. வியங்கோள் விருத்திக்கு ஏதுவாதற்றன்மை பொருள் என்பது நையாயிகர்மதம். அபூர்வமும் தொழிற்காரியமும் பொருள் என்பது குருமதம் என்பது.

பதார்த்த நிலைக்கு விரிவுரை மேலாய ஒழிபியல். "முத்திய பொருளையாதுமே மொழிந்தவை கேட்டல் கேட்ட, சிந்தனை செய்த தன்மை தெளிந்துடலகத்தாறுக, வந்தவாறெய்த வினிட்டை மருவு வென்றானை, மிக்கவர் நடைக்கோர் முத்திபெ யதில் விபக்தி பெறுமே," என்றபடி சொல்லாசிரியர் கேள்வி முதலாயின முத்திக் கொள்கைதிற்கு ஏதுவாதல் கூறுதலின், கேள்வியான் உட

ம்பு முதலியவற்றிற்கு வேறாய ஆன்மா உண்டென்றுணர்த்தியும்
இயங்குதல் உத்தியோகப்பலனைத் [illegible] சித்தியைப் பெறத்
தக்கவதாகலின், சித்தியைப் பிறப்பிப்பதாய பதார்த்தங்களிரு
ன்மை தெரிந்தலாற் கருதியன்றிச் சாதியாரும் முத்தியைப் பயப்
பிப்பதாம். சித்திசெய்தலின்னாச் சகுலோர் வயிரவிக்கப்
படும் யோகவிதியால் தெரிதல் [illegible] அந்தியின்மா உடம்பு
முதலியவற்றிற்கு வேறாய ஆன்மாவைப் [illegible] ஆக
வே, உடம்பு முதலியவற்றை யானென்றுறுத் தெருக்கமே மயக்க
வுணர்வு எனும். அவ்வே, முற்றுமின்மையின், மயக்கமின்றும்.
அவ்வே, அறம் பாவங்கள் [illegible] கிடைக்கும். பிறவி நீக்
கும், [illegible] செய்தலோடு அறம் பாவங்கள் [illegible]
விக்கும். இவ்வே, இறுதித் [illegible] இவர்களை
யாகவுடைய [illegible] பெறுதற்கு ஞானமே. மய
க்கவுணர்வு [illegible] [illegible] சேர்ந்தால், "ஞானத்
தால் விடென்று [illegible] அறி
வல்லவென விலக்குதல் [illegible] கமார்க்கநூ
ற்புத்திர [illegible]
க்க என்று" யுன வீடுபேற்றிற்கு [illegible]
ஞானம் கருமமென்றும் இரண்டும் கூடியே வீடுபேற்றிற்குக் கார
ணமாமெனின் ;—அற்றன்று, [illegible] யோகம்
முதற் செய்து நன்னெறியாய ஞானத்தைக் காட்டியல்லது
மோக்கத்தைச் சேர்ப்பதென்றாம், "[illegible] யோகத்து தெரித்
தியபின் ஞானத்தாலுதவியையுஞ் சேர்க்கை" என்றும், "[illegible]
வேன மருவுமவையாவு ஞானமடைதற்கு [illegible]" என்றும்,
கருமமெனத்தகும் ஞானத்திற்கு [illegible] கூறுதலின், கருமமியற்
றும் ஞானம் வாயிலாக வீடுபேற்றிற்குக் காரணமாவதல்லதுவே